MAKKAL KURAL (Independent National Tamil Daily) 10 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/18-20

(மலர் 48 ✱ சென்னை 22–11–2020 ஞாயிறு மாலை ✱ வெளியூர் 23–11–2020 திங்கள் ✱ இதழ் 79)

Regd. No. TN/CC(S)DN/122/18-20

e-Book

பூக்கடை

சிறுகதைகள் தொகுப்பு

https://makkalkural.net/e-book
https://trinitymirror.net/e-book





## அரசியல், மத பிரச்சார கூட்டங்களுக்கு தடை தொடரும்

# கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு 25–ந் தேதி முதல் அனுமதி

## தமிழக அரசு அறிவிப்பு

**சென்னை, நவ.22–**

**தமிழகத்தில் கொரோனா ஊரடங்கு விதிகள் அமலில் உள்ள நிலையில் வரும் 25–ந் தேதி முதல் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு அனுமதி அளிக்கப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.**

தமிழகத்தில் கொரோனா ஊரடங்கு விதிமுறைகள் அமலில் உள்ள நிலையில் மாதாமாதம் கொஞ்சம் கொஞ்சமாக விதிமுறைகளை அரசு தளர்த்தி வருகிறது.

இந்நிலையில் இம்மாத தொடக்கத்தில் அரசியல், கலாச்சார நிகழ்வுகளை பாதுகாப்பு ஏற்பாட்டுடன் நடத்த அரசு அனுமதி அளித்தது. பின்னர் கொரோனா தாக்கம் அதிகரிக்க கூடுமென்பதால் திரும்ப பெறப்பட்டது.

இந்நிலையில் தற்போது தமிழகத்தில் கலாச்சார நிகழ்ச்சிகளை 50% நபர்களுடன் அல்லது அதிகபட்சமாக 200 பேர் வரை கலந்து கொள்ளுமாறு நடத்தலாம் என அரசு அனுமதி அளித்துள்ளது. நிகழ்ச்சிகளில் பங்கேற்போர் முக கவசம் அணிவது, சமூக இடைவெளியை கடைபிடிப்பதும் அவசியம் என கூறப்பட்டுள்ளது.

அதேசமயம் அரசியல் மத ரீதியான பிரச்சார கூட்டங்களுக்கு தடை தொடரும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## மாமல்லபுரம் – காரைக்கால் இடையே 25–ந்தேதி புயல் கரையை கடக்கும்

### வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, நவ. 22–**

**மாமல்லபுரம்–காரைக்கால் இடையே 25–ந்தேதி புயல் கரையை கடக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

நேற்று உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் தாழ்வு மண்டலமாக மாறும். அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக உருமாறும்.

மேலும் மாமல்லபுரம்–காரைக்கால் இடையே வரும் 25ம் தேதி புயல் கரையை கடக்க வாய்ப்புள்ளது. இதனால் நாளை முதல் தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

இந்த புயல் சின்னம் காரணமாக 24, 25ம் தேதிகளில் கடலோர மாவட்டங்களில் அதீத கனமழை பெய்யக்கூடும் என்றும், இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரைக்காலில் இருந்து 990 கி.மீ தூரத்தில் மையம் கொண்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் திருநெல்வேலியில் 3 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் 25–ந் தேதி எடப்பாடி பழனிசாமி ஆய்வு

**சென்னை, நவ.22–**

**கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட வளர்ச்சி பணிகள் குறித்து வரும் 25–ம் தேதி அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆய்வு மேற்கொள்கிறார்.**

தமிழகத்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, அதிகாரிகளுடன் நேரில் ஆய்வு செய்து வருகிறார்.

அந்த வகையில், இதுவரை 30 மாவட்டங்களுக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி சென்று கலெக்டர்களுடன் ஆலோசனை நடத்தி, உரிய உத்தரவுகளை பிறப்பித்து உள்ளார்.

இந்த நிலையில், வரும் 25ம் தேதி அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி செல்கிறார். அங்குள்ள மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெறும் ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்று கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்கிறார்.

அப்போது விவசாய சங்க பிரதிநிதிகள், சிறு, குறு, நடுத்தர தொழில் கூட்டமைப்பினர், மகளிர் சுயஉதவி குழுவினரையும் சந்தித்து தங்களது குறைகளை கேட்கிறார்.

பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார். பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை எடப்பாடி பழனிசாமி வழங்குகிறார்.



## கட்சியே வேண்டாம்: தேர்தல் ஆணையத்துக்கு விஜய் தந்தை கடிதம்

**சென்னை, நவ. 22**

**‘‘கட்சியே வேண்டாம்’’ என்று தேர்தல் ஆணையத்துக்கு நடிகர் விஜய்யின் தந்தை டைரக்டர் எஸ்.ஏ.சந்திரசேகர் கடிதம் எழுதியுள்ளார்.**

இமெயில் கடிதத்தில், “அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கத்தை கட்சியாக பதிவு செய்ய வேண்டாம்” என வலியுறுத்தியுள்ளார்.

கட்சி ஆரம்பித்த சில நாட்களிலே தலைவர், பொருளாளர் விலகியதாலும், பெயரைப் பயன்படுத்தக் கூடாது என விஜய் எச்சரிக்கை விடுத்ததாலும் இந்த முடிவை எஸ்.ஏ.சந்திரசேகர் எடுக்க நேரிட்டதாக விஜய் ரசிகர்கள் வட்டாரத்தில் கூறப்படுகிறது.

அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கம் என்ற பெயரில் அரசியல் கட்சியை பதிவு செய்ய தேர்தல் ஆணையத்தில் கடந்த 5ஆம் தேதி விண்ணப்பிக்கப்பட்டது. மாநிலத் தலைவர் பதவியில் பத்மநாபனும், பொதுச் செயலாளர் என்ற இடத்தில் விஜய் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரின் பெயரும், பொருளாளர் என்ற இடத்தில் தாயார் ஷோபா பெயரும் இடம்பெற்றிருந்தது. இதனால் விஜய் கட்சி ஆரம்பித்ததாக தகவல் பரவியது.

கட்சிக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என மறுத்த விஜய், தனது பெயர், புகைப்படம் உள்ளிட்டவற்றை பயன்படுத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தார். அடுத்த நாளே தனக்கு தெரியாமல் கட்சி ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறி பொருளாளர் ஷோபா பதவியை ராஜினாமா செய்து, கட்சியிலிருந்து விலகினார். சில நாட்களுக்கு முன்பு தலைவர் பத்மநாபனும் விலகினார் என்பது நினைவிருக்கலாம். இந்த நிலையில் கட்சியே வேண்டாம் என்கிற முடிவுக்கு வந்திருக்கிறார் எஸ்.ஏ.சந்திரசேகர்.



## மும்பை அணிக்கு எதிரான ஆட்டம்

# பெனால்டி வாய்ப்பில் கோல் அடித்து நார்த் ஈஸ்ட் யுனைடெட் அணி வெற்றி



கோவா, நவ. 22–

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் நார்த் ஈஸ்ட் யுனைடெட் அணி பெனால்டி வாய்ப்பில் கோல் அடித்து வெற்றி பெற்றது.

7வது இந்தியன் சூப்பர் லீக் (ஐஎஸ்எல்) கால்பந்து தொடரின் 2ஆவது லீக் ஆட்டம் வாஸ்கோவில் உள்ள திலக் ஸ்டேடியத்தில் நேற்றிரவு நடைபெற்றது. இதில் நார்த் ஈஸ்ட் யுனைடெட் (கவுகாத்தி)மும்பை சிட்டி எப்.சி. அணிகள் மோதின.

மும்பைசிட்டி எப்சி அணி, ஒருமுறை கூட கோப்பையை வென்றதில்லை. இந்த முறை கோப்பையை கைப்பற்ற மும்முரமாக களத்தில் இறங்கியது. அந்த அணியில் 19 புதிய வீரர்கள் எடுக்கப்பட்டுள்ளனர். மேலும் ஸ்பானிஷ் கோச் செர்ஜியோ லோபரா அணியை வழிநடத்தவுள்ளார். கடந்த சீசனில் எஃப்சி கோவா அணியின் வெற்றிக்கு இவர் காரணமாக இருந்த நிலையில் தற்போது மும்பை அணியை சிறப்பாக வழிநடத்தி கோப்பை வெல்ல காரணமாக இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆட்டத்தின் தொடக்கத்திலிருந்து இரு அணிகளும் சிறப்பாக விளையாடினர். தொடக்கம் முதலே மும்பை அணி தாக்குதல் ஆட்டத்தை கடைப்பிடித்தது. 26வது நிமிடத்தில் அந்த அணியின் வீரர் ராய்னியர் பெர்னாண்டஸ் காயம் அடைந்து வெளியேறினார். 43வது நிமிடத்தில் அந்த அணியின் அகமது ஜாஹூ, கவுகாத்தி வீரர் காஸ்சா கமராவின் காலின் பின்பகுதியில் மிதித்தார். இதைத்தொடர்ந்து அகமது ஜாஹூக்கு நடுவர் சிவப்பு அட்டை கொடுத்தார். இதனால் அவர் ஆட்டத்திலிருந்து வெளியேற வேண்டிய காட்டாயம் ஏற்பட்டது மட்டமல்லாமல் அந்த அணியில் 10 வீரர்கள் மட்டுமே தொடர்ந்து விளையாடும் சூழ்நிலையும் உருவானது.

ஆட்டத்தில் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க முடியவில்லை. 2வது பாதி ஆட்டத்தின் தொடக்கத்திலிருந்தே நார்த் ஈஸ்ட் அணியினர் தங்களது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த தொடங்கினர். 48வது நிமிடத்தில் மும்பை அணி வீரர் ரோவ்லின் போர்ஜஸ் கோல் எல்லைக்குள் வைத்து பந்தை கையால் தொட்டார். இதனால் கவுகாத்தி அணிக்கு பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நார்த் ஈஸ்ட் அணி வீரர் குவேஸி அப்பியா சிறப்பாக கோல் அடித்து அந்த அணியின் வெற்றிக்கு வழிவகை செய்தார். அதன் பின்னர் மும்பை அணி வீரர்கள் கோல் அடிக்க கடுமையாக முயன்றனர். ஆனாலும் பலன் அணிக்கவில்லை. இதைத் தொடர்ந்து நார்த் ஈஸ்ட் யுனைடெட் அணி 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.




### இன்றைய ஆட்டம்

3வது லீக் ஆட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு பதோர்டா நேரு ஸ்டேடியத்தில் நடைபெறுகிறது. இதில் எப்.சி.கோவா – பெங்களூரு எப்.சி. அணிகள் மோதுகின்றன.

# காயத்தில் இருந்து முழுமையாக குணமடையவில்லை: ரோகித் சர்மா

பெங்களூரு, நவ.22

காலில் ஏற்பட்ட காயத்தில் இருந்து இன்னும் முழுமையாக குணமடையவில்லை என்று இந்திய வீரர் ரோகித் சர்மா கூறியுள்ளார். இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் ரோகித் சர்மா சமீபத்தில் நடந்த ஐ.பி. எல். கிரிக்கெட் போட்டியில் விளையாடிய போது பின்தொடை தசைநாரில் கிழிவு ஏற்பட்டதால் சில ஆட்டங்களில் விளையாடவில்லை. கடைசி 3 ஆட்டங்களில் பங்கேற்று விளையாடினார். ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் மும்பை அணி கோப்பையை கைப்பற்றியது.

இந்த நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் விளையாடும் இந்திய அணி அறிவிக்கப்பட்டது. இதில் அவரது பெயர் இடம் பெறவில்லை. அதன் பின்னர் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் மட்டும் ரோகித் சர்மா சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஐ.பி.எல். முடிந்ததும் இந்திய வீரர்கள் துபாயில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு சென்றனர். ஆனால் ரோகித் சர்மாவுக்கு உடல்தகுதியை நிரூபிக்க அறிவுறுத்தப்பட்டது.

இந்தநிலையில் தனக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக ரோகித் சர்மா கூறியதாவது:

காயத்தில் இருந்து மீண்டு இன்னும் நன்றாக இருப்பதாக உணர்கிறேன். தசைநாரை வலுப்படுத்துவதற்கான பயிற்சிகளை செய்து வருகிறேன். நீண்ட வடிவிலான (டெஸ்ட்) போட்டிகளில் ஆடுவதற்கு முன்பாக தெளிவான சிந்தனையுடன் இருக்க வேண்டியது அவசியமாகும்.

தொடை தசைநார் பிரச்சினையை முழுமையாக சரி செய்ய இன்னும் கொஞ்சம் உழைக்க வேண்டி உள்ளது. அதனால்தான் ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டிகளில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு செல்லவில்லை. ஏனெனில் 11 நாட்களில் 6 போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவது என்பது சிரமமாகும். அதில் பங்கேற்காததால் கிடைக்கும் 25 நாட்கள் இடைவெளியில் உடல்தகுதியை மேம்படுத்திக்கொண்டால், அதன் பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டில் சிக்கலின்றி விளையாடலாம் என்று நினைத்தேன். அதனால் குறுகிய வடிவிலான போட்டியில் விளையாடவேண்டாம் என்ற முடிவுக்கு வந்தேன்.

இவ்வாறு ரோகித் சர்மா கூறினார்.




# தமிழகம்–ஆந்திரா இடையே 25ந்தேதி முதல் பஸ் போக்குவரத்து

சென்னை, நவ.22–

தமிழகம்–ஆந்திரா இடையே பஸ் போக்குவரத்தை தொடங்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

கொரோனா பரவல் காரணமாக தமிழகத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்கு பஸ்கள் இயக்கப்படாமல் இருந்தன.

ஆந்திரா, கேரளா, கர்நாடகா மாநிலங்களில் கொரோனா அதிக அளவில் இருந்ததால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநில எல்லைகளில் சுகாதாரத்துறை அதிகாரிகள் தீவிர பரிசோதனை முகாம்களை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் வெளி மாநிலங்களுக்கு பஸ்களை இயக்க வேண்டும் என்று அரசுக்கு தொடர்ந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் இருந்தன. இதைத்தொடர்ந்து தமிழகம்–ஆந்திரா இடையே பஸ் போக்குவரத்தை தொடங்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. வருகிற 25ந்தேதி முதல் இரு மாநிலங்களுக்கும் இடையே பயணிக்க 'இ–பாஸ்' தேவை இல்லை என்று தலைமை செயலாளர் சண்முகம் அரசாணை வெளியிட்டுள்ளார்.

தற்போது ஆந்திர மாநிலத்துக்கு பஸ் போக்குவரத்து தொடங்க இருப்பதால் பயணிகள் முன் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




**ஊர் :** **தென்குடித் திட்டை**

**மாவட்டம்** **தஞ்சாவூர்**

**ஸ்தல எண்: 76, கோயில் : வசிஷ்டேசுவரர் கோயில்**

தினமொரு தரம் திட்டைநோக்கி வணங்கிக் கும்பிட்டால்
மன அமைதி; ஆனந்தம் பெறும் :சிவனை நம்பினால்,
குருதோஷம் நீங்கும் ; இங்கு தரிசனம் செய்தால்! கல்விச்
செல்வங்களில் சிறந்திடலாம் சிவன் புண்ணியத்தால்!!

திட்டையிலே இருக்கிறாரு நமச்சிவனார்! அந்தச்
சிவனாரு தான் வசிஷ்டேசுவரர்!!
சப்தஸ்தான தலங்களிலே விளங்குகிறார்! சிவன்
சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார்!!

காவிரியின் தென்கரையில் இருக்கும் தலம்! இது
தேவாரப் பாடல் பெற்று விளங்கும் தலம்!!
சக்கர தீர்த்தம் – சூலதீர்த்தம் – திருத்தத் தலம்! முல்லை
வெண் செண்பகம் – செவ்வந்தி விருட்சத் தலம்!!

பங்குனியில் சுவாமி மீது சூரியஒளி! கதிர்
படும்போது விமானத்தில் சொட்டும் நீர்த்துளி!!
அதிசயமாய் விளங்குகிறது இத்திருக்காட்சி! இங்கு
அம்மையப்பன் தருகிறார் அருளின் மாட்சி!!

ஊழிக்காலம் இரண்டு தலங்கள் மீதி இருந்தது! சீர்
காழியொன்று திட்டை மற்றொன்று என்பதே அது!
அப்போது ஓம் என்று ஒலி ஒலித்தது! அதனால்
எப்போதும் ஞானமேடாய்த் திகழ்கின்றது!!

அம்மன் சன்னிதி விதானத்தில் ராசிக்கட்டம் உண்டு! தன்
கட்டம் கீழே நின்று வணங்க வெற்றி கண் கூடு!!
ராஜகுரு வசிஷ்டருக்கு அருளினார்! சிவன்
அதனாலே வசிஷ்டேசுவரர் என்று ஆனார்!!

மும்மூர்த்திகள் ஞானம் சக்தி அடைந்த ஆலயம்! கால
பைரவரின் பிரம்மஹத்தி மறைந்த குவலயம்!!
அன்னை சுகந்த குந்தாளம்பிகை வாழும் ஒளியாலயம்! இது
அருள்மிகுந்த தென்குடித்திட்டை சிவனாலயம்!!

கவிஞர் எஸ்.ராமகிருஷ்ணன்
சிறுமுகை

# டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி: ஜோகாவிச்சை வீழ்த்தி இறுதி சுற்றுக்கு முன்னேறினார் டொமினிக் தீம்

லண்டன், நவ. 22–

டென்னிஸ் சாம்பியன்ஷிப் அறை இறுதி போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான ஜோகோவிச்சை வீழ்த்தி டொமினிக் தீம் இறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

உலகின் தலைசிறந்த 8 வீரர்கள் பங்கேற்றுள்ள ஏடிபி பைனல்ஸ் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் நோவக் ஜோகோவிச் (செர்பியா), டொமினிக் திம் (ஆஸ்திரியா), ரபெல் நடால் (ஸ்பெயின்), டேனில் மெட்விடேவ் (ரஷியா) ஆகியோர் அரை இறுதி போட்டிக்கு தகுதி பெற்றனர். இதைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற அறை இறுதி போட்டியில் 'நம்பர் ஒன்' வீரரும், 5 முறை சாம்பியனுமான ஜோகோவிச், 3ம் நிலை வீரர் டொமினிக் திம் நேருக்கு நேர் மோதினர்.



### 3வது செட்

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முதல் செட்டில் இருவரும் அபாரமாக ஆடினர். கடைசி கேமில் ஜோகோவிச்சின் சர்வீஸை டொமினிக் தீம் முறியடித்தார். இதன்மூலம் டொமினிக் தீம் 7–5 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றினார். பின்னர் நடைபெற்ற 2வது செட்டின் இறுதியில் இருவரும் 6–6 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தனர். இதையடுத்து 2வது செட் டைபிரேக்கருக்கு சென்றது. இறுதியில் ஜோகோவிச் 7–6 என்ற கணக்கில் 2வது செட்டை கைப்பற்ற ஆட்டம் 3ஆவது செட்டுக்கு சென்றது. 3வது செட்டிலும் இருவரும் அபாரமாக அதுவும் டைபிரேக்கருக்கு சென்றது. அதில் டொமினிக் தீம் 7–6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

ஆண்கள் இரட்டையர் பிரிவு அரையிறுதி போட்டியில் குரோஷியாவின் நிகோலா மெக்டிக் – நெதர்லாந்தின் வெஸ்லே கூல்ஹாப் ஜோடி 6–3, 6–4 என்ற நேர் செட்களில் ஸ்பெயினின் மார்செல் கிரானோலாஸ் – ஹொராஸியோ ஸெபலோஸ் ஜோடியை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேரியது.

# இந்திய கைப்பந்து சம்மேளன தலைவராக தமிழகத்தைச் சேர்ந்த வாசுதேவன் நியமனம்

சென்னை, நவ.22

இந்திய கைப்பந்து சம்மேளன தலைவராக தமிழகத்தை சேர்ந்த வாசுதேவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய கைப்பந்து சம்மேளனத்தின் அவசர செயற்குழு கூட்டம் தலைவர் அச்யுதா சமந்தா தலைமையில் வீடியோ கான்பரன்ஸ் மூலம் நடந்தது. கூட்டத்தில் இந்த ஆண்டுக்கான இந்தியன் கைப்பந்து லீக் போட்டியை நடத்துவது உள்பட பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதில் இந்திய கைப்பந்து சம்மேளனத்தின் புதிய தலைவராக தமிழகத்தை சேர்ந்த எஸ்.வாசுதேவன் நியமனம் செய்யப்பட்டார். துணைத் தலைவராக ராகுல் கேசவன் (மத்தியபிரதேசம்), தலைமை செயல் அதிகாரியாக ராமவ்தார் சிங் ஜாக்கர் (ராஜஸ்தான்) இணை செயலாளர்களாக முன்னாள் சர்வதேச கைப்பந்து வீரரும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அதிகாரியுமான தமிழகத்தை சேர்ந்த ஜெ.நடராஜன், ககனேடு தாஸ் (ஒடிசா) ஆகியோரும், சோசியேட் துணைத்தலைவர்களாக சேகர் போஸ் (ஜார்கண்ட்), இர்வின் சோரெஸ் (கோவா), பிரிஜேஷ் பதாக் (மத்தியபிரதேசம்) ஆகியோர் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இந்தியன் கைப்பந்து லீக் போட்டியை நடத்த ராமவ்தார் சிங் ஜாக்கர் தலைமையில் 14 பேர் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது என்று சம்மேளன பொதுச்செயலாளர் அனில் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

**சிறுகதை**

# கல்யாண மாலை

**கரூர் செல்வராஜ்**

காலை7 மணி.

பெரிய சந்தையில் மொத்தமாக வாங்கிய காய்கறிகளை 2 சின்னச் சின்ன சாக்கு மூட்டைகளில் போட்டு கட்டிக் கொண்டு தனது வண்டியில் வீடு வந்து சேர்ந்தான் காய்கறி வியாபாரி தனபால்.

வீட்டுக்கு வந்ததும் வண்டியை நிறுத்தி காய்கறி மூட்டைகளை பத்திரமாக இறக்கி வைத்தான். இறக்கி வைத்த காய்கறி மூட்டைகளை ஒவ்வொன்றாக எடுத்துச் சென்று வீட்டு வராண்டா பகுதியில் வைத்துவிட்டு குளிக்க சென்றான்.

குளித்து முடித்ததும் சாமி கும்பிட்டுவிட்டு தனது மனைவி தந்த சூடான சுவையான சுக்கு மல்லி காபி குடித்து குடித்து விட்டு காய்கறி மூட்டைகளை பிரித்தான்.

காய்கறி மூட்டையில் கலந்து கிடந்த காய்கறி வகைகளில் கத்தரிக்காய், புடலங்காய், முருங்கைக்காய், வெண்டைக்காய், கேரட், பீட்ரூட், முள்ளங்கி, பெரியவெங்காயம், சின்ன வெங்காயம், தக்காளி என்று தனித்தனியாய் பிரித்தான்.

பிரித்து வைத்த காய்கறிகளை கவனமாக எடுத்துச் சென்று தள்ளு வண்டியில் தனித்தனியாக அடுக்கிக் கொண்டிருந்தான்.

அவனது மனைவி தனலட்சுமி உதவி செய்தாள்.

தராசு, எடைக் கற்கள் ஆகியவற்றையும் எடுத்து வண்டியில் வைத்துக் கொண்டதும் மனைவியிடம் சொல்லிவிட்டு தனது தள்ளு வண்டியை வீட்டிலிருந்து நகர்த்தி தெருக்களை நோக்கி நடந்தான்.

காய்கறி விற்பனையின் போது நடந்து கொண்டே தனது உரத்த குரலில் "காய் ... காய்'' ... கத்தரிக்காய், வெண்டைக்காய், முருங்கைக்காய்" என்று கூவிக் கொண்டு சென்றான்.

வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் தனி வீடுகள் அமைந்த மல்லிகை, முல்லை, தெருக்களில் காய்கறி விற்பனையை முடித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டு செல்வ விநாயகர் கோவில் தெரு பக்கம் வந்தான்.

செல்வ விநாயகர் கோவில் தெருவில் காய்கறிகளை விற்று கொண்டிருந்தபோது தனது நீண்டகால வாடிக்கையாளரும் தன் குடும்பத்தின் மீது அதிகமான அக்கறை கொண்டவருமான சாந்தி அம்மாள் வழக்கம் போல தனக்குப் பிடித்த காய்கறிகளை வாங்கிக்கொண்டு அதற்குரிய பணத்தையும் தந்து விட்டு தனபாலிடம் பேச தொடங்கினாள்.

" தம்பி தனபால் போன வாரம் முழுசும் நீ வரவே இல்லையே ஏன்? உனக்கு உடம்பு சரி இல்லையா?" என்று கேட்டாள்.

அம்மா வயசில் இருக்கிறவரும் அம்மாவைப் போலவே அன்பு காட்டி வருபவருமான சாந்தி அம்மாளிடம் நடந்த உண்மையைச் சொல்ல ஆரம்பித்தான் தனபால் :

" சாந்தி அம்மா! காலேஜ் படிப்பை முடித்துவிட்டு வீட்டில் இருந்த என் சின்ன மகள் சித்ரா மோட்டார் பைக் ரிப்பேர் மெக்கானிக் சுரேசை போனவாரம் திடீர்னு அவளுடைய விருப்பத்தில் பதிவுக் கல்யாணம் செஞ்சுகிட்டா. பெரிய அவமானத்தைத் தேடித் தந்து விட்டாள். அந்த அவமான வேதனையைத் தாங்க முடியவில்லை. வீட்டை விட்டு வெளியே வராமல் முடங்கிக் கிடந்தேன்.

என் பொண்டாட்டி, நெருங்கிய சொந்தக்காரங்களும் எனக்கு ஆறுதல் சொல்லி மன உளைச்சலை கொஞ்சம் கொஞ்சமாக குறைச்சலாக. அதனாலேயே மறுபடியும் காய்கறி வியாபாரத்தை தொடங்கினேன் " என்றான் தனபால்.

தனபால் தன் மனதில் ஏற்பட்ட காயத்திற்கு மருந்து தருவது போல சாந்தி அம்மாள் " தம்பி, தனபால், இந்த காலத்து பொண்ணுங்க குணம் வேறு . அதிலே சில பேரு எந்த காரியத்திலும் வேகம் கொண்டு செயல்படுவார்கள். விவேகத்தோடு செயல்பட மாட்டேங்குறாங்க. கடன் போட்டு வாங்கிய ஸ்கூட்டியில் காலேஜுக்கு படிக்கப் போன உன் சின்ன மகள் ஸ்கூட்டியை சர்வீஸுக்கு கொண்டு போனபோது எல்லாம் பேசி இருப்பார்,, நட்பு பிறகு காதலாக மாறி அது கல்யாணத்தில் முடிஞ்சிருச்சு.' கல்யாண மாலை ' எப்படி என்றாலும் அது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் கடவுள் போடற முடிச்சு. அதில் மனுஷன் எடுக்கிற முடிவு வேறு. கடவுள் எடுக்கிற முடிவே சரி. அது இருக்கட்டும்; மெக்கானிக்ஸ் கடை, சொந்த கடை அதனாலே அவர் உன் சின்ன மகள் சித்ராவை கண்கலங்காமல் காப்பாற்றுவார். நம்பிக்கையோடு இரு " என்றாள்.

அதைக் கேட்டு தனபால் மனம் ஆறுதல் அடைந்தது .

புதிய நம்பிக்கையுடன் 'உரத்த குரலில் "காய் ... காய்'' ... கத்தரிக்காய், வெண்டைக்காய், முருங்கைக்காய்" என்று கூவிக் கொண்டு சென்றான்.



**நல வாழ்வுச் சிந்தனைகள்**

# தேங்காய் தொடர்ந்து சாப்பிட்டால் மாதவிடாய், வெள்ளைபடுதல் பிரச்சினைகள் தீரும்

(குறிப்பு: தகுந்த மருத்துவர் அறிவுரையுடன் பின்பற்றவும்).

மாதவிடாயின் போது ஏற்படும் அதிக உதிரப்போக்குக்கு, தென்னை மரத்தின் வேரிலிருந்து எடுக்கப்படும் சாறு நல்ல மருந்து. வெள்ளை படுதலுக்கு தென்னம் பூ மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் எண்ணெய் தயாரிக்கும்போது கிடைக்கும் புண்ணாக்கோடு கருஞ்சீரகத்தையும் சேர்த்து தோல் நோய்களுக்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

தேங்காய் சிரட்டையில் (வெளிப்புற ஓடு) இருந்து தயாரிக்கப்படும் ஒருவித எண்ணெய் தோல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது.

மூல முளை, ரத்த மூலம் போன்றவற்றுக்கு தென்னங்குருத்திலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது.

**அறிவியல் அறிவோம்!**

# கொரிய மொழியில் 4000 தமிழ் வார்த்தைகள் : உச்சரிப்பும் தமிழ் போலவே இருப்பது ஆச்சரியம்

உலக மொழி ஆராய்ச்சியில் சுவையான புதிய தகவல்கள் உள்ளன.

தென் கொரிய நாட்டுக்காரர் குயூங்குசூ கிம் (KYUNGSOO KIM) தென் கொரியாவின் தூதர். மகாபலிபுர கடற்கரையில் தன் துணைவியாருடன் நடந்து கொண்டிருக்கின்றார்.

பின்னாலிருந்து " அப்பா" என்று குரல் கேட்டது. ஆச்சரியத்துடன் திரும்பிப்பார்க்கிறார்.

ஆச்சரியத்துக்குக் காரணம் அவர் மகனும் மகளும் முன்னால் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

நம் மொழியில் யார் நம்மை அழைக்கிறார்கள்? என்று திரும்பிப்பார்த்த அவர் பார்த்தது ஒரு தமிழ் குடும்பத்தை. கொரிய மொழியில் அப்பா என்றால் தந்தை என்பது போல தமிழிலும் தந்தைக்கு அப்பா தான் என்பதை அறிந்து ஆச்சரியப் பட்டுப் போகிறார்.

சென்னை திரும்பியதும். தன் அலுவலகம் மூலம் கொரிய – தமிழ் மொழிகளுக்கிடையே உள்ள ஒற்றுமைகளைப் பற்றி அறிந்து ஆச்சரியபட்டு அது குறித்த தகவல்களை சேகரிக்கிறார்.

இரு மொழிகளுக்கு இடையே உள்ள ஒற்றுமைகள் குறித்து தமிழ் நாட்டில் பல ஆய்வுகள் செய்யப்பட்டிருப்பதையும் அறிந்து வியக்கிறார். இதில் தன் பங்காக எதாவது செய்ய வேண்டும் என்று கருதி தமிழை முறையாக கற்றுக்கொள்ளத் துவங்குகிறார்.

சென்னையில் இன்று 4000 க்கு மேற்பட்ட கொரியர்கள் வசிக்கிறார்கள். ஹூண்டாய், ஹூன் போன்ற பல நிறுவனங்களில் பணிபுரிபவர்களுடன் அவர்களது குடும்பங்கள்.

கொரிய மொழியில் பல தமிழ் வார்த்தைகள் இருப்பதையும் அது தமிழில் பேசப்படுவது போலவே உச்சரிக்கப்படுவதை முதலில் சொன்னவர்கள் பிரெஞ்ச் பாதிரியார்கள்.

இரண்டு நாடுகளிலும் பணிபுரிந்த பாதிரியார்கள் கண்டுபிடித்த விஷயம் இது. அன்று முதல் ஆய்வுகள் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

ஹவாய் பல்கலைக்கழகத்தின் “கொரிய மொழி மையம்” இதுகுறித்து பெரிய அளவில் ஆய்வுகள் நடத்தி கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறது. இவர்கள் ஆய்வின் படி கிட்டத்தட்ட கொரிய மொழியில் 4000 தமிழ் வார்த்தைகள் இருக்கின்றன. பல வார்த்தைகளின் பொருளும் அதேதான் மட்டுமில்லை ஒலிக்கும் பாணியும் உச்சரிப்பும் கூட தமிழ் போலவே இருப்பது தான் ஆச்சரியம்.

இரு நாடுகளுக்குமிடையே உள்ள உறவு முதல் நூற்றாண்டில் துவங்கியிருக்கிறது. சூரோ என்ற அரசன் கார்க் என்ற பகுதியை ஆண்டுவந்தார். கார்க் என்ற சொல்லுக்கு பண்டைய தமிழில் மீன் என்று பொருள். அந்த மன்னரின் கொடியில் மீன் சின்னம். இருக்கிறது. அவரும் அன்றைய பாண்டிய(வேளநாடு) மன்னர் ஆயியும் நல்ல நண்பர்கள். அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தமிழ் பெண்ணை கார்க் நாட்டின் இளவரசர் திருமணம் செய்துகொண்டதால், வணிகம், அரசுப்பணிகளில், படைகளில் நிர்வாகத்தில் தமிழர்கள் இணைந்திருக்கிறார்கள்.

பின்னாளில் சூரிரத்னா என்ற அந்தப் பெண் நாட்டின் அரசியாகியிருக்கிறார். இன்றும் அவரது சமாதி

கிம்ஹே என்ற கொரிய நகரில் இந்த விபரங்கள் பதிக்கப்பட்ட கற்பலகையுடன் இருக்கிறது.

கொரியா நாட்டில்

சொல்லா என்பது ஒரு மாவட்டத்தின் பெயர் இது சோழ என்ற சொல்லின் திரிந்த வடிவம் என்று கருதப்படுகிறது.

இது போன்ற பல விஷயங்களை ஆய்ந்து நிறைய எழுதியிருக்கிறார்கள் என். கண்ணன், ஒரிஸாபாலு, நாகராஜன் போன்ற வரலாற்று ஆய்வாளர்கள்.

## தென்காசி வடக்கு மாவட்ட மண்டலப் பொறுப்பாளராக கடம்பூர் ராஜூ நியமனம்: எடப்பாடி – ஓ.பி.எஸ். அறிவிப்பு

சென்னை, நவ.22–

**தென்காசி வடக்கு மாவட்ட மண்டலப் பொறுப்பாளராக கடம்பூர் ராஜூவை நியமித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் அறிவித்துள்ளனர்.**

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதல்வருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முதல்வருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள முக்கிய அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

சட்டமன்றப் பொதுத் தேர்தல் பணிகளையும், கழகப் பணிகளையும் விரைவுபடுத்தும் வகையில், ஏற்கனவே அறிவிக்கப்பட்டு உள்ள மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் சில மாற்றம் செய்யப்படுகிறது.

மண்டலப் பொறுப்பாளரான அமைச்சர் ஆர்.பி. உதயகுமாருக்கு மதுரை புறநகர் மேற்கு, தேனி, ராமநாத புரம், திருநெல்வேலி, தென்காசி தெற்கு ஆகிய மாவட்டங்கள் ஒதுக்கப்படுகிறது. மண்டலப் பொறுப்பாளரான அமைச்சர் கடம்பூர் சி.ராஜூவுக்கு தென்காசி வடக்கு (கடையநல்லூர், சங்கரன் கோவில், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிகள்) மாவட்டம் ஒதுக்கப்படுகிறது.

இத்தகவலை அண்ணா தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியுள்ளது.

## இந்தியாவில் கொரோனா பாதிப்பு 91 லட்சத்தை நெருங்குகிறது

புதுடெல்லி, நவ.22–

**இந்தியாவில் கொரோனா பாதிப்பு 90 லட்சத்து 95 ஆயிரமாக உள்ளது.**

இது குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 45 ஆயிரத்து 209 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் இதுவரை கொரோனா பாதிப்பு 90 லட்சத்து 95 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியோர் எண்ணிக்கை 85 லட்சத்து 21 ஆயிரத்து 217 ஆக உயர்ந்துள்ளது. தற்போது சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 4 லட்சத்து 40 ஆயிரத்து 962 ஆக அதிகரித்துள்ளது. தொடர்ந்து 12வது நாளாக, கரோனாவில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 5 லட்சத்துக்கும் கீழ் குறைந்துள்ளது.

கொரோனா தொற்றால் மேலும் 501 பேர் உயிரிழந்தனர். ஒட்டுமொத்த உயிரிழப்பு ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 227ஆக அதிகரித்துள்ளது. கரோனாவில் உயிரிழப்பு 1.46 சதவீதமாகக் குறைந்துள்ளது.

ஐசிஎம்ஆர் அறிக்கையின்படி, இதுவரை நாட்டில் 13.07 கோடி மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. இதில் நேற்று மட்டும் 10 லட்சத்து 75 ஆயிரத்து 326மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.

## 7.5 சதவிகித உள்ஒதுக்கீட்டில் 'சீட்' கிடைத்த

# அரசு பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ கல்வி கட்டணம், விடுதி கட்டணம் அரசே செலுத்தும்

## முதலமைச்சர் எடப்பாடி அறிவிப்பு

## 'அரசின் உதவி கிடைக்கும் என தெரிந்து ஸ்டாலின் அரசியல் நாடகம் நடத்தினார்'

சென்னை, நவ.22–

**7.5 சதவிகித உள்ஒதுக்கீட்டின் மூலம் மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்த அரசு பள்ளி மாணவர்களின் கல்வி கட்டணம் மற்றும் விடுதி கட்டணங்களை அரசே நேரடியாக கல்லூரியில் செலுத்தும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

இதுகுறித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

அம்மாவின் அரசு, அரசுப்பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப்படிப்பில் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டிற்கான வரலாற்று சிறப்பு மிக்க ஒரு சட்டத்தை இயற்றியது. அதன்படி, இவ்வாண்டே, மொத்தம் 313 எம்.பி.பி.எஸ். இடங்களிலும், 92 பல் மருத்துவ இடங்களிலும், அரசுப் பள்ளி மாணவர்கள் சேர்க்கைக்கு கலந்தாய்வு நடைபெற்று, மாணவர்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரசுப் பள்ளிகள், மாநகராட்சி பள்ளிகள், நகராட்சி பள்ளிகள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீர்மரபினப் பள்ளிகள், வனத்துறை பள்ளிகள் ஆகிய மாணவர்களின் ஏழ்மை நிலை மற்றும் பொருளாதார சூழ்நிலையினை கருத்திற்கொண்டு, அவர்களுக்கு கல்வி கட்டணம் மற்றும் இதர செலவினங்களால் சுமை ஏதும் ஏற்படா வண்ணம், இச்செலவினங்களை வழங்குவதற்காக போஸ்ட் மேட்ரிக் கல்வி உதவித் தொகை மற்றும் இதர கல்வி உதவித் தொகை திட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்த உரிய உத்தரவினை பிறப்பித்துள்ளேன்" என கடந்த 18.11.2020 அன்று 7.5 சதவீத இட ஒதுக்கீடு அடிப்படையில் எம்.பி.பி.எஸ் படிப்பிற்கான சேர்க்கை ஆணை வழங்கும் விழாவில் நான் அறிவித்தேன்.

### கட்டணத்தை அரசே செலுத்தும்

கலந்தாய்வில், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்கப்பெற்றுள்ள மாணாக்கர்கள், கல்விக் கட்டணத்தை செலுத்துவதில் உள்ள சிரமத்தினை தவிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இதனை நான்அறிவித்தேன்.

மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பல்மருத்துவ கல்லூரிகளில் சேர ஆணை பெற்றுள்ள அனைத்து அரசுப் பள்ளி மாணாக்கர்களின் கல்விக் கட்டணத்தை உதவித்தொகை அனுமதி வரும் வரை காத்திராமல், உடனடியாக செலுத்தும் விதமாக, தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தில் ஒரு சுழல் நிதியை உருவாக்க நான் உத்தரவிட்டுள்ளேன். அந்நிதியில் இருந்து மாணாக்கர்களுக்கான கல்வி, விடுதி கட்டணங்கள் போன்றவற்றை அம்மாவின் அரசே நேரடியாக கல்லூரி நிர்வாகத்திற்கு செலுத்தும்.

### ஸ்டாலின் அரசியல் நாடகம்

அரசு பள்ளிகளில் பயின்ற ஏழை எளிய மாணவர்களுக்கு சம வாய்ப்பு அளித்து அவர்களின் மருத்துவர் ஆகும் கனவினை நனவாக்கி, சமநீதியை நிலைநாட்டி, வரலாற்று சாதனை படைத்த அம்மாவின் அரசு, நான் 18.11.2020 அன்றே அறிவித்தவாறு, அம்மாணாக்கர்களின் கல்வி மற்றும் விடுதி செலவுகளையும் ஏற்று, அவர்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதை அனைவரும் அறிவர்.

இவர்களுக்கு அரசின் உதவி முழுமையாக கிடைக்கும் என தெரிந்த பின்பும், தி.மு.க. உதவுவதாக தெரிவித்திருப்பது ஒரு அரசியல் நாடகமே என்பதை மக்கள் நன்கு அறிவர்.


இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.



அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமியை தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு உறுப்பினராகவும்; திண்டுக்கல் கிழக்கு, விருதுநகர் கிழக்கு, விருதுநகர் மேற்கு ஆகிய மாவட்டங்களுக்கு மண்டலப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ள, கழக அமைப்புச் செயலாளரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான நத்தம் இரா. விசுவநாதன் நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார்.

# தமிழகத்தில் ரெம்டெசிவிர் மருந்து தொடர்ந்து பயன்படுத்தப்படும்

## சுகாதாரத்துறை அறிவிப்பு




சென்னை, நவ. 22–

**கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க தமிழகத்தில் தொடர்ந்து ரெம்டெசிவிர் மருந்துகள் பயன்படுத்தப்படும் என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.**

தமிழகத்தில் இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கமான சிகிச்சைகள் மட்டுமல்லாது விலை உயர்ந்த மருந்துகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ரெம்டெசிவிர், எனாக்ஸபெரின், டோசிலிசுமேப் போன்ற மருந்துகள் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இந்த நிலையில் கொரோனாவை குணப்படுத்துவதில் எதிர்பார்த்த பலனை ரெம்டெசிவிர் அளிக்கவில்லை என்று உலகசுகாதார அமைப்பு அறிவித்தது. அதுமட்டுமல்லாது, சிகிச்சை பட்டியலில் இருந்து அந்த மருந்தையும் நீக்கியது.

தமிழகத்தைப் பொறுத்தவரை, சிகிச்சைக்காக பல்லாயிரக்கணக்கான ரெம்டெசிவிர் மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழலில், இங்கு அந்த மருந்து பயன்படுத்தப்படுமா என்று தமிழக சுகாதாரத் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது:–

ரெம்டெசிவிர் பலன் அளிக்கவில்லை என்று ஓர் ஆய்வின் முடிவை மட்டும் அடிப்படையாக வைத்து அதனைப் பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேவேளையில், அந்த மருந்தை தடை செய்யவோ, கட்டுப்பாடு விதிக்கவோ இல்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை, கொரோனாவிலிருந்து நோயாளிகள் மீள ரெம்டெசிவிர் மருந்து நல்ல பலனை கொடுத்துள்ளது. அதனால், தமிழகத்தில் அந்த மருந்து தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# தமிழகத்தில் இதுவரை 7.43 லட்சம் பேர் குணமடைந்தனர்

சென்னை, நவ.22

**தமிழகத்தில் இதுவரை 7 லட்சத்து 43 ஆயிரத்து 838 பேர் கொரோனாவிலிருந்து மீண்டுள்ளனர்.**

தமிழகத்தில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று 1,010 ஆண்கள், 653 பெண்கள் என மொத்தம் 1,663 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. சென்னையில் 486 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் இதுவரை 7 லட்சத்து 68 ஆயிரத்து 340 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் ஆண்கள் 4,64,227 பேர். பெண்கள் 3,04,080 பேர். மூன்றாம் பாலினத்தவர் 33 பேர் அடங்குவர்.

கொரோனாவுக்கு அரசு மருத்துவமனையில் 11 பேரும், தனியார் மருத்துவமனையில் 7 பேரும் என 18 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளனர். இதுவரையில் தமிழகத்தில் 11 ஆயிரத்து 586 பேர் கொரோனா நோய் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதுவரை சென்னையில் மொத்தம் 3,808 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா பாதிப்பில் இருந்து நேற்று 2 ஆயிரத்து 133 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பினர். அரியலூர், பெரம்பலூர், ராமநாதபுரம், தென்காசி, தேனி ஆகிய 5 மாவட்டங்களில் 50க்கும் குறைவானவர்களே கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுவரை 7 லட்சத்து 43 ஆயிரத்து 838 பேர் கொரோனாவிலிருந்து மீண்டுள்ளனர். தமிழகத்தில் 67 அரசு ஆய்வகங்கள், 150 தனியார் ஆய்வகங்கள் என 217 ஆய்வகங்களில் இதுவரை 1 கோடியே 11 லட்சத்து 84 ஆயிரத்து 919 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. நேற்று புதிதாக 68 ஆயிரத்து 479 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பீகாரில் 3 மாவோயிஸ்ட்கள் சுட்டுக் கொலை

பாட்னா, நவ.22–

**பீகார் மாநிலத்தில் இன்று காலை அதிரடிப்படையினருடன் நடந்த மோதலில் 3 மாவோயிஸ்ட்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் மண்டலத் தளபதியும் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.**

கயா மாவட்ட தலைநகரில் இருந்து சுமார் 100 கி.மீ தூரத்தில் உள்ள வனப்பகுதியில் மாவோயிஸ்ட்கள் பதுங்கியிருப்பதாக அதிரடிப் படையினருக்கு தகவல் கிடைத்தது. மாவட்டத்தின் பராச்சட்டி வனப்பகுதிக்கு அதிரடிப்படையினர் விரைந்தனர், அப்பகுதியில் தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தினர். வனப்பகுதியில் பதுங்கியிருந்த மாவோயிஸ்ட்கள் அதிரடிப்படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். அதிரடிப்படையினரும் பதிலடி கொடுத்தனர். நள்ளிரவில் தொடங்கிய இந்த துப்பாக்கிச் சண்டை அதிகாலை வரை தொடர்ந்தது. இச்சண்டையின்போது அதிரடிப்படையின் மண்டல தளபதி அலோக் யாதவ் உயிரிழந்தார். துப்பாக்கிச் சண்டை நடைபெற்ற இடத்திலிருந்து தளபதியின் உடலோடு 3 மாவோயிஸ்ட்களின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன.


## படிவம் ஜி

### விருப்ப கருத்துரு வரவேற்பு

(நொடித்து போன மற்றும் திவால் தன்மை (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்மானம் நடைமுறைகள்) விதிகள் 2016–ன் விதி 36ஏ (1)ன் கீழ்)

தொடர்புடைய விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1 | நிறுவன கடனாளர் பெயர் | லீல் எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட் |
| 2 | நிறுவன கடனாளர் இணைத்த தேதி | 10/11/1987 |
| 3 | நிறுவன கடனாளரை இணைத்த/பதிவு செய்த அதிகாரி | ஆர்ஓசி – கான்பூர் |
| 4 | நிறுவன கடனாளரின் கார்ப்பரேட் அடையாள எண்/ குறுகிய பொறுப்பு அடையாள எண் | L29120UP1987PLC091016 |
| 5 | நிறுவன கடனாளரின் பதிவு அலுவலகம் மற்றும் பிரின்ஸ்பல் அலுவலகம் (ஏதேனும் இருப்பின்) முகவரி | பதிவு அலுவலகம்: யூனிட் எண் 8, பிளாக்–ஏ, கக்ராலா பிரதான சாலை, செக்டார் 80, இண்டஸ்ட்ரியல் ஏரியா, பேஸ்–II, நொய்டா கவுதம் புத்தா நகர், U.P. 201305 IN. பிற அலுவலகம்: 159, ஓக்லா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் பேஸ்–III புதுடெல்லி 110020 DL IN |
| 6 | நிறுவன கடனாளரின் திவால் தன்மை துவங்கிய தேதி | 04.03.2020 |
| 7 | விருப்ப கருத்துரு அழைப்பு தேதி | 22.11.2020 |
| 8 | குறியீடு பிரிவு 25(2) (எச்)ன் கீழ் தீர்மான விண்ணப்பதாரர்களுக்கான தகுதி | வ. எண் 21ல் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் ஐடியில் மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் விவரங்களைத் தேடலாம் |
| 9 | பிரிவு 29ஏ–ன் கீழ் பொருந்தும் தகுதியின்மை விதிமுறைகள் | வ. எண் 21ல் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் ஐடியில் மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் விவரங்களைத் தேடலாம் |
| 10 | விருப்ப கருத்துரு பெறப்படும் கடைசி தேதி | 07.12.2020 |
| 11 | வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடும் தேதி | 17.12.2020 |
| 12 | தற்காலிக பட்டியலுக்கு ஆட்சேபம் சமர்ப்பிக்க கடைசி தேதி | 22.12.2020 |
| 13 | வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதி பட்டியல் வெளியிடும் தேதி | 01.01.2021 |
| 14 | வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களுக்கு தகவல் குறிப்பாணை, மதிப்பீடு மேட்ரிக்ஸ் மற்றும் தீர்மான திட்டத்திற்கான கோரிக்கை வெளியீடு தேதி | 21.12.2020 |
| 15 | தீர்மான திட்டம், மதிப்பீடு மேட்ரிக்ஸ், தகவல் குறிப்பாணை மற்றும் மேலும் விவரம் பெறும் முறை | தீர்மானத் திட்டம்/மதிப்பீடு மேட்ரிக்ஸ்/ KYC சரிபார்ப்புக்குப் பிறகு மின்னணு வடிவத்தில் தகவல் குறிப்பாணை, முதலீடு செய்வதற்கான திறன், நிர்வகிக்கும் திறன் மற்றும் IBCன் பிரிவு 29ஏ–ன் கீழ் தகுதி மற்றும் COCலினால் ஏதேனும் ஒப்புதல் அளிக்கப்பட்ட தகுதிக்கான கோரல்களை தீர்மான புரொபஷன் பகிர்ந்து கொள்வார். |
| 16 | தீர்மான திட்டங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி | 21.01.2021 |
| 17 | தீர்மான புரொபஷனலுக்கு தீர்மான திட்டங்களை சமர்ப்பிக்கும் முறை | வரிசை எண் 21ல் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் ஐடிக்கு மின்னணு முறையில் |
| 18 | தீர்மானிக்கும் அதிகாரியின் ஒப்புதலுக்காக தீர்மான திட்டத்தை சமர்ப்பிக்கும் உத்தேச தேதி | கிரிடிட்டார்கள் குழு (COC) உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டவுடன் |
| 19. | தீர்மான புரொபஷனல் பெயர் மற்றும் பதிவு எண். | சிஏ அர்விந்த் மிட்டல் IP Registration No. IBBI/IPA–001/1P–P01358/2018–2019 /12081 |
| 20 | குழுவிடம் பதிவு செய்த தீர்மான புரொபஷனல் பெயர், முகவரி மற்றும் இமெயில் | சிஏ அர்விந்த் மிட்டல் முகவரி: எச். எண் 1900, பேஸ்–3, ஜெ ஜெ காலனி, மதன்பூர் கட்டார், சரிதா விஹார், புதுடெல்லி, 110076 மின்னஞ்சல் ஐடி: arvindmittal81@yahoo.in |
| 21 | தீர்மான புரொபஷனலுடன் தொடர்பு கொள்ள பயன்படும் முகவரி மற்றும் இமெயில் | சிஏ அர்விந்த் மிட்டல் முகவரி: எப்–29, முதல் மாடி, டிஎல்எப் சென்டர் பாயிண்ட், செக்டார்–11, பாட்டா ப்ளைஓவர் எதிரே, இந்துஸ்தான் செக்யூரிட்டி ஏஜென்சிக்கு அருகில், மதுரா சாலை, பரிதாபாத் ஹரியானா–121006 மின்னஞ்சல்: leelelectricals.rp@gmail.com |
| 22 | மேற்கொண்டு விவரங்கள் கிடைக்கும் இடம் | வ. எண் 21ல் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் ஐடியில் மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் விவரங்களைத் தேடலாம் |
| 23 | படிவம் ஜி வெளியீடு தேதி | 22.11.2020 |

சிஏ அர்விந்த் மிட்டல்
இடைக்கால தீர்மான புரொபஷனல்
லீல் எலக்ட்ரிகல் லிமிடெட் விஷயத்தில் IBBI/IPA–001/1P–P01358/2018–2019/12081
Email Id: leelelectricalssp@gmail.com, arvindmittal81@yahoo.in
தொடர்பு விவரங்கள்: எச். எண் 1900, பேஸ்–3, ஜெ ஜெ காலனி, மதன்பூர் கட்டார், சரிதா விஹார், புதுடெல்லி, தேசிய தலைநகர் டெல்லி–110076



## SIVANANDHA PIPE FITTINGS LIMITED

**Regd. Office:** Plot No.18-20, Ambit Park Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058.
**CIN : U02520TZ1979PLC111041**

### NOTICE

Notice is hereby given that the FORTIETH (40) Annual General Meeting of the Shareholders of the Company will be held on **Saturday** the **12th DECEMBER 2020 at 11.15 am** at **Ambattur Industrial Estate Manufacturers' Association (AIEMA), ATC Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058** to transact the item of business set out in the Notice.

Notice convening the meeting along with the Annual Report for the year 2019-20 have been sent to the members by Registered Post, whose names appear on the Register of Members as on 20th November 2020.

Notice is given pursuant to section 91 of the Companies Act, 2013 that the Register of Members and Share Transfer Agent Books will remain closed from 05th December 2020 to 12th December 2020 (both days inclusive).

In compliance with the provisions of section 108 of the Companies Act, 2013 read together with the Companies [Management and Administration] Rules, 2014, the Company has offered E-Voting facility for transacting all the business items as mentioned in the Notice to the AGM through Central Depositary Services Limited [CDSL] to enable the members to cast their votes electronically. **The E-Voting commences on 07th December 2020 at 9.00 AM and ends on 11th December 2020 at 5.00 PM.** During this period shareholders of the Company, holding shares as on the cut-off date of 20th November 2020 (record date) may cast their vote electronically. No E-Voting shall be allowed beyond the said date and time.

The Company has also offered to its members the option of voting through Ballot and the relevant instruction in relation to the casting of votes through the Ballot is also mentioned in the Notice to the AGM. The duly completed Ballot form should reach the scrutinizer before the close of the working hours [5.00 pm] on 11th December 2020.

Any Query/information/assistance, please contact SKDC Consultants Limited, Coimbatore at the following phone numbers 0422-6549995, 2539835 & 2539836.

**By Order of the Board of Directors,**
**For SIVANANDHA PIPE FITTINGS LIMITED,**
**Sd/-**
**P. Venkatesan**
**Chairman**

**Place : Chennai**
**Date : 30.09.2020**




# கவிஞர் சுரதா

## 100-வது பிறந்த நாள்

**நாள்** : 23.11.2020, திங்கட்கிழமை
**நேரம்** : காலை 10.00 மணி
**இடம்** : அசோக் பில்லர், மாநகராட்சி பூங்கா அருகில், சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில்
**கவிஞர் சுரதா** அவர்களின்
திருவுருவச்சிலைக்கு
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்
மற்றும் வாரியத்தலைவர்கள்
தனிமனித இடைவெளியைக் கடைப்பிடித்து
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

செ.ம.தொ.இ./1123/வரைகலை/2020

இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.

## மீண்டும் அண்ணா தி.மு.க. ஆட்சி அமையும்

# அண்ணா தி.மு.க. – பாரதீய ஜனதா கூட்டணி தொடரும்: எடப்பாடி அறிவிப்பு

## பிரதமரின் முயற்சிகளுக்கு தமிழகம் எப்போதும் துணை நிற்கும்

**சென்னை, நவ. 22–**

**அண்ணா தி.மு.க. – பாரதீய ஜனதா கூட்டணி தொடரும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

சென்னையை அடுத்த தேர்வாய்கண்டிகை பகுதியில் ரூ.380 கோடி செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்க திட்டத்தை மக்களுக்கு அர்ப்பணிக்கும் விழாவும், மெட்ரோ ரெயில் 2வது திட்டம் உள்பட ரூ.67 ஆயிரத்து 378 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழாவும் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

விழாவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமை தாங்கினார். சபாநாயகர் ப.தனபால், தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கலந்து கொண்டார்.

துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரை ஆற்றினார்.

அதன் பின்னர், முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமை உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் வழியில் வந்த எனது தலைமையிலான அண்ணா தி.மு.க. அரசு, அமைதி, வளம், வளர்ச்சி என்ற முப்பெரும் கோட்பாடுகளின் அடிப்படையில், நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியின் பயனை அனைத்து தரப்பு மக்களும் பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி, செயல்படுத்தி வருகின்றது. இதனால்தான், தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் அளப்பரிய முன்னேற்றம் கண்டு, இந்தியாவில் உள்ள மாநிலங்களில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

சோழர் காலத்தில் இருந்தே தமிழகம் நீர் மேலாண்மையில் முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. அம்மாவின் அரசும் நீர் மேலாண்மைக்கு முன்னுரிமை அளித்து மழை நீர் சேகரிப்பை திறம்பட செயல்படுத்தியது.

### 6,278 குளங்கள் புதுப்பிப்பு

தமிழகத்தில் குடிமராமத்து திட்டத்தின் ரூ.1433 கோடியில் 6,278 குளங்கள், ஏரிகள், நீர்நிலைகள் புதுப்பிக்கப்பட்டன.

கிராமப்புறங்களில் ரூ.805 கோடி செலவில் 5,186 நீர்பாசன தொட்டிகளும், 25,987 குளங்களும் கிராம அபிவிருத்தி மற்றும் பஞ்சாயத்து துறையால் புதுப்பிக்கப்பட்டன. இதன் மூலம் தமிழகத்தில் நீர்சேமிப்பு அதிகரித்துள்ளது.

நீர் பாதுகாப்பு முயற்சிகளை விரைவுபடுத்துவதற்கும், நீர்நிலைகளை சேமிப்பு திறனை அதிகரிப்பதற்கும் அம்மாவின் 2010ம் ஆண்டில் 'தமிழ்நாடு நீர்வள பாதுகாப்பு மற்றும் பெருக்குதல் மிஷனை அறிமுகப்படுத்தியது.

மேலும் மழைநீர் தேவையின்றி கடலில் செல்வதை தடுப்பதற்கும், குடிநீர் மற்றும் விவசாய தேவைக்கும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கும், ஆறுகள் மற்றும் நீர்நிலைகளில் தடுப்பணைகள் கட்டுவதற்கும் ரூ.1000 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் பொதுப்பணித்துறையால் 160 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. கிராம அபிவிருத்தி பஞ்சாயத்து ராஜ் துறையால் ரூ.959 கோடி செலவில் 42,635 சிறிய தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. இதனால் தமிழகத்தில் நிலத்தடி நீர்மட்டமும், நீர்சேமிப்பு அதிகரித்துள்ளதால் விவசாய பரப்பளவும் அதிகரித்துள்ளது.

### நெல் உற்பத்தியில் சாதனை

டெல்டா மாவட்டங்களில் உள்ள ஏரிகளை தூர்வாரியதால் குறுவை சாகுபடிக்காக ஜூன் 12–ந்தேதி திறக்கப்பட்ட தண்ணீர் 10 நாட்களுக்கு முன்னதாக கடைமடை பகுதியை வந்தடைந்தது. இதனால் டெல்டா பகுதிகளில் 4.12 லட்சம் ஏக்கர் சாகுபடி நடைபெற்று 30 வருட சாதனையை முறியடித்தது. இதனால் தமிழகத்தில் 32 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்து சாதனை படைக்கப்பட்டது.

புதிய வீராணம் திட்டத்தினை செயல்படுத்தி சென்னை மக்களின் தாகத்தை தீர்த்து வைத்தவர் ஜெயலலிதா. கண்ணன்கோட்டை – தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்தினை அமைத்து, சென்னையின் குடிநீர்த் தேவையைப்பூர்த்தி செய்ய திட்டமிட்ட ஜெயலலிதாவின் கனவை, அண்ணா தி.மு.க. அரசு ரூ.380 கோடி செலவில் செயல்படுத்தி தற்போது நனவாக்கியுள்ளது. இந்த திட்டத்தை சென்னை மக்களுக்கு அர்ப்பணித்த உள்துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

### நீர் மேலாண்மைக்கு தேசிய விருது

தமிழக மக்களின் கனவுத் திட்டங்களான காவேரி – குண்டாறு இணைப்புத் திட்டம், அத்திக்கடவு – அவிநாசி திட்டம், மேட்டூர் அணை – சரபங்கா வடிநில நீரேற்றுத் திட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர்–குமாரமங்கலத்தில் கதவணை என பல்வேறு நீர்வள ஆதாரத் திட்டங்களை நிறைவேற்றி வரும் ஒரே அரசு, அம்மாவின் அரசு தான். தமிழ்நாடு முழுவதும் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதன் மூலம், இன்று தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. வரும் பருவமழைக் காலங்களில் நிலத்தடி நீர் மட்டம் மேலும் அதிக அளவு உயர வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட முயற்சிகளால்தான், மத்திய அரசு 2019–2020ம் ஆண்டிற்கான நீர் மேலாண்மைத் திட்டங்களை இந்தியாவிலேயே சிறப்பாக செயல்படுத்திய முதல் மாநிலமாக தமிழ்நாட்டை தேர்வு செய்து, தேசிய விருது வழங்கியுள்ளது.

கரூர் மற்றும் நாமக்கல் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், காவேரி ஆற்றின் குறுக்கே நஞ்சை புகளூரில் 1,140 மீட்டர் நீளத்திற்கும், 3 மீட்டர் உயரத்திற்கும், 406 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கதவணை அமைக்க இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் 0.8 டிஎம்சி தண்ணீரை சேமிப்பதோடு, 4,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

நடந்தாய் வாழி காவிரி, கோதாவரி – காவிரி இணைப்பு, காவிரி– வைகை– குண்டாறு இணைப்பு ஆகியவற்றுக்கு விரைவாக ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா சென்னை மாநகரத்தை உலகத் தரத்துக்கு இணையாக மேம்படுத்த பல்வேறு துறைகளின் சார்பில் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தினார். அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசும், அம்மாவின் எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையில், சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தை மிகுந்த முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

### மெட்ரோ ரெயில் 3 வழித்தடம்

54 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் கட்டம்–1, தற்போது சென்னை பெருநகர பகுதியில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலுக்கு போதாது என்பதை உணர்ந்த அம்மாவின் அரசு, 61 ஆயிரத்து 843 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 118.90 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்த முடிவு செய்தது. இந்த இரண்டாம் கட்டத்தில் மாதவரம் முதல் சிப்காட் வரையில் ஒரு வழித்தடமும், கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரை ஒரு வழித்தடமும், மாதவரம் முதல் ஆலந்தூர் வழியாக சோழிங்கநல்லூர் வரை ஒரு வழித்தடமும் உள்ளது. மேற்கண்ட அனைத்து வழித்தடங்களும் அமைப்பதற்கு வெளிநாட்டு நிதி உதவி இறுதி செய்யப்பட்டுள்ளது. மெட்ரோ ரெயில் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு ரூ.61 ஆயிரத்து 843 கோடி மதிப்பில் மத்திய மாநில அரசின் 50 சதவீத பங்கு மூலதனத்துடன் நிறைவேற்ற அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### ரூ.1,621 கோடியில் கோவையில் பாலம்

சாலைப் போக்குவரத்தினை மேம்படுத்துவதில் அம்மாவின் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இன்று அடிக்கல் நாட்டப்பட்ட, கோயம்புத்தூர் மாநகர், அவிநாசி சாலையில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை உயர்மட்ட சாலை வழித்தடம் அமையவுள்ள சாலையானது, கோயம்புத்தூர் மாநகருக்கு மிக முக்கியமான சாலை யாகும். இச்சாலையில் பல பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் விமான நிலையம் அமைந்துள்ளதால் எப்போதும் போக்குவரத்து நெரிசலுடன் காணப்படுகிறது. எனவே, இந்த உயர்மட்ட சாலை வழித்தடம் அமைந்தால் போக்குவரத்து நெரிசல் மிகவும் குறையும். இத்திட்டத்திற்கு 1,621 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

### ரூ.41 ஆயிரம் கோடி தொழில் முதலீடு

தொழில் முதலீடுக்கு உகந்த மாநிலம் தமிழ்நாடு. நடப்பாண்டில் ரூ.40 ஆயிரத்து 719 கோடியில் தொழில் முதலீடு செய்ய 55 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் 65 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கொரோனா காலத்தில் இந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டது என்பது கூடுதல் சிறப்பு அம்சமாகும்.

கொரோனா தொற்றினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், தமிழ்நாடு மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வண்ணம் கவனத்துடன் ஊரடங்கை அமலாக்குவதிலும் தமிழ்நாடு அரசு மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கோரஸ் என்ற புதுமையான திட்டத்தை செயல்படுத்தி, இதுவரை 1,202 சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 138 கோடி ரூபாய் அளவிற்கு பிணையில்லா கடன்களை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் கொரோனா பரவல் குறைந்து வரும் சூழல் நீடிக்கவும், அதனை முழுமையாகத் தடுக்கவும் நாம் அனைவரும் தொடர்ந்து பாடுபட வேண்டும்.

இன்று திறந்து வைக்கப்பட்ட மற்றும் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களை, முழுமையாக நிறைவேற்ற அல்லும் பகலும் அயராது உழைத்த அனைத்து அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும், பணியாளர்களுக்கும், உழைப்பாளர் நண்பர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பிரதமருக்கு துணை நிற்போம்

பிரதமர் கடுமையான, சோதனையான இந்தத் தருணத்தில் நாட்டு மக்களின் ஒத்துழைப்போடு மிகத் திறமையாக, வல்லரசு நாடுகளே பாராட்டுகின்ற அளவிற்கு ஆட்சி செய்வதை நாம் பார்க்கின்றோம். உலகத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு அல்லும் பகலும் பாராமல் உழைத்து, கடுமையாக முயற்சி செய்து வருகிறார் பிரதமர். ஆகவே, அவருடைய கடுமையான முயற்சிக்கு தமிழகம் எப்பொழுதும் துணை நிற்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

### கூட்டணி தொடரும்

மத்திய உள் துறை அமைச்சர் அமித்ஷா, பிரதமருக்கு துணையாக இருந்து பிரதமர் போடுகின்ற திட்டங்களை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வல்லரசு நாடுகளில் இந்தியாவும் இடம் பெறுகின்ற அளவிற்கு வளர்ந்து வருகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். ஆகவே, வல்லரசு நாடுகள் பாராட்டுகின்ற அளவிற்கு இந்தியா வளர்ந்திருக்கிறதென்று சொன்னால், பிரதமர் நரேந்திர மோடியும், உள் துறை அமைச்சர் அமித்ஷாவும் எடுத்த முயற்சிகள்தான் காரணம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, நாடாளுமன்றத் தேர்தலில் அமைக்கப்பட்ட கூட்டணி தொடரும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா தி.மு.க. 10 ஆண்டு காலம் சிறப்பான ஆட்சி செய்திருக்கிறது, பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்குத் தந்திருக்கிறது, தேசிய அளவில் பல்வேறு விருதுகளை நாங்கள் பெற்றிருக்கின்றோம், அனைத்துத் துறைகளிலும் விருதுகளை குவித்துக் கொண்டிருக்கின்றோம். அந்தளவிற்கு சிறப்பான ஆட்சி இப்போது தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மீண்டும், வருகின்ற 2021 சட்டமன்றப் பொதுத் தேர்தலில் எங்களுடைய கூட்டணி அதிக இடங்களில், பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று கழக ஆட்சி அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களின் அழைப்பினை ஏற்று தமிழகத்திற்கு வருகை தந்து முடிவுற்ற பணியை திறந்து வைத்தும், பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு தமிழக மக்களின் சார்பாக மனமார்ந்த, எனது சார்பாக மனமாந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழாவை சிறப்புற நடத்து வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார்.



சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கினார்.




துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சென்னை கலைவானர் அரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கினார்.

## 10 ஆண்டுகள் மத்தியில் கூட்டணி ஆட்சியில் இருந்தீர்களே?

# தமிழகத்துக்கு செய்தது என்ன? தி.மு.க. பட்டியல் இட தயாரா? அமித்ஷா பகிரங்க சவால்

## தமிழகத்தில் வாரிசு அரசியலுக்கு முடிவு கட்டுவோம்

**சென்னை, நவ. 22–**

**காங்கிரஸ் கூட்டணியில் 10 ஆண்டுகள் இருந்தபோது, தமிழ்நாட்டுக்கு கொண்டுவந்த திட்டங்களை தி.மு.க. பட்டியலிட தயாரா? என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பகிரங்க சவால் விடுத்தார்.**

தமிழகத்தில் ரூ.67 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி மத்திய அமைச்சர் அமித்ஷா பேசியதாவது:–

மத்தியில் நரேந்திர மோடி அரசு பொறுப்பேற்ற பிறகு, ஊழல், குடும்ப ஆட்சி, ஜாதிய அரசியல் என்ற மூன்றினை எதிர்த்து செயல்பட்டு வருகிறது. தமிழகத்திலும், நாட்டின் பிற பகுதிகளிலும் சில கட்சிகள் குடும்ப அரசியலை நடத்தி வருகின்றன. பிற மாநிலங்களைச் சேர்ந்த மக்கள், அங்குள்ள கட்சிகள் நடத்தும் குடும்ப, வாரிசு அரசியலுக்கு எதிராக சரியான பாடத்தைப் புகட்டியுள்ளனர். தமிழகத்திலும் அதுபோன்ற பாடம் புகட்டப்படும். மக்களின் துணை கொண்டு வாரிசு அரசியலுக்கு முடிவு கட்டப்படும்.

### தி.மு.க.வுக்கு சவால்

தி.மு.க. – காங்கிரஸ் கட்சி தலைவர்கள் அடிக்கடி தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு அநீதி இழைத்துள்ளது என்று கூறுகிறார்கள்.

நான் சென்னைக்கு வந்திருக்கிறேன், அவர்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். 10 ஆண்டுகாலம் மத்திய அரசில் நீங்கள் அங்கம் வகித்தீர்கள். நீங்கள் இதுவரை தமிழ்நாட்டிற்கு என்ன செய்து இருக்கிறீர்கள் என்பதை பட்டியலிடுங்கள்?. ஒரு முச்சந்தியில் நின்று கொண்டு தமிழகத்துக்குச் செய்த நன்மைகளைப் பட்டியலாக வைத்திட நான் தயாராக இருக்கிறேன். நீங்கள் அதற்கு பதில் கொடுக்க தயாரா?.

ஒரே ஒரு புள்ளி விவரம் மட்டும் இங்கே அளிக்க விரும்புகிறேன். 2013–2014ம் நிதியாண்டுக்கான வரவு– செலவு திட்ட அறிக்கையிலே தமிழகத்திற்கு காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு ரூ.16 ஆயிரத்து 155 கோடியை ஒதுக்கீடு செய்தது. கடந்த வரவு– செலவு திட்டத்திலேயே ரூ.35 ஆயிரத்து 850 கோடியை நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம். திட்டங்களுக்கு தனியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக தமிழ்நாட்டிற்கு ரூ.4,500 கோடி கொடுக்கப்பட்டுள்ளது. 108 டன் அளவிலான உணவு தானியங்கள் கடந்த 4 மாதங்களிலேயே வழங்கப்பட்டுள்ளது. ரூ.3.36 கோடி அளவிலான பருப்பு வகைகள் இதே காலக்கட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. 1.83 கோடி பேரின் ஜன்தன் கணக்கில் ரூ.9.1 ஆயிரம் கோடி பரிவர்த்தனைகள் நடந்துள்ளது.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சி, ஏழைகளின் நலன் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அரசுக்கு தோளோடு தோள் நின்று உறுதுணையாக இருப்போம்.

### ஊழலுக்கு எதிராக தி.மு.க. பேசுவதா?

நாட்டிலேயே 2 இடங்களில் உத்தரபிரதேசம், தமிழ்நாட்டில் பாதுகாப்பு வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. சாகர்மாலா திட்டத்தின்படி ரூ.2.25 லட்சம் கோடி, துறைமுகத்திற்கு ரூ.1 கோடியே 35 ஆயிரமும், சாலைகளுக்காக ரூ.57 ஆயிரம் கோடியும் அளிக்கப்பட்டுள்ளது.

மதுரையில் ரூ.12 ஆயிரத்து 460 கோடி செலவில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தேஜஸ் எக்ஸ்பிரஸ் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்டிரல் ரெயில் நிலையத்திற்கு எம்.ஜி.ஆர். பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஒரு விஷயம் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. காங்கிரஸ்– தி.மு.க. கூட்டணி ஆட்சியில் 2ஜி அலைக்கற்றை உள்பட பல்வேறு ஊழல்களை செய்தார்கள். ஆனால், இன்று ஊழலுக்கு எதிராக பேசுகிறார்கள். ஊழலுக்கு எதிராக பேச அவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது. ஊழல் குற்றச்சாட்டை நீங்கள் வைப்பதற்கு முன்பாக தயவுசெய்து உங்கள் குடும்பத்தை சற்று திரும்பி பாருங்கள். அதற்கு பிறகு எது ஊழல், எது ஊழல் இல்லை என்பது உங்களுக்கு தெரியும்.ஏழைகளின் நலனில் மோடி அரசு கவனம் செலுத்துகிறது. தமிழக மீனவர்கள் இன்றைக்கு அச்சம் இல்லாமல் இருக்கிறார்கள். ஒருவருக்குக்கூட பாதிப்பு என்று வந்து கேட்கவில்லை.

உலக நாடுகள் இந்தியாவை பார்க்கும் கண்ணோட்டத்தையே மோடி மாற்றி அமைத்து இருக்கிறார். இலங்கை யாழ்ப்பாணத்தில் 50 லட்சம் தமிழர்களுக்கு வீடு கட்டி கொடுத்தார். மோடியால் இந்தியாவிற்கு நன் மதிப்பு ஏற்பட்டுள்ளது. மோடி ஆட்சியில் இந்தியா பாதுகாப்பாக இருக்கிறது.

நம்முடைய பாதுகாப்பு படையினர் சதிவேலையில் ஈடுபட முயன்ற தீவிரவாதிகளை சுட்டுக்கொன்றார்கள். மோடி அரசு பாதுகாப்பு படையினரின் தன்னம்பிக்கையை அதிகரித்து இருக்கிறது. அவர்களுக்கு தலை வணங்குகிறேன். இந்தியா மோடி தலைமையில் வீர நடைபோடுகிறது. வரும் காலங்களில் முன்னணி நாடுகளில் நாம் இருப்போம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி கொண்டிருக்கும் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வத்திற்கு மீண்டும் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

# 2–ம் மெட்ரோ ரெயில் திட்டம்: 2026ம் ஆண்டு நிறைவடையும்

## வில்லிவாக்கத்தில் முதல்கட்ட பணிகள் துவக்கம்

**சென்னை, நவ.22–**

**சென்னையில் 2வது கட்ட மெட்ரோ ரெயில் திட்டப் பணிகளை வரும் 2026ம் ஆண்டில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனையடுத்து 173 கி.மீ. தூரத்திற்கு இயக்கப்படும் ரெயில்கள் மூலம் தினமும் 25 லட்சம் பயணிகள் பயணிக்க முடியும் என சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.**

சென்னையில் 2வது கட்டமாக ரூ.61,843 கோடியில் செயல்படுத்தப்படவுள்ள மெட்ரோ ரெயில் திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா நேற்று தொடங்கி வைத்தார். இதையடுத்து, வில்லிவாக்கம் பகுதியில் நேற்று முதல்கட்ட பணிகள் தொடங்கப்பட்டன. இதற்கான விழா சென்னை, வில்லிவாக்கம், ராஜாஜி நகர், வெங்கடராகவலு தெருவில் உள்ள சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் நிலையத்தில் நேற்று நடந்தது. இதற்காக அங்கு தனியாக மேடை அமைக்கப்பட்டு இருந்தது.

அதில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன நிர்வாக இயக்குனர் பிரதிப் யாதவ், சிறப்பு திட்ட செயலாக்க துறை முதன்மை செயலாளர் எம்.ஏ.சித்தக் உள்ளிட்ட அதிகாரிகள் இருந்தனர். வில்லிவாக்கத்தில் தயார் நிலையில் இருந்த பொக்லைன் யந்திரம் சுரங்கத்துக்கான குழியை தோண்டி பணியை தொடங்கியது.

இந்நிலையில் 2வது கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தின் சிறப்புகள் குறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

மெட்ரோ ரெயில் சேவைக்காக 2ம் கட்டமாக அமைக்கப்படும் 3 திட்டம் ரூ.61 ஆயிரத்து 843 கோடி மதிப்பில் 118.9 கி.மீ. தூரம் கொண்ட பாதை அமைக்கப்படுகிறது. இதில் 128 ரெயில் நிலையங்களும், மாதவரம், சோழிங்கநல்லூர் மற்றும் பூந்தமல்லி ஆகிய 3 இடங்களில் ரெயில்களை பராமரிக்கும் பணிமனைகளும் அமைக்கப்படுகிறது. மத்திய, மாநில அரசுகள் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

மாதவரம் பால்பண்ணை முதல் சிப்காட் வரை உள்ள 3வது வழித்தடம் 45.8 கி.மீ. நீளத்தில் வடக்கு தெற்கு வழித்தடமாகும். இது தகவல் தொழில்நுட்ப வழித்தடம், அடையாறு, மயிலாப்பூர் மற்றும் புரசைவாக்கம் ஆகிய இடங்களை இணைக்கிறது. இந்தப்பாதையில் சுரங்கப்பாதையில் 30 ரெயில் நிலையங்களும், உயர்த்தப்பட்ட பாதையில் 20 ரெயில் நிலையங்களும் அமைக்கப்படுகிறது.

கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரை 4வது வழித்தடம் 26.1 கி.மீ. நீளத்திற்கு கிழக்கு மேற்கு வழித்தடமாக அமைகிறது. நகரத்தின் வணிகப்பகுதிகளான நந்தனம், தியாகராயநகர், வடபழனி, வளசரவாக்கம், போரூர் மற்றும் பூந்தமல்லியை இணைக்கிறது. இதில் உயர்த்தப்பட்ட பாதையில் 18 ரெயில் நிலையங்களும், சுரங்கப்பாதையில் 12 ரெயில் நிலையங்களும் அமைகிறது. மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை 5வது வழித்தடத்தில் 47 கி.மீ. நீளத்தில் சுற்று வட்ட வழித்தடம் அமைகிறது. வில்லிவாக்கம், அண்ணாநகர், கோயம்பேடு, விருகம்பாக்கம், ராமாபுரம், மடிப்பாக்கம் மற்றும் மேடவாக்கம் ஆகியவற்றை இணைக்கிறது. இதில் உயர்த்தப்பட்ட பாதையில் 42 ரெயில் நிலையங்களும், சுரங்கப்பாதையில் 6 ரெயில் நிலையங்களும் வர உள்ளன.

வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரை உள்ள 9.051 கி.மீ. தூர விரிவாக்கப்பணிகள் அடுத்த ஆண்டு (2021) இறுதியில் போக்குவரத்துக்காக திறக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

சென்னையில் 2ம் கட்ட மெட்ரோ ரெயில் பணிகளில் 23 சுரங்கம் தோண்டும் யந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது. இந்தப்பணிகள் அனைத்தும் 2026ம் ஆண்டு நிறைவடையும். அதற்கு பிறகு தற்போது உள்ள 45 கி.மீ. தூரத்தையும் சேர்த்து மொத்தம் 173 கி.மீ. தூரத்திற்கு ரெயில் இயக்கப்படும். இவற்றின் மூலம் தினமும் 25 லட்சம் பேர் மெட்ரோ ரெயிலில் பயணிக்க முடியும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திருவள்ளூர் மாவட்டம் கண்ணன்கோட்டை – தேர்வாய் கண்டிகையில் உருவாக்கப்பட்ட புதிய நீர்த்தேக்கத்தை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

★ ரூ.380 கோடி தேர்வாய்கண்டிகை நீர்தேக்கத்தை மக்களுக்கு அர்ப்பணித்தார்

★ மெட்ரோ ரெயில் திட்டம் உட்பட ரூ.67,378 கோடி திட்டங்களுக்கு அடிக்கல்

## அனைத்து திட்டங்களிலும் தமிழகம் முன்னிலை

# எடப்பாடி ஆட்சி தொடரும்; தமிழகம் வளர்ச்சி பாதைக்கு செல்லும்

## மத்திய அமைச்சர் அமித்ஷா பேச்சு

சென்னை, நவ. 22–

**தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான இந்த ஆட்சி தொடரும்; தமிழகம் வளர்ச்சி பாதைக்கு செல்லும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறினார்.**

அனைத்து திட்டங்களிலும் தமிழகம் முன்னிலை வகிக்கிறது என்றும் அவர் கூறினார்.

சென்னையை அடுத்த திருவள்ளூர் மாவட்டத்தில், கண்ணன்கோட்டை – தேர்வாய்கண்டிகை பகுதியில் ரூ.380 கோடி செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்க திட்டத்தை மக்களுக்கு அர்ப்பணிக்கும் விழாவும், ரூ.61 ஆயிரத்து 843 கோடி மதிப்பீட்டில் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான மெட்ரோ ரெயில் 2வது திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும், மேலும் ரூ.5 ஆயிரத்து 535 கோடி செலவில் 6 புதிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவும் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

விழாவுக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமை தாங்கினார். சபாநாயகர் ப.தனபால், தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கலந்துகொண்டார். சரியாக மாலை 4.45 மணிக்கு தமிழ்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. முதலில், மறைந்த முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் உருவப்படத்திற்கு மத்திய அமைச்சர் அமித்ஷா, முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அமித்ஷா மகிழ்ச்சி

இதனையடுத்து மேடையில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, அமித்ஷாவிடம் பொன்னாடையை கையில் கொடுக்கச் சென்றார். இதனை பார்த்த அமித்ஷா தனக்கு பொன்னாடையை அணிந்துவிடுமாறு அவரிடம் கூறினார். இதைத்தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி அமித்ஷாவுக்கு பொன்னாடை அணிவித்தார். தொடர்ந்து விநாயகர் சிலை ஒன்றையும் நினைவுப்பரிசாக அமித்ஷாவிடம் எடப்பாடி பழனிசாமி வழங்கினார்.

இதேபோல துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை, அமித்ஷா அழைத்து குத்துவிளக்கு ஏற்ற வைத்தார். பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசாக தில்லை நடராஜர் சிலையை அமித்ஷாவுக்கு ஓ.பன்னீர்செல்வம் வழங்கினார். அதன்பின்னர், தலைமைச் செயலாளர் க.சண்முகம் வரவேற்று பேசினார்.

### திட்டங்களுக்கு அடிக்கல்

முதலாவதாக, கண்ணன்கோட்டை– தேர்வாய்கண்டிகை புதிய நீர்த்தேக்கத்தை மக்களுக்கு மத்திய அமைச்சர் அமித்ஷா அர்ப்பணித்தார். தொடர்ந்து, மெட்ரோ ரெயில் 2வது திட்டத்திற்கு அவர் அடிக்கல் நாட்டினார். இதேபோல், கோவை அவினாசி சாலையில் ரூ.1,620 கோடியில் உயர்மட்ட சாலை திட்டம், கரூர் மாவட்டம் நஞ்சை புகளூரில் ரூ.406 கோடியில் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் கதவணைத் திட்டம், சென்னை வர்த்தக மையத்தை ரூ.309 கோடியில் விரிவுபடுத்தும் திட்டம், வல்லூரில் ரூ.900 கோடியில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் பெட்ரோலிய முனையம், அமுல்லைவாயலில் ரூ.1,400 கோடியில் லூப் பிளாண்ட் அமைக்கும் திட்டம் மற்றும் எண்ணூர் காமராஜர் துறைமுகத்தில் ரூ.900 கோடியில் புதிய இறங்கு தளம் அமைக்கும் திட்டம் ஆகியவற்றுக்கும் மத்திய அமைச்சர் அமித்ஷா அடிக்கல் நாட்டினார். புதியதாக அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களை விளக்கும் வகையிலான குறும்படங்களும் இடைஇடையே ஒளிபரப்பப்பட்டன.

## கொரோனாவுக்கு எதிரான தமிழக அரசின் நடவடிக்கைக்கு பாராட்டு

தொடர்ந்து, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரை ஆற்றினார். அதன்பின்னர், முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமை உரையாற்றினார். நிறைவாக, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா சிறப்புரை ஆற்றினார்.

### தமிழர்கள் பங்களிப்பை மறக்க முடியாது

அப்போது அவர் பேசியதாவது:

உலகத்திலேயே மிக பழமையான மொழி தமிழ். தமிழ் மொழியில் பேசி உங்களுடன் என்னால் உரையாட முடியவில்லை. இது எனக்கு வருத்தம் அளிக்கிறது. இதற்காக நான் மன்னிப்புக்கேட்டுக்கொள்கிறேன். இந்திய வரலாற்றில் தமிழ் கலாசாரம் போற்றுதலுக்குரியது. தத்துவமாக இருக்கட்டும், கலாசாரமாக இருக்கட்டும், அறிவியலாக இருக்கட்டும், கலைகளாக இருக்கட்டும், சிற்பக்கலைகளாக இருக்கட்டும். சுதந்திர போராட்டமாக இருக்கட்டும் எல்லாவற்றிலும் தமிழர்களின் பங்களிப்பை நாம் மறக்க முடியாது. மிகவும் பழமை வாய்ந்த தமிழ் மொழி பேசும் மக்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக மக்களுக்கு நான் தலை வணங்குகிறேன்.

இன்றைக்கு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். ஒரு சில திட்டங்களை தமிழகத்திற்கு அர்ப்பணித்து இருக்கிறேன்.

### எடப்பாடி ஆட்சி தொடரும்

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் தமிழகம் முன்னேற்றம் கண்டு வருகிறது. மறைந்த முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோர் தமிழகத்தை எந்த வகையில் வளர்ச்சி பாதைக்கு எடுத்து சென்றார்களோ, அதேபோல் எடப்பாடி பழனிசாமி தலைமையில் இந்த ஆட்சி தொடரும். சிறப்பான முறையில் தமிழகம் வளர்ச்சி பாதைக்கு செல்லும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இன்றைக்கு கொரோனா பெருந்தொற்று மக்களை அச்சுறுத்தி வருகிறது. இந்தியா, நம்முடைய பிரதமர் மோடியின் தலைமையில் வளர்ந்த நாடுகளைவிட சிறப்பாக கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறோம். மத்திய, மாநில அரசுகள் மட்டும் போராடவில்லை. 130கோடி நாட்டு மக்களும் அரசுடன் இணைந்து போராடுகிறார்கள்.

தமிழ்நாட்டில் முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகிய இருவருக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் இந்த கொரோனா பெருந்தொற்றுக்கு எதிராக வெற்றிகரமான ஒரு போராட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். நாடு முழுவதும் இருக்கும் குணமடைவோர் சதவீதம் தமிழகத்தில் சிறப்பாக இருப்பது பாராட்டுக்குரியது. கொரோனா விஷயத்தில், இது தொடர்பாக பல மாநில முதலமைச்சர்கள், அவர்களின் அதிகாரிகள் பேசுகின்றபோது, தமிழகத்தை சேர்ந்த பிரதிநிதிகள் அறிவியல் பூர்வமாக பேசுவதுடன், சிறப்பாகவும் கையாளுகிறார்கள்.

### தமிழகம் முதல் நிலை

இந்த காலக்கட்டத்தில் குறிப்பாக கர்ப்பிணி பெண்கள், புதியதாக பிறந்த குழந்தைகளின் பராமரிப்பு தமிழகத்தை போல எந்த மாநிலத்திலும் பராமரிக்கப்படவில்லை. நோய் தொற்று காலத்தில் மட்டுமல்ல அனைத்து நேரங்களிலும் பிரகாசமான நிலை தான் நிலவுகிறது. குறிப்பாக கடந்த 7 ஆண்டுகளிலேயே மோடி தலைமையிலான ஆட்சியில் இதற்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. மாநிலங்களுக்கிடையே நல்லாட்சி என்ற தகுதி அடிப்படையிலான போட்டிகளில் தமிழ்நாடு இந்த ஆண்டு முதல் நிலை வகிக்கிறது.

நீர் பாதுகாப்பு, நீர் வினியோகம் ஆகிய 2 துறைகளிலும் இந்த ஆண்டு தமிழகத்திற்கு தான் முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் வேலூர், கரூர் ஆகிய மாவட்டங்கள் முதல் நிலை வகிக்கிறது. நாடு முழுவதும் இருக்கும் விவசாயிகளை பல தலைகள் கட்டுப்படுத்தி வருகின்றன. அந்த தலைகளில் இருந்து விடுதலை அளிக்கும் வகையில் தான் மோடி அரசு 3 வகையான சீர்திருத்தங்களை கொண்டு வந்துள்ளது. இதற்கு தமிழக அரசு ஆதரவு கொடுத்துள்ளது. தமிழக விவசாயிகள் மேலும் சிறப்பான நிலையை அடைவார்கள்.

ஏழைகளுக்கான நல்ல பல திட்டங்களை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. ஜன்தன் திட்டத்தின்படி ஏழைகளுக்கு கடன் வழங்கப்படுகிறது. அதிலே இடைத்தரகர்கள் யாரும் இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படுகிறது. ஏழைகளுக்கு இலவச எரிவாயு வழங்கும் திட்டம் ஏழை தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் வீடு வசதி திட்டம் கிட்டத்தட்ட 2022ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும். அனைத்து திட்டங்களிலும் ஒரு அளவீடு என்று எடுத்து பார்த்தால் தமிழ்நாடு அனைத்து திட்டங்களிலும் முன்னிலை வகிக்கிறது.

விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் நேரடியாக வங்கி கணக்குகளுக்கு எந்த இடைத்தரகர்களும் இல்லாமல் ரூ.6 ஆயிரம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. ரூ.95 ஆயிரம் கோடி கொண்டு சேர்க்கபட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியின் 10 ஆண்டுகால ஆட்சியில் அவர்கள் என்ன செய்தார்கள் என்ற கேள்வியை கேட்க நான் கடமைப்பட்டுள்ளேன். தமிழ்நாட்டில் 45 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.4,400 கோடி இதுவரை அவர்கள் வங்கி கணக்கிற்கு கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு ரூ.30 ஆயிரம் கோடி கட்டமைப்புக்காக நபார்டு மூலமாகவும், உலக வங்கிகள் சார்பாகவும் அளிக்கப்பட்டுள்ளது. நூண் உணவு திட்டத்திற்கும் ஆதரவு அளிக்கப்பட்டுள்ளது. 2024க்குள் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் சுத்தமான குடிநீர் கொண்டு சேர்ப்பதே மோடி அரசின் லட்சியமாக இருக்கிறது. இதிலும் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

இறுதியாக, தொழில்துறை முதன்மை செயலாளர் என்.முருகானந்தம் நன்றி கூறினார்.

விழாவில், அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், அரசு உயர் அதிகாரிகள், போலீஸ் உயர் அதிகாரிகள், தமிழக பா.ஜ.க. பொறுப்பாளர் சி.டி.ரவி, இணை பொறுப்பாளர் பி.சுதாகர் ரெட்டி, மாநில தலைவர் எல்.முருகன், முன்னாள் தேசிய செயலாளர் எச்.ராஜா, கூட்டணி கட்சிகளான பா.ம.க. சார்பில் முன்னாள் மத்திய ரெயில்வே இணை மந்திரி ஏ.கே.மூர்த்தி, தே.மு.தி.க. சார்பில் அக்கட்சியின் இளைஞர் அணி செயலாளர் எல்.கே. சுதீஷ், புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

---

## மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு கூடுதல் நிதி, நதி நீர் இணைப்பு, புதிய தொழில் பூங்காக்கள்

# அமித் ஷாவிடம் எடப்பாடி பழனிசாமி வைத்த 3 கோரிக்கைகள்

சென்னை, நவ.22–

**தமிழக நலன் கருதி மெட்ரோ ரெயில் திட்டம், புதிய தொழில்பூங்காக்கள், நதிநீர் இணைப்பு திட்டங்களுக்கு மத்திய அரசு உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி 3 கோரிக்கை மனுக்களை நேரில் வழங்கினார்.**

சென்னை சேப்பாக்கம் கலைவாணர் அரங்கத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் பேசிய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அண்ணா தி.மு.க. – பாரதிய ஜனதா வெற்றி கூட்டணி சட்டசபை தேர்தலிலும் தொடரும்' என்று அறிவித்தனர்.

நிகழ்ச்சி முடிந்ததும் அமித்ஷா, லீலா பேலஸ் நட்சத்திர ஓட்டலுக்கு புறப்பட்டு சென்றார். அவரை பின்தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர் டி.ஜெயக்குமார் ஆகியோர் ஓட்டலுக்கு வந்தனர்.

அங்கு அமித்ஷா, எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் ஒன்றாக அமர்ந்து தேனீர் அருந்தினார்கள். பின்னர் தமிழக அரசு திட்டங்கள் தொடர்பாக அமித்ஷாவுடன் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இந்த பேச்சுவார்த்தையின்போது முக்கிய அம்சங்கள் அடங்கிய 3 கோரிக்கை மனுக்களை அமித்ஷாவிடம், எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் வழங்கினார்கள்.

அதன் விவரம் வருமாறு:–

### மெட்ரோ ரெயில் திட்டம்

சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டம் ரூ.61,843 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்துக்கு 15 சதவீதம் பங்கு மூலதனம் வழங்குவதற்குப் பதிலாக, 10 சதவீத தொகையை மட்டுமே வழங்க மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் திட்ட முதல் கட்ட பணிகளில் இருந்ததைப்போல 50:50 என்ற அளவில் 2வது கட்ட பணிகளுக்கும் மத்திய அரசு விரைந்து ஒப்புதல் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் முதல் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு திருத்தப்பட்ட செலவு மத்திய வீட்டு வசதி மற்றும் ஊரக விவகார துறையின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு விரைந்து ஒப்புதல் கொடுக்கவேண்டும்.

### ஜவுளி தொழில் பூங்காக்கள்

மாநில அரசுகளின் கூட்டாண்மையுடன் மெகா ஜவுளி தொழில் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு முன்வைத்துள்ளது. தமிழகத்தில் விருதுநகர், தருமபுரி மாவட்டங்களில் ஜவுளி தொழில் பூங்காக்கள் திட்டத்தைச் செயல்படுத்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன.

மருந்து மற்றும் மருத்துவக் கருவிகள் பூங்காவை சென்னைக்கு அருகில் அமைக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்கு உரிய தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதாரங்களை அளித்திட சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இந்த பூங்காக்களை தமிழகத்தில் அமைக்க தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க வேண்டும்.

### நதிநீர் இணைப்பு

தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்தின் கீழ் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை கோதாவரி காவிரி (கல்லணை) இணைப்பில் முதல் திட்டம் தொடர்பாக ஒரு விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து கடந்த ஆண்டு மார்ச் மாதம் அனுப்பியிருந்தது. தமிழக அரசு இந்த இணைப்பை கல்லணைக்கு பதிலாக கட்டளை தடுப்பணையோடு முடிக்க, அதற்கான தேவையை அனுப்பியிருந்தது.

தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை (கட்டளைகுண்டாறு திட்டத்துக்கு) ரூ.8 ஆயிரத்து 277 கோடி செலவில் ஒரு விரிவான திட்ட அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. இந்த திட்டத்துக்கு ஒப்புதல் அளித்து தேவையான நிதி உதவி வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

காவிரியை மாசு இல்லாத நதியாக புத்தாக்கம் பெற ரூ.10 ஆயிரத்து 700 கோடி செலவில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதலையும், நிதி உதவியையும் அளிக்கும்படி ஜல்சக்தி அமைச்சகத்துக்கு உத்தரவிட வேண்டும். இந்தத் திட்டங்களுக்கான வரைவு அறிக்கைக்கு ஒப்புதல், நிதியுதவி உள்ளிட்ட அம்சங்களுக்கு உடனடியாக அனுமதி அளித்திட உரிய அரசுத்துறைகளை அறிவுறுத்த வேண்டும் என தனது கடிதத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார்.

இதைத்தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் மேடையில் அறிவித்தபடி, அண்ணா தி.மு.க. – பாரதீய ஜனதா கூட்டணி தொடர்பாகவும், தொகுதி பங்கீடு குறித்தும் அமித்ஷாவிடம் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்த சந்திப்பு சுமார் 20 நிமிடம் நீடித்தது.

---

## அண்ணா தி.மு.க. — பாரதீய ஜனதா வெற்றி கூட்டணி தொடரும்

# மீண்டும் அண்ணா தி.மு.க. ஆட்சி அமையும்: ஓ.பன்னீர்செல்வம் உறுதி

## அம்மாவின் ஆட்சிக்கு செல்வாக்கு கூடுவதை பார்த்து எதிர்கட்சிகள் பரிதவிக்கிறார்கள்

சென்னை, நவ. 22–

**அண்ணா தி.மு.க. – பாரதீய ஜனதா கூட்டணி தொடரும், மீண்டும் அண்ணா தி.மு.க. ஆட்சி அமையும் என்று துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.**

தேர்வாய்கண்டிகை புதிய நீர்தேக்கம் திறப்பு விழா, சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் – II மற்றும் பல்வேறு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழாவில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:–

சிறந்த நிர்வாகம் மூலம் மத்திய அமைச்சர் அமித்ஷா தன்னை நிரூபித்துள்ளார். இளம் வயதில் உள்துறையை நிர்வகித்து வரும் அவர், ஆழ்ந்த அறிவு மற்றும் அனுபவத்துடன் நவீன உலகின் சாணக்கியனாக திகழ்கிறார். மத்திய அரசின் பல்வேறு சாதனைகளில் முக்கிய பங்கு வகித்து வருகிறார். எனவே பிரதமர் மோடியின் நம்பிக்கையானவராக திகழ்ந்து வருகிறார்.

புரட்சித்தலைவர் எம்ஜிஆர், நாடோடி மன்னன் என்ற திரைப்படத்தில் மன்னனாக பதவியேற்கும் பொழுது, ‘‘நாம் இருக்கின்ற காலத்தில் மக்களுக்கு எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து விட வேண்டும்" என்று புரட்சித்தலைவர் ஆணித்தரமாக கூறுவார்.

புரட்சித்தலைவர் எம்ஜிஆர் கூறிய, இந்த சுந்தரச் சொற்களை, தாரக மந்திரமாகக் கொண்டு ஏழை, எளியோர் வாழ்வில் ஏற்றம் பெற எண்ணிலடங்கா புதுமை திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியவர் நமது புரட்சித்தலைவி அம்மா.

புரட்சித்தலைவர் எம்ஜிஆர் கூறிய அந்த வைர வரிகளை இதயத்தில் ஏந்தி, அம்மா காட்டிய வழியில் இம்மியும் பிசகாது நடந்து, மக்களுக்கான நலத்திட்டங்களை, அம்மா அரசு இன்றைக்கு வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது என்பதற்கு சாட்சியம் தான், அம்மாவின் அரசு பெற்றுள்ள இத்தனை தேசிய அளவிலான விருதுகளும் பாராட்டுகளும்,

### மக்கள் எங்கள் பக்கம்

கடந்த 2011–ம் ஆண்டிலிருந்து இன்று வரை அம்மா அரசு அனைத்து துறைகளிலும், ஏராளமான சரித்திர சாதனைகளைப் படைத்து, தமிழக மக்களுடைய பாராட்டுக்களைத் தொடர்ந்து பெற்று வருகிறது. அம்மா அரசு, கோடிக்கணக்கான தமிழக மக்களை நம்பி, கழகத் தொண்டர்களின் மீது நம்பிக்கை வைத்து, மக்களுடன் பயணித்து, மக்களுக்கான நலத் திட்டங்களை தீட்டுவதில் இந்தியாவிலேயே முன்னணியில் உள்ளது. இதனை நாம் நன்றாக அறிவோம், அதனால்தான் தமிழக மக்கள் என்றும் எங்கள் பக்கம். நாங்கள் என்றும் மக்கள் பக்கம்.

இந்த சாதனைகளையெல்லாம் தமிழக மக்கள் பார்க்கிறார்கள், பாராட்டுகிறார்கள் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கின்றார்கள்.

ஆனால் எதிர்க்கட்சியினரும் இதைப் பார்க்கிறார்கள், ஆனால் பரிதவிக்கிறார்கள். அம்மாவின் அரசுக்கு, தினந்தோறும் மக்கள் செல்வாக்கு கூடுகிறதே என்று மனம் பதைபதைக்கிறார்கள். அதனால் மனம் பொறுக்க முடியாமல் குமுறுகிறார்கள், குறை சொல்லுகிறார்கள், குற்றம் சொல்லுகிறார்கள்.

### மீண்டும் அண்ணா தி.மு.க. ஆட்சி

அம்மா வளர்த்த சிங்கங்கள்தான், அண்ணா தி.மு.க. தொண்டர்கள். சிங்கத்தின் குகையிலே வந்து, சிறுநரிகள் வாலாட்ட முடியாது. vஎனவே, தொடர்ந்து மூன்றாவது முறையும் நாங்கள் வெற்றி பெற்று முத்திரை பதிப்போம், வெற்றிக்கனி பறிப்போம்.

தேசிய அளவில் இந்தியாவை இன்றைக்கு வல்லரசு நாடக உருவாக்கி காட்டிய மகிழ்ச்சியில் பாரதீய ஜனதா கட்சி தலைமை தாங்கி நடத்தி கொண்டு இருக்கும் பிரதமர் மோடி இன்றைக்கு மிகவும் கடினமாக இந்திய திருநாட்டை நல்வழிபடுத்துவதற்கு ஆற்றலுடன் செயல்பட்டு கொண்டு இருக்கிறார்.

இனி வருகின்ற தேர்தல்களில் அண்ணா தி.மு.க, பாரதீய ஜனதா வெற்றி கூட்டணி தொடரும் என்று இந்த கூட்டத்தின் மூலமாக தெரிவித்து கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

கோவிட் 19–ஐ கட்டுப்படுத்துவதில் தமிழகம் தொடர்ந்து திறம்பட செயல்பட்டு வருகிறது. மேலும் தமிழக அரசுக்கு தொடர்ந்து ஆதரவு அளிக்குமாறு உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

# விழுப்புரத்தில் ரூ.2.58 கோடி நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் சி.வி.சண்முகம் வழங்கினார்

விழுப்புரம், நவ.21

விழுப்புரத்தில் ரூ.2.58 கோடியில் அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சி.வி.சண்முகம் வழங்கினார்.

விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட கலெக்டர் அண்ணாதுரை தலைமை தாங்கினார். கூடுதல் கலெக்டர் ஸ்ரேயா பி.சிங், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மகேந்திரன், பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரம்) செயற்பொறியாளர் ஜவகர், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் அம்புரோஸியாநேவிஸ்மேரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ரகுபதி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் சட்டத்துறை அமைச்சர் சி.வி. சண்முகம் கலந்து கொண்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் ஊராட்சி அளவிலான 10 குழு கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் நலத்திட்ட உதவிக்கான ரூ.197.95 லட்சம் மதிப்பிலான காசோலையையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பொது நிதி திட்டத்தின் கீழ் செவித்திறன் குறைபாடுடைய 15 மாற்றுத் திறனாளிகளுக்கு தலா ரூ.4,920 வீதம் மொத்தம் ரூ.73,800 மதிப்பில் நவீன காதொலி கருவிகளையும், முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பல்வேறு விபத்துகளில் உயிரிழந்த 4 குடும்ப வாரிசுதாரர்களுக்கு ரூ.7 லட்சத்திற்கான காசோலையையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ஒருவருக்கு ரூ.4,120 மதிப்பில் இலவச தையல் எந்திரம் என மொத்தம் ரூ.2 கோடியே 58 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



விழாவில் விழுப்புரம் கோட்டாட்சியர் ராஜேந்திரன், தாசில்தார் வெங்கடசுப்பிரமணியன், அண்ணா தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் பேட்டை முருகன், சுரேஷ்பாபு, முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அற்புதவேல், மாவட்ட மாணவர் அணி செயலாளர் சக்தி வேல், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞரணி துணைத்தலைவர் வண்டிமேடு ராமதாஸ், கூட்டுறவு அச்சக துணைத்தலைவர் குமரன், நகர கூட்டுறவு வங்கி இயக்குனர் வக்கீல் செந்தில், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் செங்குட்டுவன், நகர ஜெயலலிதா பேரவை நிர்வாகி கோல்டு சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பிறந்த குழந்தையுடன் வீடின்றி தவித்த பெண்ணுக்கு கலெக்டர் நிதிஉதவி

கோவை, நவ.22–

மூணாறு பகுதியைச் சேர்ந்த ரமேஷ் – கயல்விழி தம்பதியினர், திருப்பூரில் வேலை செய்து வந்தனர். இந்நிலையில் கயல்விழி பிரசவத்திற்காகக் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்த நேரத்தில், மூணாறில் ஏற்பட்ட நிலச் சரிவில் ரமேஷ் – கயல்விழியின் தாய் தந்தை உறவினர்கள் அனைவரும் உயிரிழந்து விட்டனர். இதற்கிடையே கயல்விழிக்கு பெண் குழந்தை பிறந்தது. பிரசவத்தைத் தொடர்ந்து கயல்விழியை டிஸ்சார்ஜ் செய்து கொள்ளும்படி மருத்துவமனை சார்பில் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் மூணாறு நிலச்சரிவில் வீடுகள் அனைத்தும் இடிந்து விழுந்ததால் எங்கும் செல்ல முடியாமல் ரமேஷ் கயல்விழி தம்பதி தவித்தனர். இது குறித்து கோவை கலெக்டருக்குத் தகவல் அளிக்கப்பட்டது. தகவலின் அடிப்படையில் கலெக்டர் ராசாமணி 5000 ரூபாய் வழங்கியுள்ளார். மேலும் இவர்கள் தற்காலிகமாகத் தங்குவதற்கு ஈர நெஞ்சம் அறக்கட்டளையினர் இடம் கொடுத்து உதவியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ரமேஷ், "நிலச்சரிவு ஏற்பட்டபோது, டிசம்பர் மாதத்திற்குள் வீடு கட்டி தருவதாக அரசு கூறியுள்ளதாகக் காத்திருக்கிறோம். நிலச்சரிவு நிவாரணங்கள் வழங்கப்படும் என்று கூறிய போது நாங்கள் அங்கு இல்லாத காரணத்தினால் நிவாரணம் இன்னும் வந்தடையவில்லை. எனவே அரசு தங்களுக்கு இருக்க இருப்பிடம், ஏதேனும் ஒரு வேலையை ஏற்பாடு செய்து கொடுத்தால் உதவியாக இருக்கும்" எனக் கோரிக்கை விடுத்துள்ளனர் ரமேஷ் – கயல்விழி தம்பதியினர்.



அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமியை, தென்காசி வடக்கு மாவட்டத்திற்கு, மண்டலப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள, தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சருமான கடம்பூர் செ. ராஜூ, நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார்.

## டிரம்ப்பின் டுவிட்டர் கணக்கை பிடனிடம் ஒப்படைக்க முடிவு

நியூயார்க், நவ. 22–

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜோ பிடன் வெற்றி பெற்றுள்ள நிலையில் அதிபருக்கான அதிகாரப்பூர்வ டுவிட்டர் கணக்கு ஜோ பிடனிடம் ஒப்படைக்கப்படும் என டுவிட்டர் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பிடன் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். ஆனால் நடப்பு அதிபரான டிரம்ப் ஜனநாயக கட்சியின் வெற்றியை ஒப்புக்கொள்ளாமல் தொடர் குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகிறார். இதனால் சமீபத்தில் அவரது டுவிட்டர் பதிவுகள் நீக்கப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்க அதிபருக்கான அதிகாரப்பூர்வ டுவிட்டர் கணக்கு தற்போது டிரம்ப் உபயோகத்தில் இருந்து வரும் நிலையில் அந்த கணக்கு திரும்ப பெறப்பட்டு அடுத்த அதிபரான ஜோ பிடனிடம் ஜனவரி 20–ம் தேதியன்று ஒப்படைக்கப்படும் என டிவிட்டர் நிறுவனம் அறிவித்துள்ளது.

# கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டசத்து பெட்டகம்: பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. வழங்கினார்

போளூர், நவ. 22–

ஜவ்வாதுமலை பெருங்காட்டூரில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டசத்து பெட்டகத்தை வி.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. வழங்கினார்.

தமிழக அரசின் சிறப்பு மருத்துவ முகாம் ஜவ்வாதுமலை பெருங்காட்டூர் அரசு மாதிரி பள்ளி வளாகத்தில் நடந்தது. வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் ராமநாதன் தலைமை வகித்தார். ஒன்றிய குழு தலைவர் எம். ஜீவாமூர்த்தி, துணை தலைவர் செ.மகேஸ்வரி செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சுகாதார ஆய்வாளர் ந.நித்யா வரவேற்றார்.



நிகழ்ச்சியில் கலசபாக்கம் எம். எல்.ஏ. வி.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் வழங்கி பேசியதாவது:நீட்தேர்வில் அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீதம் இட ஒதுக்கீட்டில் கலசபாக்கம் தொகுதிக்குட்பட்ட காரப்பட்டு அரசு பள்ளி மாணவி ஒருவருக்கு இடம் கிடைத்துள்ளது. எனது 5 ஆண்டு பதவி காலத்தில் எனக்கு இது பெருமகிழ்ச்சி தந்துள்ளது. அந்த மாணவியின் டாக்டர் கனவை நிறைவேற்ற அவரின் கல்வி செலவை நான் ஏற்று கொள்ள முடிவு செய்துள்ளேன். தமிழகம் முழுவதும் 11 மருத்துவகல்லூரிகளை முதல்வர் எடப்பாடி பழனிசாமி தொடங்கியுள்ளார்.

ஜவ்வாதுமலையில் மக்களின் நீண்டகால கோரிக்கை ஏற்று தாலுகா அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு பணிகளை செய்துள்ளேன்.சு ற்றுலா மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.10 கோடி செலவில் ஜமுனாமரத்துரில் புதிய பஸ்நிலையம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட உள்ளன. இதேபோல் ஜமுனாமரத்தூரில் புதிய கோர்ட் வளாகம் காணொலி காட்சி மூலம் விரைவில் துவங்கப்படும். புதிய கருவூலம் அலுவலகம் விரைவில் திறக்கப்படும். நம்மியம்பட்டு பகுதியிலிருந்து செம்மரம் வெட்ட செல்வதை தடுக்க அங்கு புறக்காவல் நிலையம் விரைவில் திறக்கப்பட உள்ளது. ஜமுனாமரத்துர் ஆரம்ப சுகாதார நிலையம் தாலுகா மருத்துவமனையாக விரைவில் தரம் உயர்த்தப்பட உள்ளது. ஜவ்வாமதுமலையில் பணிபுரியும் அரசு டாக்டர்கள் உள்ளிட்ட சுகாதார துறையினர் மிக சிறப்பாக பணி புரிந்ததால் மாவட்டத்திலேயே கொரோனா பாதிப்பு இல்லாத பகுதியாக ஜவ்வாதுமலை விளங்கி வருகிறது. எனவே பொதுமக்கள் அவர்களுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு தரவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கொரோனா தடுப்பு பணியில் சிறப்பாக பணி புரிந்த அரசு டாக்டர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், உள்ளிட்ட சுகாதாரத்துறையினருக்கு வி.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. நினைவு பரிசுகள் வழங்கி பாராட்டினர். அதனை தொடர்ந்து நடந்த மருத்துவ முகாமில் 779 மலைவாழ்மக்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர்.

நிகழ்ச்சியில் டாக்டர்கள் ச.சுந்தரசாமி, ப.பிரசாந்த், க.கிருஷ்ணாஸ்ரீ, ப.ஜெகந்நாதன், இந்துஜா, க.கோகுலகிருஷ்ணன், ந.நாகர்ஜுன், கோவிலூர் ஊராட்சி மன்ற தலைவர் அ.நடேசன், லேம்ப் கூட்டுறவு சங்க தலைவர் என். வெள்ளையன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஆர்.கே.நகர், மற்றும் பெரம்பூர் பகுதி வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற சிறப்பு முகாமில் வடசென்னை வடக்கு (கிழக்கு) மாவட்ட அண்ணா தி.மு.க. செயலாளரும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தலைவருமான ஆர்.எஸ். ராஜேஷ் வாக்காளருக்கு விண்ணப்ப படிவங்களை வழங்கினார். பகுதி செயலாளர்கள் ஆர்.நித்தியானந்தம், என்.எம்.சீனிவாசபாலாஜி, வியாசை எம்.இளங்கோவன், என்.எம். சீனிவாச பாலாஜி மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.


## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திரு. R. ராஜா, த/பெ.திரு. R.M. ராஜாமணி, நெ.348/221 & 222, முதல் தளம், லாயிட்ஸ் சாலை, கோபாலபுரம், சென்னை–86 தனது சொத்தான 4640 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட ஜல்லடியான் பேட்டை கிராமம், தாம்பரம் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் சர்வே நெ.225/7 & 225/8 சம்பந்தப்பட்ட அசல் பொது அதிகார ஆவணம் தேதி 21.02.2002 in ADJ No.64/2002 before Joint I SRO Saidapet பயணம் செய்யும்போது தவற விட்டு விட்டார். மேற்படி ஆவணத்தை கண்டெடுக்கும் நபர்கள் தவறாமல் இந்த அறிவிப்பு வெளியிட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**R.RAMESH CHANDER**, Advocate,
No.43/11, Srinivasaperumal Koil 1st Street, Thiruvottiyur,
Chennai–600 019. Mobile No.: 98410 18689,
Ph: 044 2573 1119, E–Mail: r.rameshchander@gmail.com

## பொது அறிவிப்பு

சென்னை 600042, வேளச்சேரி, 10வது தெரு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், 1410,LIG1 வசிக்கும் எனது கட்சிக்காரர் P. செந்தில்குமார், தனது அசல் பத்திரத்தை வேளச்சேரி பைபாஸ் அருகில் தொலைத்துவிட்டார். அசல் பத்திர எண்.7305/2012, ஆற்காடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டது தேதி: 17.09.2012, சர்வே எண்.32 (பகுதி), தமிழ்நாடு வீட்டுவசதி ஆற்காடு கிராமப்புற, பகுதிII (நில வங்கி திட்டம்) இந்த திட்டத்திற்க்கு சம்பந்தப்பட்டதாகும், பிளாட் எண்.L63, EWS, 431 சதுரடி, வேப்பூர் கிராமம், ஆற்காடு தாலுகா, வேலூர் மாவட்டம்.
யாரேனும் மேற்படி பத்திரம் கிடைக்கபெற்றால் எனது கட்சிக்காரர் முகவரிக்கோ அல்லது கீழ் உள்ள எனது முகவரிக்கோ தெரிவிக்கும்மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

G.RAMALINGAM,
Advocate & Notary
Egmore Bar Association
Egmore, Chennai – 600 008.

## PUBLIC NOTICE

My client Mr.G.SENTHIL RAJ S/o.Gangadharan, residing at No.2-1/8, E Type, 5th Street, SSIDCO Nagar, Vilivakkam, Chennai 600 049, would like to inform the general public that the original title deed bearing Doc.No.838/1994, registered at Sub-Registrar Office of Padappai, South Chennai of the schedule of the property has been misplaced/ lost irretriviably and unable to trace the same. My client further states that he had lost the relevant documents of the Schedule of the Property.

**Schedule of the Property**

All that piece and parcel of land situated in the sanctioned plan of Survey No.331/1B, and 329/2, Plot No.109, ofVaradharajapuram Village, Sriperumbudur Taluk, presently Kundrathur Taluk, Chengai MGR district, presently Kancheepuram, and measuring 1784Sq.ft., bounded as follows North by: Plot No.108, East By: Survey No.330, South By: Plot No.110, West By: 16 Feet Road, measuring the north 35 Feet, on the east 37 Feet on the south 52 Feet on the West by 32 feet, in all admeasuring 1784Sq.ft., within. Sub-Registration District of Padappai, South Chennai. It is requested if anyone finds the documents kindly contact us at the below mentioned address with in 15days of this Notice. .

**K.Tishwanth** (Advocate),
No.5, Law Chambers, High Court
Buildings, Chennai - 104.
Mobile 9940247524

**சென்னை உயர்நீதிமன்றம்**
**(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)**
**முதலேற்பு மனு எண்.864/2019**

இந்திய வாரிசுரிமைச் சட்டம் 39/1925 தொடர்பான மனுவில் 15.01.2014 அன்று இறந்துபோன T.மதுசூதனன் அவர்களின்

திருமதி. ரஜிதா, D/O. திரு. T.மதுசூதனன்
பிளாட் எண். 577, SBOA பள்ளி சாலை
அண்ணா நகர் மேற்கு விரிவு, சென்னை –600 101. – மனுதாரர்
எதிர்
திருமதி. ராஜேஸ்வரி, D/O. திரு. T.மதுசூதனன்
பிளாட் எண். 577, SBOA பள்ளி சாலை
அண்ணா நகர் மேற்கு விரிவு, சென்னை –600 101. –எதிர்மனுதாரர்

சென்னை – 600 101, அண்ணா நகர் மேற்கு விரிவு, SBOA பள்ளி சாலை, பிளாட் எண். 577 என்ற முகவரியில் வசித்து வந்து 15.01.2014 அன்று இறந்துபோன திரு. T.மதுசூதனன் அவர்களின் பங்கு பத்திரங்கள் தொடர்பான மனு மேற்படியாரின் பங்கு பத்திரங்களில் ஏதேனும் பாத்தியதை கோருகின்ற அனைவரும் தங்களுக்கு தக்கதென கருதினால் நீதிமன்றம் வாரிசு உரிமை சான்றிதழ் வழங்கப்படுவதற்குமுன் சென்னை உயர்நீதிமன்றம் 'மாஸ்டர் கோர்ட்டில்' 22.12.2020 அன்று காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு போடப்பட்டுள்ளது. jroriginalsidemhc@gmail.com என்கிற மின்னஞ்சல் முகவரியில் தங்களது ஆட்சேபனைகளை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 6–ம் தேதி கையொப்பமிடப்பட்டது.

பொ.சாந்தினி ஜோஸ்மின்
உதவி பதிவாளர், முதலேற்பு பிரிவு–1
உயர்நீதிமன்றம், சென்னை–600 104.

**கி.நரசிம்மன், இ.ஜெயசங்கர்,**
எண்.8, 4வது தெரு,
வேங்கடேஸ்வர நகர், அடையார் சென்னை–600 020.

## பொது அறிவிப்பு

2020–ம் வருடம் நவம்பர் மாதம் 18–ந் தேதி சென்னை–600 007, வேப்பேரி, புரசைவாக்கம், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, 5வது மாடி, பிளாட் நெ.5ஏ மெயின் டோர் நெ.138 என்ற விலாசத்தில் வசிக்கும் காலஞ்சென்ற மங்கள் சந்த் கோத்தாரி அவர்களின் குமாரர் வயது 49, திரு. M. சுபாஷ் சந்த் கோத்தாரி, அவர்கள் D. மோகன் மற்றும் G.K. முரளி என்பவரின் பொது அதிகார முகவர் M. அசோக் சந்த் கோத்தாரி அவர்களிடம் இருந்து வேலூர் மாவட்டம் அரக்கோணம் 1. நீ இணை சார் பதிவு அலுவலகத்தில் 19.11.2014ம் ஆண்டு எனது கட்சிக்காரர் பெயரில் மின்னல் கிராமம், சர்வே எண். 474/2B, –ல் அடங்கிய ஸ்ரீகணபதி நகரில் மனை எண்கள் 44, 45, 46, 74, 75 களின் மொத்த விஸ்தீரணம் 5540 சதுரடிகள் கொண்ட ஆவண எண் 9563/2014ன்படி பதிவான அசல் பத்திரம் மற்றும் D. மோகன் மற்றும் G.K. முரளி என்பவர்களிடம் இருந்து அரக்கோணம் 1. நீ இணை சார் பதிவு அலுவலகத்தில் 19.11.2014ம் ஆண்டு எனது கட்சிக்காரர் பெயரில் மின்னல் கிராமம், சர்வே எண். 473/2B, –ல் அடங்கிய ஸ்ரீகணபதி நகரில் மனை எண்கள் 9, 10, 63, 64, 66 67 களின் மொத்த விஸ்தீரணம் 7059 சதுரடிகள் கொண்ட ஆவண எண் 9564/2014ன்படி பதிவான அசல் பத்திரம் ஆகிய இரண்டு கிரைய பத்திரங்களையும் ஒரு மஞ்சள் நிற பையில் வைத்து அல்லிகுளம் நீதிமன்ற வளாகத்தில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு ஜெராக்ஸ் எடுக்க சென்ற கடந்த 29.9.2020ந் தேதி காலை 11.00 மணியளவில் அசல் ஆவணங்கள் இரண்டும் பையுடன் தொலைந்து விட்டது. மேற்படி அசல் ஆவணங்களை (9564/2014, 9563/2014) யாரேனும் கண்டெடுத்தால் எனது கட்சிக்காரிடமோ அல்லது என்னிடமோ ஒப்படைக்க வேண்டியது.

A.Mannu Lingam, Advocate,
Room No.3, Sri Vari Complex,
Door No.341/2, Paper Mills Road,
Perambur, Chennai – 600 011.

## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திருமதி.V.K.ரூகினாஸ் W/o. திரு.K. மன்சூர், நெ.8/1, ஜவகர் நகர், மூன்றாவது தெரு, பெரவள்ளூர், சென்னை–600 082 என்பவர் தனது சொத்தின் பிளாட் C–143(Part), கதவு நெ.8/1, வடக்கு குறுக்கு தெரு, ( 3வது சர்குலர் ரோடு), ஜவகர் நகர், சென்னை–600 082. சர்வே நம்பர்.327/3 (Part) பட்டா நம்பர் 66. தேதி: 26.09.1997 S.D.No.249/97–98, T.S. No.38/1, BlocK No.38, விஸ்தீரணம் 1023 சதுர அடி மற்றும் அதிலுள்ள கட்டிட வகையறாக்கள் உட்பட சம்பந்தப்பட்ட அசல் செட்டில் மெண்ட் பத்திரம் நெ.3906/2010 தேதி:13.05.2010 before SRO செம்பியத்திலுள்ள 6வது பக்கத்தை நகல் எடுக்கும் பொழுது தவற விட்டு விட்டார். மேற்கண்ட தவற விட்ட பக்கத்தை கண்டெடுக்கம் நபர்கள் கீழ்கண்ட முகவரியில் இந்த அறிவிப்பிட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**R.RAMESH CHANDER**, Advocate,
No.43/11, Srinivasaperumal Koil 1st Street,
Thiruvottiyur, Chennai–600 019.
Mobile No.: 98410 18689,
Ph: 044 2573 1119, E–Mail: r.rameshchander@gmail.com

## பெயர் மாற்றம்

GOPINATHAN KARUMUDI, தந்தை பெயர்: Narayana Menon, பிறந்த தேதி:28.04.1951, நெ.70/15, சத்தியா நகர் 2வது குறுக்கு தெரு, பாடி, சென்னை – 600 050, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **GOPINATH KARUMUDI,** என்று அழைக்கப்படுகிறேன்.

GOPINATHAN KARUMUDI

## பெயர் மாற்றம்

MOHAMED ISMAIL.M, தந்தை பெயர்: A. முகம்மது மைதீன், பிறந்த தேதி: 29.01.2006, நெ.36, ஐந்து வர்ணம் பெரிய தெரு, தென்காசி. குறிப்பு:ஆதார் கார்டில் தவறு– முகம்மது இஸ்மாயில் என்பதை சரியானது: முஹம்மது இஸ்மாயீல்.மு என்று அழைக்கப்படுகிறேன்.

## பெயர் மாற்றம்

MELFERD FERNANDO, தந்தை பெயர்: Melven Fernando, பிறந்த தேதி:05.01.2002, H115/1, 33வது குறுக்கு தெரு, பெசன்ட் நகர், சென்னை – 600 090, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Melferd Fernando Melven Fernando,** என்று அழைக்கப்படுகிறேன்.

MELFERD FERNANDO

## பெயர் மாற்றம்

Yuvaraj Prakash Alandur, தந்தை பெயர்: Thiru. Yuvaraj Reddy, பிறந்த தேதி: 21.04.1971,(சொந்த மாவட்டம்: ஹைதராபாத் தெலுங்கானா), பிளாக் –1/620, 6வது மாடி, Ceebros Boulevard Near A.K.D.R. கோல்ப் கிராமம், ஒக்கியம் துரைப்பாக்கம், சென்னை –600 097, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **PRAKASH REDDY,** என்று அழைக்கப்படுகிறேன்.

Yuvaraj Prakash Alandur

**சார் ஆட்சியர்**
**கடலூர்.**
**அ.தி.மு.3880/2020**

ராமூர்த்தி, த/பெ.சின்னசாமி,
கொஞ்சிக்குப்பம் கிராமம்,
சி.என்.பாளையம் அஞ்சல்,
கடலூர் வட்டம்.
கடலூர் மாவட்டம். ...மனுதாரர்
எதிர்
வருவாய் வட்டாட்சியர்,
கடலூர். ...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் தந்தை சின்னசாமி, த/பெ.குப்புசாமி என்பவர் கடந்த 28.03.2000 அன்று மேற்படி விலாசத்தில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலக்தில் பதிவு செய்து இறப்புச் சான்றிதழ் வழங்க உத்திரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீது எவருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் 15 நாட்களுக்குள் வருவாய் வட்டாட்சியர், கடலூர் அலுவல கத்தில் நேரில் காலை 10.30 மணிக்கு ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு மனு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் அறியவும்.

**ராமூர்த்தி, த/பெ.சின்னசாமி,**
மனுதாரர்கள்.

## பெயர் மாற்றம்

Pranav Elappalli Karthik, பிறந்த தேதி: 18.07.1998, நெ. 522, புஷ்பாஞ்சலி ப்ளாட்ஸ், நெ.1, திருமங்கலம் ரோடு, வில்லிவாக்கம், சென்னை–600 049, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **PRANAV KARTHIK,** என்று அழைக்கப்படுகிறேன்.

Pranav Elappalli Karthik

## பெயர் மாற்றம்

Mohamed Shariff Mohamed Yacoup, தந்தை பெயர்: Muhammed Yakub, பிறந்த தேதி: 15.03.1988, நெ.8/43, கம்பர் தெரு, டி.எம்.பி. நகர், பாடி, சென்னை –600 050, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MOHAMMED SHERIFF MUHAMMED YAKUP,** என்று அழைக்கப்படுகிறேன்.

Mohamed Shariff Mohamed Yacoup

## பெயர் மாற்றம்

Khairunnisa Nisar Ahamed Syed, கணவர் பெயர்: Syed Nisar Ahamed, பிறந்த தேதி: 23.01.1979, நெ. 16/56, S2, Greenwich Apts, சேஷாசலம் தெரு, சைதாப்பேட்டை, சென்னை–600 015, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **சையதா கைருன்னிசா நிசார் அஹமத் சையத்** என்று அழைக்கப்படுகிறேன்.

Khairunnisa Nisar Ahamed Syed

## பெயர் மாற்றம்

SELVADURAI, தந்தை பெயர்: Kattamuthu, பிறந்த தேதி: 04.06.1951, நெ. 46/47, கஸ்பா 2வது தெரு, விருத்தாசலம், கடலூர் மாவட்டம் – 606001, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SELLADURAI,** என்று அழைக்கப்படுகிறேன்.

SELVADURAI

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE AT POONAMALLEE**
**O.P.No. 747 OF 2019**

S.MUTHULAKSHMI ... Petitioner
VS
C. SELVAKUMARASAMY ... Respondent

To.
C. Selvakumarasamy
S/o.Chinnasamy
No.220, 42nd street, 8th sector, K.K. Nagar, Chennai-600-068.

Please take notice that the original petition filed by the petitioner for to dissolve the marriage on the grounds of Cruelty and Desertion against you and the same was came up on 08.10.2020. His Hon'ble Subordinate Judge at Poonamallee was ordered Private notice through paper publication to you returnable by 10.12.2020 at 10:30 A.M. Therefore kindly you are requested to appear either in person or through your counsel for filing your objections if any failing which orders will be passed in your absence.

M/S. K.SENTHIL.M.A.B.L.,
K.SIVAPRAKASH.B.Sc.B.L.,
Counsel for Petitioner

**சென்னை உயர்நீதிமன்றம்**
**(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றியஆள்வரை)**
**முதலேற்பு மனு எண். 227/2020**

இந்திய வாரிசுரிமைச் சட்டம் 39/1925 தொடர்பான மனுவில் 12.02.2008 அன்று இறந்து போன என்.சோமசுந்ரம் அவர்களின் பங்கு பத்திரங்கள் தொடர்பான வாரிசுரிமை கோரும் மனு

1) (லேட்) திருமதி கல்யாணி க/பெ. கா.செ.என்.சோமசுந்தரம்,
நெ. ஹெச் 16டி, ஐஸ்வர்யா அபார்ட்மெண்ட்ஸ்,
கிழக்கு அவென்யூ, கொரட்டூர், சென்னை–600 080.
2) திருமதி மலர்விழி, த/பெ. கா.செ.என்.சோமசுந்தரம்,
க/பெ. திரு.மோகன், 2/102, A1, அரிசந்திரா முதல் தெரு,
ஈஞ்சம்பாக்கம், சென்னை–600 115.
3) திருமதி வனஜா, த/பெ. கா.செ.என்.சோமசுந்தரம்,
க/பெ. திரு.பாலசங்கர், #28/24,கிழக்கு அவென்யூ,
கொரட்டூர், சென்னை–600 080.
4) திரு.சுதர்ஸன், த/பெ. கா.செ.என்.சோமசுந்தரம்,
நெ. ஹெச் 16டி, ஐஸ்வர்யா அபார்ட்மெண்ட்ஸ்,
கிழக்கு அவென்யூ, கொரட்டூர், சென்னை–600 080.
5) திருமதி மணிமேகலை, த/பெ. கா.செ.என்.சோமசுந்தரம்,
க/பெ. திரு.ஸ்ரீனிவாசன், புதிய எண்.69, பழைய எண்.44,
கரைகாட்டு தெரு, திருவாரூர் –610001.
6) ஜெயலக்ஷ்மி, த/பெ. கா.செ.என்.சோமசுந்தரம்,
நெ. ஹெச் 16டி, ஐஸ்வர்யா அபார்ட்மெண்ட்ஸ்,
கிழக்கு அவென்யூ, கொரட்டூர், சென்னை–600 080. – மனுதாரர்கள்

சென்னை – 600 080, கொரட்டூர், கிழக்கு அவென்யூ,ஐஸ்வர்யா அபார்ட்மெண்ட்ஸ், ஹச்16டி, என்ற இடத்தில் வசித்து வந்து 12.02.2008ல் இறந்து போன என்.சோமசுந்தரம் அவர்களின் பங்கு பத்திரங்கள் தொடர்பான மனு சென்னை உயர்நீதிமன்ற மாஸ்டர் கோர்ட்டில் 19.01.2021 அன்று காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு வருகிறது. மேற்படியாரின் பங்கு பத்திரங்கள் ஏதேனும் பாத்தியதை கோருகின்ற அனைவரும் தங்களுக்கு தக்கதென கருதினால் நீதிமன்றம் நிர்வாகச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன் jroriginalsidemhc@gmail.com என்கிற மின்னஞ்சல் முகவரியில் தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

**இரா.கோபிநாத், இரா அய்யப்பன், எஸ்.விஜயன்,**
**மனுதாரரின் வழக்கறிஞர்**
**257, 4வது மாடி, அங்கப்பன் தெரு,**
**சென்னை– 600 001.**

**பொ.சாந்தினி ஜாஸ்மின் எம்.ஏ.பி.எல்.,**
**உதவி பதிவாளர்**
**முதலேற்பு பிரிவு– 1**
**உயர்நீதிமன்றம்**
**சென்னை– 104**

## சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்

CIN: L25199TN1989PLC017137

**பதிவு அலுவலகம்:** B-11/W, சிப்காட் தொழிற்பேட்டை வளாகம், கும்மிடிப்பூண்டி 601 201
**கார்ப்பரேட் அலுவலகம்:** எண்.66, நியூ ஆவடி ரோடு, 2வது தளம், எஸ்2 குறிஞ்சி அபார்ட்மெண்ட்ஸ், சென்னை 600 010 Tel: +91 44 2660 1313
E-mail: southernlatexltd@yahoo.com, Website: www.southernlatex.in

**31வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு**

கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.17/2020, மே 5, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.20/2020 மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம் மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவின் (SEBI) இதர பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் வெளியிட்ட சுற்றறிக்கைகள் ஆகியவற்றிக்கு இணங்க, கூட்டம் குறித்த அறிவிப்பில் கண்டுள்ள அலுவல் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்வதற்காக கம்பெனியின் உறுப்பினர்களுக்கான **31வது வருடாந்திர பொதுக் கூட்டம் திங்கட்கிழமை, 14 டிசம்பர், 2020 அன்று மாலை 3.00 மணிக்கு** காணொலி காட்சி (VC)/பிற ஆடியோ வீடியோ காட்சி முறை (OAVM) மூலம் நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 31வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் 2019-20-ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவற்றின் மின்னணு நகல்கள் கம்பெனி/வைப்பு பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 31வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் 2019-20-ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.southernlatex.in-ல் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவும்.

கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் 8 **டிசம்பர், 2020 முதல் 14 டிசம்பர், 2020 வரை** (இரண்டு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும்.

கம்பெனிகள் சட்டம் 2013ன் பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015ன் ஒழுங்குமுறை 44 ஆகியவற்றுக்கு இணங்க வருடாந்திர பொதுக் கூட்ட அலுவல்கள் மீது கம்பெனியின் உறுப்பினர்கள் பரிவர்த்தனை மேற்கொள்ள மின்னணு வாக்களிப்பு தளத்தை வழங்குவதற்காக சிடிஎஸ்எல் சேவைகளை கம்பெனி பயன்படுத்தியுள்ளது. மேலும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போதும் மின்னணு வாக்களிப்பு வசதியை கூடுதலாக கம்பெனி வழங்குகிறது. வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு / மின்னணு வாக்களிப்பு ஆகியவற்றில் சேருவதற்கான விரிவான நடைமுறை அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 103ன் கீழ் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

மின்னணு வாக்களிப்பதற்கான உறுப்பினர்களின் தகுதியை அறிய கம்பெனி **7 டிசம்பர், 2020ம்** தேதியை **"கட் ஆப்"** தேதியாக நிர்ணயித்துள்ளது. மின்னணு வாக்களிப்பு **11 டிசம்பர், 2020 அன்று காலை 9.00 மணிக்கு துவங்கி ஞாயிற்றுக்கிழமை, 13 டிசம்பர், 2020 அன்று மாலை 5.00 மணிக்கு** முடிவடைகிறது. அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்களிப்பு முறை நிறுத்தப்படும். வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், ஆனால் அத்தகைய உறுப்பினர்கள் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மின்னணு வாக்களிப்பு தொடர்பான விரிவான வழிமுறைகளுக்கு, உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு குறிப்புகளைப் பார்க்கவும். மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் / குறைகள் இருப்பின் அது குறித்து உறுப்பினர்கள் சிடிஎஸ்எல் இணையதளம் www.evotingindia.com-ல் கிடைக்கும் மின்னணு வாக்களிக்கும் பயனர் கையேட்டைப் பார்க்கவும்.

**சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்டிற்காக**
ஒப்பம்/-
**கவிதா சி**
கம்பெனி செயலாளர் & இணக்க அதிகாரி

இடம் : சென்னை
தேதி : 22.11.2020

## இந்திய எல்லையில் ரேடார்களை மேம்படுத்தும் சீன ராணுவம்

லடாக், நவ. 22–

**சீன ராணுவம், இந்திய சீன எல்லையில் ரேடார்களை அதிகரித்து மேம்படுத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.**

இந்தியா – சீனா இடையே கடந்த சில மாதங்களாகவே எல்லையில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. சீன ராணுவம் அவ்வப்போது எல்லையில் அத்துமீறுகிறது. இருநாடுகளுக்கு இடையே தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தாலும், சுமூகமான முடிவு எட்டப்படவில்லை. இந்நிலையில் இந்தியா – சீனா எல்லைக் கோட்டுப் பகுதியில் சீன ராணுவம் ரேடார்களை நிறுவி மேம்படுத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

யேசெங் பகுதியில் கண்காணிப்பு கட்டடம் ஒன்று காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் ரேடார்களின் எண்ணிக்கையும் 3லிருந்து 4 வரை அதிகரிக்கப்பட்டு உள்ளதாகவும் கூறப்படுகிறது. சிக்கிமிற்கு எதிரே இந்த ரேடார்கள் பொருத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கண்காணிப்பு வசதியை அதிகரிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அதேபோல், அருணாச்சல பிரதேசத்துக்கு எதிரே லின்ஷி மற்றும் என்கிட்டி பகுதியில் ரேடார் நிறுவப்பட்டுள்ளது. சீனாவின் நடவடிக்கைகளை இந்திய ராணுவம் கூர்ந்து கவனித்து வருவதாகவும், அதற்கேற்ற ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மேயர், நகராட்சி, பேரூராட்சி தலைவர் தேர்தலில் போட்டியிட கட்டணம் செலுத்தியவர்கள்

# விண்ணப்ப கட்டணத்தை டிசம்பர் 5–ந் தேதி வரை திரும்ப பெற்றுக் கொள்ளலாம்

### எடப்பாடி, ஓ.பி.எஸ். அறிவிப்பு

சென்னை, நவ. 22–

**மாநகராட்சி மேயர், நகர மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர் பதவிகளுக்கு கழகத்தின் சார்பில் போட்டியிட வாய்ப்பு வேண்டி விருப்ப மனு அளித்திருந்த அண்ணா தி.மு.க. உடன்பிறப்புகள் செலுத்தி இருக்கும் விண்ணப்பக் கட்டணத் தொகைகளை நாளை முதல் டிசம்பர் 5–ந் தேதி வரை திரும்ப பெற்றுக் கொள்ளலாம் என்று அண்ணா தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

இது குறித்து அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடைபெற இருந்த நிலையில் உள்ளாட்சிப் பதவிகளுக்கு அண்ணா தி.மு.க.வின் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கு வாய்ப்பு கோரிய கழக உடன்பிறப்புகளிடமிருந்து 15.11.2019 முதல் டிசம்பர் மாதம் 2019 வரை விருப்ப மனுக்கள் பெறப்பட்டன.

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கான தேர்தல்கள் நடைபெறாத காரணத்தால், மாநகராட்சி மேயர், நகர மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர் பதவிகளுக்கு கழகத்தின் சார்பில் போட்டியிட வாய்ப்பு வேண்டி விருப்ப மனு அளித்திருந்த அண்ணா தி.மு.க. உடன்பிறப்புகள் அனைவரும், தாங்கள் செலுத்தி இருக்கும் விண்ணப்பக் கட்டணத் தொகைகளை தலைமைக்கழகத்தில் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என கடந்த 21.11.2019 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டதன் பேரில், பலர் தாங்கள் செலுத்திய விண்ணப்பக் கட்டணத் தொகைகளை பெற்றுச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் மேற்கண்ட பதவிகளுக்கு விருப்ப மனு அளித்து, விண்ணப்பக் கட்டணத் தொகைகளை திரும்பப் பெறாத கழக உடன்பிறப்புகளுக்கு மேலும் ஒரு வாய்ப்பு வழங்கிடும் வகையில், அவர்கள் அனைவரும் நாளை (23–ந் தேதி) முதல் டிசம்பர் 5–ந் தேதி வரை தாங்கள் செலுத்திய விண்ணப்ப கட்டணத் தொகைக்கான அசல் ரசீதுடன் தலைமைக் கழகத்திற்க நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதையும், இந்தக் காலக்கெடு மீண்டும் நீட்டிக்கப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளனர்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை, பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் சந்தித்து, அரசு ஒதுக்கீடு இடங்களில் 7.5 சதவிகித முன்னுரிமை அடிப்படையில் மருத்துவம் பயில சேர்க்கை ஆணைகளை பெற்ற அரசுப் பள்ளி மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## கூட்ட நெரிசல் மிகுந்த நேரங்களை தவிர்த்து

# அனைத்து பெண்கள், குழந்தைகள் மின்சார ரெயில்களில் நாளை முதல் செல்ல அனுமதி

சென்னை, நவ.22

**அத்தியாவசிய பணிகளின் பட்டியலின் கீழ் வராத பெண்கள் மற்றும் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மின்சார ரெயில்களில் பயணிக்கலாம் என தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.**

கொரோனா பெருந்தொற்றால் நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு, தற்போது ஒவ்வொரு கட்டமாக தளர்வுகள் அறிவிக்கப்பட்டு வருகிறது. ஊரடங்கால் பயணிகள் ரெயில் சேவைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டது. பின்னர் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப சிறப்பு ரெயில்களும், அத்தியாவசிய அரசு மற்றும் தனியார் ஊழியர்களுக்காக மின்சார ரெயில்களும் இயக்கப்பட்டு வருகிறது.

சென்னையில், தொடக்கத்தில் 120 மின்சார ரெயில்கள் இயக்கப்பட்டன. பின்னர் அதனை 150 ஆக அதிகரித்து, அத்தியாவசிய தனியார் ஊழியர்களும் பயணிக்கலாம் என அறிவிக்கப்பட்டது. இதையடுத்து கடந்த சில நாட்களுக்கு முன் மின்சார ரெயில் சேவை 244 ஆக அதிகரிக்கப்பட்டு மின்சார ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது.

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

அத்தியாவசிய பணிகள் பட்டியலின் கீழ் வராத பெண் பயணிகள் சாதாரண நேரங்களில், அதாவது காலை 7 மணி வரையிலும், அதன்பின்னர் காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரையிலும், இரவு 7.30 மணிக்கு பிறகும் திங்கள் முதல் சனிக்கிழமை வரை மின்சார ரெயில்களில் பயணிக்கலாம்.

அதேவேளையில் ஞாயிற்றுக்கிழமைகளில் நாள் முழுவதும் மின்சார ரெயில்களில் அத்தியாவசிய பட்டியலின் கீழ் வராத பெண்கள் மற்றும் குழந்தைகள் பயணிக்க அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் இவர்களுக்கான ரெயில் டிக்கெட், சாதாரண நேரங்களில், தாங்கள் புறப்படும் ரெயில் நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் அத்தியாவசிய பட்டியலின் கீழ் வராத பெண் பயணிகள் கூட்ட நெரிசல் மிகுந்த நேரங்களில், அதாவது காலை 7 முதல் 10 மணி வரையிலும், மாலை 4.30 முதல் 7.30 மணி வரையிலும் திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை பயணிக்க அனுமதி இல்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மாணவர்களுக்கு அனுமதி**

**நாளை முதல் சென்னை புறநகர் ரெயிலில் பயணிக்க மாணவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. விளையாட்டு வீரர்கள், நேர்முக தேர்வுக்கு செல்பவர்கள், வியாபாரிகளுக்கும் அனுமதி அளிக்கப்படுகிறது. பயணம் செய்ய உரிய சான்றிதழ்களுடன் வரவேண்டும் என்று தெற்கு ரெயில்வே அறிவுறுத்தி உள்ளது.**

## மிச்சிகனில் ஜோ பிடன் வெற்றி: டிரம்ப்புக்கு மேலும் பின்னடைவு

நியூயார்க், நவ. 22–

**அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்திலும் அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பிடன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். தேர்தலின் முடிவுகளை எதிர்த்துப் போராடி வரும் அதிபர் டிரம்ப்புக்கு மேலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.**

மிச்சிகன் மாகாணத்தின் 159 மாவட்டங்களில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் பதிவான சுமார் 50 லட்சம் வாக்குகள் கைகளால் எண்ணப்பட்டு வந்தன. இந்த நிலையில், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பிடன் வெற்றி பெற்றதாக தேர்தல் அதிகாரிகள் அறிவித்தனர். அவருக்கு 24.7 லட்சம் வாக்குகள் கிடைத்ததாகவும், டிரம்ப்புக்கு 24.6 லட்சம் வாக்குகள் பதிவானதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து அந்த மாகாணத்தில் 12,670 வாக்குகள் வித்தியாசத்தில் ஜோ பிடன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து அந்த மாகாண கவர்னர் பிரையன் கெம்ப் சான்றிதழ் அளித்தார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'மிச்சிகன் தேர்தல் முடிவுகளை நான் முழுமையாக ஏற்கவில்லை. இருந்தாலும், மாகாண கவர்னர் என்ற முறையில் தேர்தலில் ஜோ பிடன் வெற்றி பெற்றதாக சான்றளிக்க வேண்டியது சட்டப்பூர்வ கடமை என்பதால் இந்தச் சான்றிதழை அளிக்கிறேன். இதையடுத்து, மாகாணத்தில் மறுவாக்குப் பதிவு செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுக்க டிரம்ப் குழுவினருக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

எனினும், மாகாண அரசின் செயலாளரும், தேர்தல் தலைமை அதிகாரியுமான பிராட் ராபென்ஸ்பெர்பர் கூறுகையில், 'வாழ்நாள் முழுவதும் பொறியாளராகப் பணியாற்றியவன் என்ற வகையில், எண்கள் ஒரு போதும் பொய் சொல்லாது என்பது எனக்குத் தெரியும். மிச்சிகனின் செயலாளர் என்ற வகையில், நாங்கள் வெளியிட்ட தேர்தல் முடிவு எண்கள் அனைத்தும் சரியானவையும் துல்லியமானவை என்று உறுதியாகக் கூறினார்.

கடந்த 3ம் தேதி நடைபெற்ற அதிபர் தேர்தலில், ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ஜோ பிடன் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்றுள்ளார். எனினும், தேர்தலில் ஜனநாயகக் கட்சிக்கு சாதகமான வகையில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி வரும் அதிபர் டிரம்ப், தோல்வியை ஏற்க மறுத்து வருகிறார். அத்துடன் தேர்தல் முடிவுகளை எதிர்த்தும் வாக்கு எண்ணிக்கை ரத்து, மறுவாக்கு எண்ணிக்கை கோரியும் பல்வேறு நீதிமன்றங்களில் அவரது சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்தச் சூழலில், 16 மக்கள் பிரதி வாக்குகளைக் கொண்ட மிச்சிகனிலும் ஜோ பிடன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. தேர்தலில் வெற்றி பெறுவதற்கு 270 மக்கள் பிரதிநிதி வாக்குகளைப் பெற்றாலே போதும் என்ற நிலையில், மிச்சிகனின் 16 வாக்குகளையும் சேர்த்து ஜோ பிடன் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 306 ஆக உயர்ந்துள்ளது. இது, தேர்தல் முடிவுகளை எதிர்த்துப் போராடி வரும் டிரம்ப்புக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

# அமித்ஷா டெல்லி புறப்பட்டார்: விமான நிலையத்தில் ஓ.பி.எஸ், அமைச்சர்கள் வழி அனுப்பினர்

சென்னை, நவ.22–

**உள்துறை அமைச்சர் அமித்ஷா 2 நாள் சென்னை பயணத்தை முடித்துக்கொண்டு இன்று காலை டெல்லி புறப்பட்டார்.**

பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய உள்துறை அமைச்சருமான அமித்ஷா 2 நாள் பயணமாக நேற்று (சனிக்கிழமை) சென்னை வந்தார். இந்த பயணத்தின் போது ரூ.67 ஆயிரம் கோடியில் பல்வேறு திட்ட பணிகளை உள்துறை அமைச்சர் அமித்ஷா தொடங்கி வைத்தார்.

பின்னர் தமிழக பா.ஜ.க. மாநில, மாவட்ட நிர்வாகிகளையும், பல்வேறு அணிகளின் தலைவர்களையும் சந்தித்து பேசினார். அதையடுத்து பா.ஜ.க. உயர்மட்ட குழுவினருடன் அமித்ஷா ஆலோசனை நடத்தினார். இந்த சந்திப்பின்போது, எதிர்வரும் தமிழக சட்டசபை தேர்தல் குறித்தும், கூட்டணி குறித்தும் விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிகின்றன.

இந்தநிலையில் தான் தங்கியிருந்த நட்சத்திர விடுதியிலிருந்து காலை 10 மணிக்கு புறப்பட்ட அமித் ஷா, சென்னை விமான நிலையத்திலிருந்து தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு செல்கிறார்.

**ஓ.பி.எஸ்.**

விமான நிலையத்தில் அமித்ஷாவை தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், கே.ஏ. செங்கோட்டையன், பி.தங்கமணி உள்ளிட்ட அமைச்சர்கள் வழி அனுப்பி வைத்தார்கள்.



அரசுமுறை பயணமாக சென்னை வந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இன்று டெல்லி புறப்பட்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சென்னை விமான நிலையத்தில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வழி அனுப்பி வைத்தார்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை, கன்னியாகுமரி மாவட்டம், அருமனை கிறிஸ்துவ சங்கத்தின் செயலாளர் சி.ஸ்டீபன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, அருமனை கிறிஸ்துவ சங்கத்தின் சார்பில் 23.12.2020 நடைபெறவுள்ள கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தனர்.

## எம்.ஜி.ஆர். ஜானகி கல்லூரியில் இன்று

# பலத்த போலீஸ் பாதுகாப்புடன் தமிழ்ப்பட அதிபர்கள் சங்கத் தேர்தல்: விறுவிறுப்பான வாக்குப்பதிவு

### டி.ராஜேந்தர் – முரளி அணி மோதுகிறது

சென்னை, நவ.22–

**பல்வேறு சர்ச்சைகளுக்குப் பிறகு தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத் தேர்தல் சென்னையில் இன்று தொடங்கி பரபரப்பாக நடைபெற்று வருகிறது.**

மாலை 4 மணி வரை நடைபெறும் தேர்தலில் 1,303 பேர் வாக்களிக்க உள்ளனர். வாக்கு எண்ணிக்கை நாளை (23ம் தேதி) காலையில் தொடங்கி முடிவுகள் அறிவிக்கப்படும்.

அடையாறு எம்.ஜி.ஆர். ஜானகி கல்லூரியில் இன்று காலை 8 மணிக்கு பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வாக்குப்பதிவு தொடங்கியது. மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது. நீதியரசர் ஜெயச்சந்திரன் தலைமையில் தேர்தல் நடைபெறுகிறது. இதில் பதிவியில் உள்ள நிர்வாகிகள் யாருமே, தயாரிப்பாளர் சங்கத்தில் போட்டியிடவில்லை. இதனால் இந்த தயாரிப்பாளர் சங்கத் தேர்தலில் பல முன்னணி தயாரிப்பாளர்கள் போட்டியிடவில்லை.

இந்தத் தேர்தலில் தலைவர் பதவிக்கு டி.ராஜேந்தர், ஸ்ரீதேனாண்டாள் பிலிம்ஸ் முரளி அணிக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது. இதுதவிர தலைவர் பதவிக்கு பி.எல்.தேனப்பன் சுயேட்சையாக போட்டியிடுகிறார்.



துணைத் தலைவர் பதவிக்கு கதிரேசன், மதியழகன், முருகன், பி.டி. செல்வகுமார், சிங்காரவடிவேலன், சிவசக்தி பாண்டியன், ஆர்.கே.சுரேஷ் ஆகியோர் போட்டியிடுகிறார்கள். செயலாளர் பதவிக்கு கலைப்புலி ஜி.சேகரன், கோட்டபாடி ராஜேஷ், டி.மன்னன், ஆர்.ராதாகிருஷ்ணன், என்.சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் போட்டியிடுகிறார்கள்.

பொருளாளர் பதவிக்கு சந்திரபிரகாஷ்.எஸ், கே.ராஜன், ஜே.சதீஷ்குமார் ஆகியோர் போட்டியிடுகிறார்கள். இதில் ஜே.சதீஷ்குமார் எந்தவொரு அணியையும் சாராமல் தனியாகப் போட்டியிடுகிறார். மேலும், செயற்குழு உறுப்பினர் பதவிக்கு அனிதா உதீப், அழகன் தமிழ்மணி, பாபு கணேஷ், பெஞ்சமின், சந்திரசேகர், டேவிட் ராஜ், ஏழுமலை, ஆர்.மாதேஷ், மனோபாலா, ப்ரவீன் காந்த், ஏ.எம்.ரத்னம் உள்ளிட்ட 94 பேர் போட்டியிடுகிறார்கள்.

### * பார்க்கின்சன் நோயால் அவதிப்படுகிறார்
### * நடக்க, நீண்ட நேரம் உட்கார சிரமப்படுகிறார்

# ரஷ்ய அதிபர் புதின் உடல்நிலை பற்றிய அதிர்ச்சி தகவல்: மக்கள் வேதனை

மாஸ்கோ, நவ.22–

**ரஷ்ய அதிபர் புதினின் உடல்நிலை குறித்து, அதிர்ச்சிக்குரிய தகவல்கள் வெளியாகி வருவது ரஷ்ய மக்களை பெரும் கலக்கமடையச் செய்துள்ளது.**

"புதின் சமீபகாலமாக பார்க்கின்சன் எனப்படும் மூளையின் ஒருபகுதி சிதைவுக்கு உள்ளாகும் நோயின் பிடியில் சிக்கி தவித்து வருகிறார். இந்த நோயின் காரணமாக வெளியுலகில் முகம் காட்டுவதை அவர் தவிர்த்து வருகிறார். கடந்த சில நாட்களாக கால் மற்றும் கைகளில் கடுமையான வலியால் புதின் அவதிப்படுகிறார்.

இதனால் புதின் அதிபர் பதவியில் இருந்து அடுத்த ஆண்டு விலக திட்டமிட்டு வருகிறார். அவரின் மகள்கள், 37 வயதான காதலியின் அறிவுறுத்தலின்பேரில் அவர் தனது ராஜினாமாவை செய்வார் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் குறித்து சில வாரங்களுக்கு முன், மாஸ்கோவை சேர்ந்த பிரபல அரசியல் விமர்சகரும், மாஸ்கோ ஸ்டேட் இன்ஸ்டிடியூட் ஆப் இன்டர்நேஷனல் ரிலேஷன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான வலேரி சோலோவி தெரிவித்திருந்தார்.

இதே தகவல்களை முன்னணி ஊடகங்களும் வெளியிட்டு இருந்தன. இதற்கேற்ப அண்மையில் அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சியில், நடப்பதற்கு மிகவும் சிரமப்பட்ட புதின், அடிக்கடி இருமி கொண்டிருந்தார். மேலும், நாற்காலியில் அமரும்போது கைகளில் வலி ஏற்பட்டது போல, ஓர் உணர்வுடன் அமர்ந்திருந்த வீடியோ காட்சிகள் வைரலானது.

மேலும் வலேரி சோலோவி, இங்கிலாந்து ஊடகமான 'டெய்லி மெயில்' (Dailymail) பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் புதினுக்கு புற்றுநோய் இருப்பதாக கூறியுள்ளார்.

கிரெம்ளின் மாளிகை மறுப்பு

மேலும் பார்க்கின்சன் நோய் நரம்பியல் மண்டலத்தை பாதித்துள்ளதால், புதின் தற்போது பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதை தவிர்த்து வருவதாகவும் இதனால், பதவி விலக திட்டமிட்டிருக்கும் புதின் தனது இரண்டு மகள்களில் ஒருவரான கேடரினா டிகோனோவாவை அதிபராக்கவும் திட்டமிட்டு வருகிறார்" என்றும் வலேரி சோலோவி பேசியுள்ளார்.

உலகின் சக்திவாய்ந்த தலைவர்களில் ஒருவரான புதின் பதவி விலக உள்ளார் என்ற தகவலை, ரஷ்யாவின் அதிபர் அலுவலகமான கிரெம்ளின் மாளிகை முற்றிலும் மறுத்துள்ளது. ஆனால், அவரின் உடல்நிலை குறித்து பேச மறுத்துவிட்டது. அதனால் என்ன நடக்கிறது என்பது அறியாமல் புலம்பி வருகின்றனர் ரஷ்யர்கள்.

# மிசோரத்திலிருந்து இடம் பெயர்ந்த பழங்குடியினருக்கு எதிர்ப்பு தெரிவித்து திரிபுராவில் நடந்த போராட்டத்தில் வன்முறை: ஒருவர் பலி

அகர்தலா, நவ.22–

**மிசோரம் மாநிலத்திலிருந்து திரிபுராவிற்கு இடம் பெயர்ந்த சுமார் 35 ஆயிரம் பழங்குடியின மக்களுக்கு திரிபுராவில் நிரந்தரமாக தங்குவதற்குவதற்கான மறுவாழ்வு நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டது. இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானதை அடுத்து அகதிகளுக்கான மறுவாழ்வுக்கான பணிகள் தொடங்கி உள்ளன.**

இந்நிலையில், புது அகதிகளுக்கான மறுவாழ்வு நடவடிக்கையை கண்டித்து வடக்கு திரிபுரா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக போராட்டம் நடைபெற்று வருகிறது. நேற்று பன்சி நகரில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் ஏராளமானோர் ஒன்று திரண்டு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டபோது வன்முறை வெடித்தது. போலீசாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி போராட்டக்காரர்களை விரட்டியடித்தனர்.

நீண்ட நேரம் நீடித்த இந்த வன்முறையில் ஒருவர் உயிரிழந்தார். போராட்டம் நடத்திய பொதுமக்கள் தரப்பில் 19 பேர் காயமடைந்தனர். இதுதவிர 4 போலீஸ்காரர்கள், திரிபுரா மாநில ரைபிள் படையைச் சேர்ந்த 3 வீரர்கள், தீயணைப்பு படையின் 8 வீரர்கள் என மொத்தம் 34 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது. உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். பன்சி நகர், கஞ்சன்பூர் பகுதிகளில் தொடர்ந்து பதட்டம் நீடிப்பதால் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# நடுகுப்பம் ஊராட்சியில் சிறப்பு மருத்துவ முகாம்: அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்

ஆரணி, நவ. 22–

ஆரணி அருகே நடுகுப்பம் ஊராட்சியில் தமிழக முதல்வரின் சிறப்பு மருத்துவ முகாமினை அமைச்சர். சேவூர். எஸ். இராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த நடுகுப்பம் கிராமத்தில் சந்தைவாசல் சாலையில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தமிழக முதல்வரின் சிறப்பு மருத்துவ முகாம் மாவட்ட கலெக்டர் சந்தீப்நந்தூரி தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர். எஸ். ராமச்சந்திரன் கலந்து கொண்டு தமிழக முதல்வரின் சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்.

இந்த முகாமில் தனிநபர் ஆரோக்கியத்தை உருவாக்குதல் மற்றும் மக்கள் நல வாழ்வை மேம்படுத்துதல் ஆகியவற்றை குறிக்கோளாக கொண்டு இந்த சிறப்பு மருத்துவ முகாமில் மருத்துவர்கள் மூலம் பொதுமக்களுக்கு கண், பல், காது, மூக்கு, தொண்டை, வயிறு சம்பத்தபட்ட நோய்கள் நீரழிவுநோய், காசநோய், இதயநோய், இரத்த அழுத்த பரிசோதனை, கர்ப்பப்பை



பிரச்சனைகள், பொது மருத்துவம், , புற்றுநோய், போன்றவற்றிற்கான சிறப்பு மருத்துவர்களால் சிறப்பு சிகிச்சை மற்றும் சித்தமருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டது. மேலும் இசிஜி ஸ்கேன், இரத்தபரிசோதனை ஆய்வகம், ஆகியவை முகாமில் அமைக்கப்பட்டு இருந்தது. பொது மக்கள் முககவசம் அணிந்து வந்து சிகிச்சை பெற்றுச் சென்றனர். முகாமில் ஊட்டச்சத்து, மற்றும் மருத்துவதுறை சார்பில் அமைக்கப்பட்டு இருந்த கண்காட்சி அரங்கங்களை அமைச்சர், கலெக்டர் ஆகியோர் பார்வையிட்டனர். அனைவருக்கும் கபசுர குடிநீர் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் இரண்டு பெண் குழந்தைகளுடன் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்த தாயின் இரண்டு பெண் குழந்தைகளுக்கு கிரிடம் வைத்து வாழ்த்து தெரிவித்து ஊட்டச்சத்து கிப்ட் பாக்ஸினை மற்றும் கர்ப்பிணிகளுக்கு அம்மா ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டது.




# சிங்கப்பெருமாள் கோவிலில் சிட்லபாக்கம் ராசேந்திரன் தலைமையில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம்: தேர்தல் பொறுப்பாளர் பா.வளர்மதி பங்கேற்றார்

## ஒன்றிய செயலாளர் எஸ்.கவுஸ்பாஷா ஏற்பாடு

செங்கல்பட்டு, நவ.22–

செங்கல்பட்டு அண்ணா தி.மு.க. மேற்கு மாவட்ட கழகம் சார்பில் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம், காட்டாங்கொளத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ். கவுஸ்பாஷா ஏற்பாட்டின் பேரில், சிங்கப்பெருமாள் கோவிலில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்திற்கு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராசேந்திரன் தலைமை வகித்தார்.

இதில் மண்டல தேர்தல் பொறுப்பாளரும், கழக இலக்கிய அணி செயலாளருமான பா.வளர்மதி கலந்து கொண்டு தேர்தல் வியூகம் குறித்து அண்ணா தி.மு.க.வினருக்கு ஆலோசனைகளை வழங்கினார். அப்போது அவர் கூறியதாவது:

அம்மாவின் நல்லாசியுடன் தமிழக முதல்வரும், துணை முதல்வரும் தன்னுயிரை துச்சமாக நினைத்து இந்த கொரோனா காலத்தில் களத்தில் இறங்கி மக்களின் குறைகளை கேட்டறிந்து நல்ல பல திட்டங்களை வாரி வழங்கி வருகின்றனர்.

அண்ணா தி.மு.க.வின் சாதனைகளை பட்டிதொட்டியெங்கும் பரவச் செய்ய வேண்டும். தொண்டர்கள் ஒற்றுமையுடனும், விசுவாசத்துடன் செயல்பட்டால் நம்முடைய வெற்றியை யாராலும் தடுக்க முடியாது. வருகின்ற சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தில் அனைத்து தொகுதிகளிலும் அண்ணா தி.மு.க. அமோக வெற்றி பெற, முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமியை மீண்டும் முதல்வராக அரியணையில் அமர்த்த அனைவரும் அல்லும் பகலும் அயராது பாடுபட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் ச.கணிதாசம்பத், முன்னாள் எம்.பி. கே.என்.ராமச்சந்திரன், மாவட்ட வழக்கறிஞர் செயலாளர் கே.ஆறுமுகம், காட்டாங்கொளத்தூர் ஒன்றிய செயலாளர் இ.சம்பத்குமார், வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.கஜா என்கிற கஜேந்திரன், செங்கல்பட்டு நகர செயலாளர் வி.ஆர். செந்தில்குமார், மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரணி மாவட்ட தலைவர் எம்.ஜி.கே.கோபிகண்ணன், மறைமலைநகர் நகர இளைஞர் பாசறை தலைவர் ப.பாலா என்கிற பாலமுருகன், காட்டாங்கொளத்தூர் கனி என்கிற கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## உலக மீன்வள தின விழா

# கடலூரில் மீனவர்களுக்கு நிவாரணத் தொகை: கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி வழங்கினார்

கடலூர், நவ. 22–

கடலூர் துறைமுகத்தில் நடைபெற்ற உலக மீன்வள தின விழாவில் கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி மீனவர்களுக்கு நிவாரணத் தொகையை வழங்கினார்.

நவம்பர் 21ம் உலக மீன்வள தினமாக அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு கடலூர் துறைமுகத்தை சுத்தப்படுத்தும் பணியை கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி துவக்கி வைத்து, கடலூர் துறைமுக மீன்பிடி இறங்குதளத்தில் நடைபெற்ற விழாவில், அசாதாரண சுழ்நிலையில் படகு மற்றும் உபகரணங்கள் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தை சோ்ந்த தேவனாம்பட்டினம், சோனங்குப்பம், ரெட்டியார்பேட்டை, சின்னூர் மற்றும் முடசலோடை ஆகிய மீனவ கிராமங்களை சோ்ந்த 5 மீனவர்களுக்கு சுழல்நிதி திட்டத்தின் கீழ் நிவாரணதொகை மொத்தம் ரூ.1,36,888 பயனாளியின் வங்கி கணக்கில் பெறுவதற்கான ஆணையினை வழங்கினார்.

அப்போது அவர் கூறியதாவது:

உலக மீன்வள தினம் கடலூர், பரங்கிப்பேட்டை, அன்னங்கோவில், முடசலோடை மற்றும் லால்பேட்டை ஆகிய இடங்களில்கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கடலூர் மீன்பிடி துறைமுகத்தில் சுத்தம் படுத்தும் பணியை இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு அளிப்பதில் மீன்வளம் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. உலக மக்களின் புரதச்சத்து உணவின் தேவையில் 25 விழுக்காட்டினை மீன் உணவு அளிக்கிறது. 8,118 கி.மீ நீளமுள்ள கடற்கரையினைக் கொண்ட இந்தியாவில் 1,076 கி.மீ. நீளமுள்ள கடற்கரை தமிழ்நாட்டில் உள்ளது. 3.83 இலட்சம் ஹெக்டேர் உள்நாட்டு



நீராதாரங்களும் 56,000 ஹெக்டேர் உவர்நீர் ஆதாரங்களும் தமிழ்நாட்டின் மீன்வளத்திற்கு வலுசேர்க்கும் ஆதாரங்களாய் விளங்குகின்றன. 6,236 ஹெக்டேர் பரப்பில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு குறிப்பாக, இறால் வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு 6.90 லட்சம் டன் மீன் உற்பத்தியுடன் இந்தியாவின் மீன் உற்பத்தியில் 4ஆம் இடத்தை வகிக்கிறது. 2018–19ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த மீன் உற்பத்தி 6.90 லட்சம் டன்கள் ஆகும். 2018–19 ஆம் ஆண்டில் 1.29 லட்சம் டன் கடல் மீன் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூ.5591 கோடி அந்நியச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது. சுமார் 12 லட்சம் மீனவர்கள் தமிழ்நாட்டின் மீன் வள ஆதாரங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் சார்ந்து வாழ்கின்றனர்.

தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களுக்கு சமூகப் பொருளாதார பாதுகாப்பு வழங்குவதையும் மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பெருக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் கொள்கையாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு அக்கொள்கைகளை ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு நமது மீனவர்களை ஊக்குவித்தல் கடலோர மாவட்டங்களில் மீன் பதன தொழிற்சாலைகளை உருவாக்குதல் மற்றும் உலகத்தரம் வாய்ந்த மீன்பிடி கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் இதர பல சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் செயலாக்கம் செய்து வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மீன்வளத்துறை துணை இயக்குநர் காத்தவராயன், உதவி இயக்குநர் (மீன்வளம் ) வேல்முருகன், நகராட்சி ஆணையர் ராமமூர்த்தி, வட்டாட்சியர் பலராமன், மினவ பிரதிநிதிகள் மற்றும் மீனவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## ஏல அறிவிப்பு

Sunitha, 30, Egmore High Road, Egmore, Chennai-8 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2018முதல்30.09.2019முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 04.12.2020 அன்று மாலை 2 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024. என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில், **பா·ப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

K.Parasmal Jain, 306, E.H.Road, Vyasarpadi, Chennai-39 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2018 முதல் 30.06.2019 முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 07.12.2020 அன்று நண்பகல் 12 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024. என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில், **பா·ப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

P.Mohanlal, 169A, Nochi kuppam, 1st Main Street, Mylapore, Chennai-4 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2018முதல்30.06.2019முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 04.12.2020 அன்று நண்பகல் 12 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024. என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில், **பா·ப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

S.Gopal, 13, 5th Street, T.P.Chatram, Chennai-10 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2018முதல்31.10.2019முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 07.12.2020 அன்று மாலை 3 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024. என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில், **பா·ப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

Naveen, 25, Pulla Avenue, Shenoy Nagar, Chennai-30 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2019முதல்30.09.2019முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 04.12.2020 அன்று காலை 11 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024. என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில், **பா·ப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

L.R.Choudhary, 40/66/1B, Trusappa Street, Krishnampet, Chennai-5 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2018 முதல் 31.10.2019 முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 11.12.2020 அன்று காலை 10 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024. என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில், **பா·ப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

Dhanpatraj Ghisulal, 21, Pulla Avenue, Shenoy Nagar, Chennai-30 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2018 முதல் 31.10.2019 முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 04.12.2020 அன்று மாலை 3 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024. என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில், **பா·ப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

G.Darshan Jain, 306, E.H.Road, Vyasarpadi, Chennai-39 என்ற அடகு வணிகர் வசம் நாள் 01.01.2018முதல்31.07.2019முடிய காலஅளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 07.12.2020 அன்று காலை 11 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024. என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில், **பா·ப்னா ஆக்ஷீனியர்ஸ்** ஏலம் போடுவார்

★★★★★★

**VI ASST JUDGE IN THE CITY CIVIL COURT AT CHENNAI**
**O.S.No. 3518 of 2019**

Canara Bank
Rep. by its Senior Manager,
Villivakkam Branch,
Chennai.600049
... Plaintiff

Vs.

M/s. SHAN KAR ORTHO AND SURGICALS, Rep. by its Proprietor Mr.Shankar
... Defendant

To
M/s. SHAN KAR ORTHO AND SUHGICALS, Rep. by its Proprietor Mr.Shankar,
No.15/1, 2 nd Floor,
Sivankoil South Mada Street,
Villivakkam, Chennai.600049.
Residing at No.131,
Redhills Road South,
Villivakkam, Chennai.600049.

Please take notice that in the above Suit, filed by the Plaintiff against the defendant, this Hon'ble VI Asst, Judge, City Civil Court,Chennai was pleased to order service of notice to the defendant by publication returnable by 15/12/2020.

Kindly make yourself convenient to be present before the Hon'ble VI Asst,j udge, City Civil Court on 15/12/2020 at 10.30 a.m. either in person or through your pleader duly instructed, failing which please note that the matter would be heard and decided in your absence.

S.SUNDARAMURTHY
JEYASEELAN
COUNSEL FOR PLAINTIFF

## ENROLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months there after. I, Senthamizhan.G, S/o. Ganesan.P.L. aged 23 years, permanently residing at No.1/A, Niranjan Nagar, Nathamedu (M.S.Royal Gate Near), Thiruninravur - 602024. Thiruvalur (Dt). intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Senthamizhan.G**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, Aarthi.R, D/o. Rajapandian.S, aged 23 years, permanently residing at No.44, Sevalai Road, Opp to Peruratchi Aluvalagam, Tirukovilur, Villupuram Dt –605 757. intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Aarthi.R**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, A.Manigandan, S/o. S.Avoodaiyappan, aged 42 years, permanently residing at No.71, Elango Nagar, Virugambakkam, Chennai – 600 092. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**A.Manigandan**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, M.Laxmipriya, D/o. G.Muthukumar, aged 23 years, permanently residing at No.6, Periyar Nagar, Subam Mahal (St), Kulithalai, Karur Dt – 639 104. intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**M.Laxmipriya**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, S.Poorvika Sankari, D/o. Rajapandian.S, aged 22 years, permanently residing at No.104/18D, Aarthi Theatre Road, YMR Patty, Dindigul – 624 001. intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**S.Poorvika Sankari**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, Vignesh.A, S/o. K.R.Anil Kumar, aged 25 years, permanently residing at F1, Evergreen Flats, 7th Street, Ashtalakshmi Nagar, Mudichur, Chennai – 600 048. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Vignesh.A**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, Marimuthu, S/o. Anbalagan, Date of Birth: 15.05.1990, permanently residing at No.1/72A, Nathakadu, Veeragnaur, Gangavalli Tk, Salem–636 002. intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Marimuthu**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, S. Vijayamoorthy, S/o. Subramaniyan, aged 28 years, permanently residing at No.85, East Street, Ramapuram West, Cuddalore –607003. intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**S. Vijayamoorthy**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, T.Chandrasekaran, S/o. Thiyagarajan, aged 40 years, permanently residing at No.40, Balaji Nagar 19th Street, Puzhuthivakkam, Chennai – 600 091. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**T.Chandrasekaran**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, Asma Sultana, D/o. Afroze Ahmed, aged 23 years, permanently residing at No.65/30, Lal Begum Street, Triplicane, Chennai –600 005. intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Asma Sultana**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, Thraptthi P, D/o. Mr.Perumal C, aged 23 years, permanently residing at No.292/1A, Kilpauk Garden Road, Chennai –600 010. intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Thraptthi P**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, P.Ravishankar, S/o. P.Pandiyarajan, aged 23 years, permanently residing at No.3, North Tank Street, Thirukazhukundranm – 603 109. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**P.Ravishankar**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, M.Deepa, D/o. R.Manivel, aged 22years, permanently residing at No.4, Kanniammal Kovil Street, Kavanoor Village, Chunampet Post, Cheyyur Taluk, Chengalpattu District – 603 401. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**M.Deepa**

**********

After 10 days of the publication of this notice and within three months there after. I, B.Jawahar, S/o.Bigaraj Bakthakumar, aged 26 years, permanently residing at No.3/5, Gurusamy Nagar, 3rd Street, Puliyanthope, Perambur, Chennai –600 012. intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**B.Jawahar**

**சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.**
**பி.இ.சி.ப.வ.எண்: அ6/1186/2019**

கோவிந்தன், த/பெ.சன்னாசி,
அனுமனந்தல் கிராமம்,
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.
...... மனுதாரர்.

அறிவிப்பு;

மனுதாரர் கோவிந்தன் என்கிற நான், எனது தந்தை சன்னாசி என்பவர் சின்னசேலம் வட்டம், அனுமனந்தல் கிராமத்தில் 05/10/1997ல் இறந்தார் என்பதை கவனக் குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால் மேற்படி எனது தந்தை சன்னாசி என்பவரின் இறப்பு சான்று வாரிசு சான்று பட்டா, சிட்டா மாற்றத்திற்கு தேவைப்படுவதால் மேற்படி எனது தந்தை சன்னாசி என்பவரின் இறப்பு சான்று கேட்டு மேற்படி நீதிமன்றத்தில் மனு கொடுத்துள்ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து மூலமோ ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனை களை இந்த விளம்பரம் வெளியான 15 நாட்களுக்குள் தெரிவித்துக் கொள்ள வேண்டும். தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என மேற்படி நீதிமன்றத்தால் ஒரு தலைபட்சமாக சான்று வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

S.கோவிந்தன்,
மனுதாரர்

**சிதம்பரம் சார் ஆட்சியர் நீதிமன்றம்.**
**ந.க.அ7/2938/2020**

குப்புசாமி, த.பெ. முத்துக்குமரன்
மாரியம்மன் கோயில் தெரு,
வடப்பாக்கம் கிராமம்,
ஒடாக்கநல்லூர் அஞ்சல்,
சிதம்பரம் தாலுக்கா,
கடலூர் மாவட்டம். ..மனுதாரர்

எதிர்

வருவாய் வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்
சிதம்பரம் ..எதிர்மனுதாரர்

**பொது அறிவிப்பு**

மனுதாரர் தாயார் திருமதி. தங்காயாள், க.பெ. முத்துக்குமரன் அவர்கள்10.5.2002அன்றுசிதம்பரம் வட்டம், வடப்பாக்கம் கிராமத்தில் வயோதிகம் காரணமாக உடல் நிலை சரியில்லாமல் காலமாகி விட்டார். கடந்த 10.5.2002ல் இறந்துள்ளதை கவனக்குறைவாக பதியாமல் விடப்பட்டு விட்டது. தற்போது மனுதாரருக்கு வாரிசுச் சான்றிதழ் தேவைப்படுவதால் சமூகம் சிதம்பரம் சார் ஆட்சியர் நீதிமன்றத்தில் இறப்பு சான்றிதழ் கோரி மனுதாக்கல் செய்து உள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 (பதினைந்து) தினங்களுக்குள் இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகியோ அல்லது எழுத்து மூலமாகவோ தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால்மனுவில் ஆட்சேபனை ஏதுமில்லை யென பாவித்து ஒருதலைபட்சமாக தீர்மானித்து உத்திரவாகும் என்பதை இவ்வறிவிப்பின் மூலம் அறியவும்.

குப்புசாமி ,
மனுதாரர்.

## ஏல அறிவிப்பு

மூல்சந்த் அன் சன்ஸ், 11/7, யூனெட்டெட் இந்தியா நகர் 2வது மெயின் ரோடு அயனாவரம், சென்னை–23 என்ற விலாசத்தில் உள்ள அடகு கடையில் 14.03.2019 முதல் 31.10.2019 வரை அடகு வைத்து மீட்கப்படாத பொன், பொன் அல்லாத பொருட்கள் நாள் 2.12.2020 அன்று காலை 10 மணிக்குமேல் நெ.40, சச்சிதானந்தம் தெரு, குயப்பேட்டை, சென்னை–12 என்ற விலாசத்தில் **மெஸர்ஸ் கான்காரியா ஆக்ஷினீர்ஸ்** ஏலக் கம்பெனியரால் பெரம்பூர் புரசைவாக்கம் தாசில்தார் (அ) துணை தாசில்தார் முன்னிலையில் பகிரங்கரமாக ஏலம் போடப்படும்.

★★★★★★

B.மகாவீர், எண்.21, வெங்கட ராமன் சாலை, சூளை பள்ளம் எம்.ஜி.ஆர். நகர், சென்னை–78 என்ற விலாசத்தில் உள்ள அடகு கடையில் 9.04.2018 முதல் 3.10.2019 வரை அடகு வைத்து மீட்கப்படாத பொன், பொன் அல்லாத பொருட்கள் நாள் 9.12.2020 அன்று காலை 10 மணிக்குமேல் நெ.40, சச்சிதானந்தம் தெரு, குயப்பேட்டை, சென்னை–12 என்ற விலாசத்தில் **மெஸர்ஸ் கான்காரியா ஆக்ஷினீர்ஸ்** ஏலக் கம்பெனியரால் பெரம்பூர் புரசைவாக்கம் தாசில்தார் (அ) துணை தாசில்தார் முன்னிலையில் பகிரங்கரமாக ஏலம் போடப்படும்.

★★★★★★

B.லாலுராம், எண்.E 32, விசாலாட்சி தோட்டம் மைலாப்பூர், சென்னை–4 என்ற விலாசத்தில் உள்ள அடகு கடையில் 1.03.2017 முதல் 5.8.2019 வரை அடகு வைத்து மீட்கப்படாத பொன், பொன் அல்லாத பொருட்கள் நாள் 10.12.2020 அன்று காலை 10 மணிக்குமேல் நெ.40, சச்சிதானந்தம் தெரு, குயப்பேட்டை, சென்னை–12 என்ற விலாசத்தில் **மெஸர்ஸ் கான்காரியா ஆக்ஷினீர்ஸ்** ஏலக் கம்பெனியரால் பெரம்பூர் புரசைவாக்கம் தாசில்தார் (அ) துணை தாசில்தார் முன்னிலையில் பகிரங்கரமாக ஏலம் போடப்படும்.

★★★★★★

A. ஜெகதீஸ், எண்.161, பால கிருஷ்ணா ரோடு, மைலாப்பூர், சென்னை–4 என்ற விலாசத்தில் உள்ள அடகு கடையில் 9.07.2018 முதல் 3.9.2019 வரை அடகு வைத்து மீட்கப்படாத பொன், பொன் அல்லாத பொருட்கள் நாள் 10.12.2020 அன்று காலை 11 மணிக்குமேல் நெ.40, சச்சிதானந்தம் தெரு, குயப்பேட்டை, சென்னை–12 என்ற விலாசத்தில் **மெஸர்ஸ் கான்காரியா ஆக்ஷினீர்ஸ்** ஏலக் கம்பெனியரால் பெரம்பூர் புரசைவாக்கம் தாசில்தார் (அ) துணை தாசில்தார் முன்னிலையில் பகிரங்கரமாக ஏலம் போடப்படும்.

★★★★★★

B. சுபாஷ் மேனட் 95/47A, மெயின் ரோடு, தாமோதரன் புரம், அடையார், சென்னை–20 என்ற விலாசத்தில் உள்ள அடகு கடையில் 8.01.2018 முதல் 23.10.2019 வரை அடகு வைத்து மீட்கப்படாத பொன், பொன் அல்லாத பொருட்கள் நாள் 11.12.2020 அன்று காலை 10 மணிக்குமேல் நெ.40, சச்சிதானந்தம் தெரு, குயப்பேட்டை, சென்னை–12 என்ற விலாசத்தில் **மெஸர்ஸ் கான்காரியா ஆக்ஷினீர்ஸ்** ஏலக் கம்பெனியரால் பெரம்பூர் புரசைவாக்கம் தாசில்தார் (அ) துணை தாசில்தார் முன்னிலையில் பகிரங்கரமாக ஏலம் போடப்படும்.

★★★★★★

R. சத்திய நாராயணன் 29/10, வி.பி. அகிலன் தெரு, மதியழகன் நகர், சாலிகிராமம், சென்னை–93 என்ற விலாசத்தில் உள்ள அடகு கடையில் 10.02.2019 முதல் 18.10.2019 வரை அடகு வைத்து மீட்கப்படாத பொன், பொன் அல்லாத பொருட்கள் நாள் 11.12.2020 அன்று காலை 11 மணிக்குமேல் நெ.40, சச்சிதானந்தம் தெரு, குயப்பேட்டை, சென்னை–12 என்ற விலாசத்தில் **மெஸர்ஸ் கான்காரியா ஆக்ஷினீர்ஸ்** ஏலக் கம்பெனியரால் பெரம்பூர் புரசைவாக்கம் தாசில்தார் (அ) துணை தாசில்தார் முன்னிலையில் பகிரங்கரமாக ஏலம் போடப்படும்.

★★★★★★

M.S. ஹேமந்த் குமார் மர்லேக்சா, எண்.583,பூந்தமல்லி நெடுஞ்சாலை, அரும்பாக்கம் சென்னை–106 என்ற விலாசத்தில் உள்ள அடகு கடையில் 22.06.2017 முதல் 15.9.2019 வரை அடகு வைத்து மீட்கப்படாத பொன், பொன் அல்லாத பொருட்கள் நாள் 11.12.2020 அன்று பகல் 2 மணிக்குமேல் நெ.40, சச்சிதானந்தம் தெரு, குயப்பேட்டை, சென்னை–12 என்ற விலாசத்தில் **மெஸர்ஸ் கான்காரியா ஆக்ஷினீர்ஸ்** ஏலக் கம்பெனியரால் பெரம்பூர் புரசைவாக்கம் தாசில்தார் (அ) துணை தாசில்தார் முன்னிலையில் பகிரங்கரமாக ஏலம் போடப்படும்.

★★★★★★

L. பீக்காராம், எண்.3, முதல் தெரு, தசரதபுரம் மெயின் ரோடு, சாலிகிராமம், சென்னை–93 என்ற விலாசத்தில் உள்ள அடகு கடையில் 5.06.2019 முதல் 31.10.2019 வரை அடகு வைத்து மீட்கப்படாத பொன், பொன் அல்லாத பொருட்கள் நாள் 11.12.2020 அன்று பகல் 1 மணிக்குமேல் நெ.40, சச்சிதானந்தம் தெரு, குயப்பேட்டை, சென்னை–12 என்ற விலாசத்தில் **மெஸர்ஸ் கான்காரியா ஆக்ஷினீர்ஸ்** ஏலக் கம்பெனியரால் பெரம்பூர் புரசைவாக்கம் தாசில்தார் (அ) துணை தாசில்தார் முன்னிலையில் பகிரங்கரமாக ஏலம் போடப்படும்.

★★★★★★

பிரகாஷ், எண்.21, வெங்கடராமன் சாலை, சூளைபள்ளம், எம்.ஜி.ஆர். நகர், சென்னை–78 என்ற விலாசத்தில் உள்ள அடகு கடையில் 1.04.2018 முதல் 7.10.2019 வரை அடகு வைத்து மீட்கப்படாத பொன், பொன் அல்லாத பொருட்கள் நாள் 17.12.2020 அன்று காலை 10 மணிக்குமேல் நெ.40, சச்சிதானந்தம் தெரு, குயப்பேட்டை, சென்னை–12 என்ற விலாசத்தில் **மெஸர்ஸ் கான்காரியா ஆக்ஷினீர்ஸ்** ஏலக் கம்பெனியரால் பெரம்பூர் புரசைவாக்கம் தாசில்தார் (அ) துணை தாசில்தார் முன்னிலையில் பகிரங்கரமாக ஏலம் போடப்படும்.

★★★★★★

## பொது அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில் சென்னை 600 011, பெரம்பூர், சுப்ரமணிய நகர், சுப்ரமணிய கோவில் தெரு விலாசம் எண், 7/4ல் வசிக்கும் எனது கட்சிக்காரர் திருமதி. R. கமலா, வயது 70, ஆகிய இவர் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தாலுகா, சேக்காடு கிராமம், சோரஞ்சேரி "பி" யில் அடங்கிய டிரைவர்ஸ் காலனி, பழைய புல எண். 157/15 நகர நில அளவை எண்.215, மனை எண். 200 செ.பெ.வ. குழுமத்தால் மறு ஒப்புதல் வழங்கப்பட்ட PPD.A.No.5/91. letter No. L2/12095/91 dated 09.10.1991ன்படி மாவட்ட ஆட்சியரின் அலுவலக நடவடிக்கை எண் 29454/89-B3 நாள் 24.04.1991 மூலம் வட்டாட்சியர், திருபெரும்புதூர் தாலுகா, அவர்களின் பார்வை எண். 12185/86B1, நாள் 26.04.1991 மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மனையின் உரிமைதாரா் ஆவார். இவர் கடந்த 15.10.2020 அன்று ஓ.பி.லைன் முதல் தெரு கணேசபுரம், வியாசர்பாடியில் வாகனத்தில் செல்லும் பொழுது மூல ஒதுக்கீட்டு ஆணையினை தவறவிட்டுவிட்டார். இதனை கண்டெடுப்பவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட என்னுடைய முகவரியில் சமர்ப்பிக்கும் படியோ அல்லது என்னை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்,

**B. SUGANYA**, Advocate,
No 203, Addl. Law Chambers,
High Court Building, Chennai -104
Mobile : 7395971537

## காய்ச்சல் என்ற தகவலில் உண்மை இல்லை

# ரஜினி நலமுடன் இருக்கிறார்: மக்கள் தொடர்பாளர் விளக்கம்

சென்னை, நவ. 22–

நடிகர் ரஜினிகாந்த்துக்கு உடல்நிலை சரியில்லை என்பது வதந்தி என்று அவருடைய மக்கள் தொடர்பாளர் ரியாஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனா ஊரடங்குக்கு முன்னதாக, சிவா இயக்கத்தில், 'அண்ணாத்த' திரைப்படத்தின் படப்பிடிப்பில் ரஜினிகாந்த் கலந்துகொண்டார். இதையடுத்து, கொரோனா ஊரடங்கு காரணமாக படப்பிடிப்புகள் நிறுத்தப்பட்டன. இதையடுத்து, ஊரடங்கில் தளர்வுகள் அளிக்கப்பட்டு படப்பிடிப்புகள் தொடங்கினாலும், 'அண்ணாத்த' திரைப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்படவில்லை.

இதனிடையே ரஜினிகாந்தின் வயது முதிர்வு மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை ஆகியவற்றை காரணம் காட்டி, தற்போது அரசியல் பிரவேசம் கூடாது என மருத்துவர்கள் அறிவுறுத்தியதாக சமூக வலைதளங்களில் ரஜினி பெயரில் ஒரு கடிதம் பரவியது.

இதுகுறித்து விளக்கம் அளித்த ரஜினி, அந்த கடிதம் தான் வெளியிட்டது அல்ல எனவும், எனினும் மருத்துவர்கள் தனக்கு அளித்த அறிவுரைகள் உண்மை எனவும், தெரிவித்திருந்தார். மேலும், ரஜினி மக்கள் மன்ற நிர்வாகிகளோடு கலந்தாலோசித்து தனது அரசியல் நிலைப்பாட்டை தெரிவிப்பேன் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ரஜினிக்கு காய்ச்சல் எனவும், அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருவதாகவும் சமூக வலைதளங்களில் தகவல்கள் உலா வந்தன. இதுகுறித்து, இன்று தனியார் தொலைக்காட்சிக்கு விளக்கமளித்திருக்கும் ரஜினியின் மக்கள் தொடர்பாளர் ரியாஸ், இது யாரோ விஷமிகள் கிளப்பிவிட்ட வதந்தி என தெரிவித்துள்ளார்.

# தருமபுரம் ஆதீனத்திடம் திருநீறு பூசி ஆசிபெற்ற உதயநிதி

## இரட்டை வேடம் போடுகிறார் என இந்து முன்னணி தாக்கு

மயிலாடுதுறை, நவ. 22–

தருமபுரம் ஆதினத்திடம் நெற்றியில் விபூதி பூசி பிரசாதம் பெற்று உதயநிதி ஸ்டாலின் ஆசி பெற்றார்.

தனது பிரச்சாரப் பயணத்தின் வழியில் தருமபுரம் ஆதீனத்திற்கு சென்ற உதயநிதி ஸ்டாலின், அங்கு ஆன்மிக நூல் வெளியீட்டில் கலந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் ஆதினம் கொடுத்த திருநீறும் அணிந்து பயபக்தியுடன் வழிபட்டார்.

தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் 2021 சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரத்தை நேற்று முன்தினம் திருக்குவளையில் தொடங்கினார். நேற்று காலை அக்கரைப்பேட்டை மீன்பிடி துறைமுகத்தில் பிரச்சாரம் செய்தபோது கைது செய்யப்பட்ட அவர் நேற்று மாலை விடுவிக்கப்பட்டார்.

விடுவிக்கப்பட்ட வேகத்தில் மயிலாடுதுறை நோக்கி வந்த உதயநிதி வழியில் உள்ள தருமபுரம் ஆதீன மடத்திற்கு நேற்றிரவு சென்றார். அங்கு அவருக்கு, பொன்னாடையும், சந்தன மாலையும் அணிவித்த தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,



ஆசி கூறி திருநீறு வழங்கினார். அதனை நெற்றியில் பூசிக் கொண்டார் உதயநிதி.ஆன்மிக பேரவையின் சார்பில் 'தமிழ் கடவுள் சேயோன்' என்ற நூல் வெளியீட்டு விழாவும் அங்கு நடைபெற்றது. ஆதீனகர்த்தர் நூலை வெளியிட அதனை உதயநிதி பெற்றுக் கொண்டார்.

முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் மரியாதை செலுத்திய ஸ்டாலின் அங்கு கொடுக்கப்பட்ட விபூதியை கையில் வாங்கி அப்படியே தரையில் கொட்டி கையை துடைத்து கொண்டார். இதற்கு இந்துக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

தி.மு.க. மற்றும் அதன் தோழமை கட்சிகளின் பேச்சுக்கள் – செயல்பாடுகளால் இந்துக்களின் ஓட்டு அவர்களுக்கு எதிராக திசை திரும்பியுள்ளது. இந்த நிலையில் இந்துக்களின் ஓட்டுக்களை பெற இப்போது ஆதினத்திடம் சென்று திருநீறு பூசி ஆசி பெற்றிருக்கிறார் உதயநிதி.

### இரட்டை வேடம்

உதயநிதியின் இத்தகைய போக்கை இந்து முன்னணி தலைவர் காடேஸ்வர சுப்பிரமணியம் ''தி.மு.க.வின் இரட்டை வேடம்'' என்று கண்டித்திருக்கிறார்.

தி.மு.க. தலைவர் ஸ்டாலின் பாணியில் அவரது மகன் உதயநிதியும் மேடையில் உளறியது சமூக வலைதளத்தில் கிண்டலுக்கு ஆளாகியுள்ளது.

தி.மு.க. தலைவர் ஸ்டாலின் அவ்வப்போது மேடைகளில் பேசும்போது கவனக்குறைவால் மாறி மாறி பேசுவது வழக்கம். ஸ்டாலினின் பேச்சுகள் சமூக வலைதளங்களில் 'மீம்ஸ் வீடியோ' வடிவில் கிண்டலுக்கு ஆளாகி வருகிறது. தற்போது ஸ்டாலின் பாணியில் அவரது மகனும் தி.மு.க. இளைஞர் அணி செயலருமான உதயநிதியும் தந்தையை போன்று மாறி மாறி பேச ஆரம்பித்துள்ளார்.

திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் 2 நாட்களாக போலீசாரின் தடையை மீறி அவர் பிரச்சாரம் செய்து வருகிறார். அப்போது ஒரு மேடையில் பேசிய உதயநிதி 'இங்கு கிடைக்கும் வரவேற்பை பார்க்கும்போது ஒன்று மட்டும் நிச்சயம்; 2001ல் தி.மு.க. மிகப்பெரிய வெற்றியை பெறும். தி.மு.க. தலைவர் முதல்வர் ஆவார்' எனக் கூறினார். அடுத்தாண்டு 2021 தேர்தலை 2001 தேர்தல் என உதயநிதி கூறியதை கேட்டு தி.மு.க. தொண்டர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

# காஞ்சீபுரம் ராஜகுபேரர் கோவிலில் டிரம்மர் சிவமணி சாமி தரிசனம்: மூலவர் முன்பு இசை கருவிகளை வாசித்தார்

காஞ்சீபுரம், நவ.22–

காஞ்சீபுரம் ராஜகுபேரர் கோவிலில் இசைக் கலைஞர் டிரம்மர் சிவமணி சாமி தரிசனம் செய்து கோவில் நிறுவனர் சிவஸ்ரீ தேவராஜ குபேர சுவாமிகளிடம் ஆசி பெற்றார்.

சென்னை–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை காஞ்சீபுரம் அருகே குபேரப்பட்டிணத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ ராஜகுபேரர் திருக்கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் வியாழன் மற்றும் பௌர்ணமியன்று குபேரருக்கு தங்க கவசம் அணிவிக்கப்பட்டு, இசை வாத்தியங்களுடன் விசேஷ அபிஷேகம் மற்றும் பூஜைகள் நடைபெறும். உள்ளூர் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து திரளான பக்தர்கள் இக்கோவிலுக்கு வருகை தந்து குபேரரை வழிபட்டு செல்கின்றனர்.

இந்நிலையில், உலக பிரசித்தி



பெற்ற இசை கலைஞர் கலைமாமணி டிரம்மர் சிவமணி, ராஜகுபேரர் கோவிலுக்கு வருகை தந்து, ராஜகுபேரரை மனமுருகி தரிசனம் செய்தார். பிறகு அவர் கோவில் நிறுவனர் தவத்திரு சிவஸ்ரீ தேவராஜ குபேர சுவாமிகளிடம் ஆசி பெற்றார்.

அவருக்கு கோவில் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. பிறகு கோவில் கருவறையில் மூலவர் முன்பு இசை கலைஞர் கலைமாமணி டிரம்மர் சிவமணி பக்தி பரவசத்துடன் சிறிது நேரம் இசை கருவிகளை வாசித்தார்.



விழுப்புரம் சரஸ்வதி பள்ளியில் நடந்த வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தம் சிறப்பு முகாமை நகர செயலாளர் வழக்கறிஞர் பாஸ்கரன் பார்வையிட்டார். நகர கூட்டுறவு வங்கி இயக்குனர் வழக்கறிஞர் செந்தில், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி துணைத் தலைவர் ராம்தாஸ், நகர பேரவை கோல்டு சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அண்ணா தி.மு.க. நிர்வாகிகள் 3 பேர் மறைவுக்கு எடப்பாடி, ஓ.பி.எஸ். இரங்கல்

சென்னை, நவ.22–

அண்ணா தி.மு.க. நிர்வாகிகள் பாப்பிசெட்டிப்பட்டி கு.சிவராஜ், புதுக்கோட்டை எம்.எச்.கலந்தர், பனங்குளம் கு.சி.அடைக்கலம் ஆகியோர் காலமானார்கள்.

இதுசம்பந்தமாக அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதல்வருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முதல்வருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

தருமபுரி மாவட்டம், கடத்தூர் ஒன்றியம், கோபிசெட்டிப்பாளையம் ஊராட்சி, பாப்பிசெட்டிப்பட்டி கிளைச் செயலாளர் கு.சிவராஜ், புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், மணமேல்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த, மாவட்ட ஊராட்சிக்குழு முன்னாள் வார்டு உறுப்பினர் எம்.எச்.கலந்தர், திருவரங்குளம் ஒன்றியம், பனங்குளம் ஊராட்சி முன்னாள் செயலாளர் கு.சி.அடைக்கலம் ஆகியோர் மரணமடைந்து விட்டனர் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றோம்.

அன்புச் சகோதரர்கள் சிவராஜ், கலந்தர் மற்றும் அடைக்கலம் ஆகியோரை இழந்து வாடும் அவர்களது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், மரணமடைந்தோர்களது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கூறியுள்ளனர்.


**PUBLIC NOTICE**

Notice Regarding Lost Certificate(s) of Rajparis Civil Constructions Limited, Registered office : 30, Greams Lane, Chennai – 600 006. I, Senthilnayagam Subbiah, husband of Mrs.S.Muthu Lakshmi (Late) residing at 4/34, Kurinchi Nagar, B-Block, Opposite Ramakrishna Mutt, Aathikulam, Madurai – 625 014, the registered holder(s) of the under mentioned shares held in the above said company, hereby give notice that the share certificate(s) in respect of the said shares have been untraceable and I have applied to the Company for issue of duplicate certificate(s). Any person having claim in respect of the said shares should lodge such claims with the Company at its above referred address within 15 days from this date, else the company will proceed to issue duplicate certificate(s) and no further claim will be entertained by the Company thereafter.

| Folio No. | Cert. No. | Distinctive Nos. | No. of Shares |
|---|---|---|---|
| 1536 | 29148 - 29157 | 2148101 - 2149100 | 1000 |

Date : 21/11/2020
Place : Chennai

Sd/-
Senthilnayagam Subbiah


## பொன்மனச் செல்வன், காவியத் தலைவனான கதை

# ஜெமினி கணேசன்

# “ஜோடியாக நடிச்சோம்... அண்ணனா மதிச்சோம்...!”





தமிழ் சினிமாவின் ஜென்டில்மேன் ஆக்டர் என அழைக்கப்படும் ஜெமினி கணேசனுக்கு இந்தாண்டு 100வது பிறந்த நாள். அவருடன் இணைந்து நடித்த நடிகைகள் தங்களது அனுபவம் குறித்து நம்முடன் பகிர்ந்துகொண்டனர். ஜெமினிக்கு ஜோடியாக நடிச்சோம் நிழலில். ஆனால் “ அண்ணனாகத் தான் மதித்தோம் நிஜத்தில்...''என்று சினிமாவின் பொற்கால நாயகிகள் கே.ஆர்.விஜயா, விஜயகுமாரி, காஞ்சனா, சச்சு ஆகியோர் நெகிழ்ச்சியோடு கூறினார்கள்.

### நெறைய விஷயம் அறிந்தவர்...!

''நான் அதிக படங்களில் ஜெமினிகணேசனுடன் இணைந்து நடித்தது கிடையாது. ஆனால் அவருடன் பழகிய நாட்களை மறக்க முடியாது. ரொம்ப இனிமையானவர். நிறைய விஷயம் அறிந்தவர்.

Hai Ganesh.. உம்மை அடிக்கடி TV யில பாக்கறேன். நல்லா நடிக்கற என்று அவர் பாராட்டியது மட்டும் இன்னும் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

எனது மகள் திருமண reception க்கு அழைத்தேன். Full suit ல வந்தார். நல்ல gift ஒன்றை பரிசளித்தார். மறக்க முடியாத மாபெரும் கலைஞர்''.

– டெல்லிகணேஷ்

"வஞ்சிக்கோட்டை வாலிபன்" படத்தில் ஜெமினிக்கு தங்கையாக நடித்தேன். இதே படம் இந்தியில் எடுக்கப்பட்டது. அதில் நடிக்க வாசன் கேட்டார். எனக்கு இந்தி தெரியாது என்பதால் நான் மறுத்துவிட்டேன். நான் இந்தி சொல்லிக்கொடுக்கிறேன் தங்கச்சி. நீ நடிக்க ஒத்துக்கொள் என்றார் ஜெமினி. அவர் தான் இந்தி சொல்லிக்கொடுத்து என்னை அந்த படத்தில் நடிக்க வைத்தார்.

“வஞ்சிக்கோட்டை வாலிபன்” படத்தில் மேட்டில் இருந்து பள்ளத்தில் உருண்டு விழுந்து இறப்பது போல் என் கேரக்டர் இருந்தது. அந்த பள்ளம் 15 அடி இருக்கும்.

தங்கச்சி பாரு... நான் உருண்டு காட்றேன் என்று சொல்லி... ஜெமினி அதில் உருண்டு நடித்து காண்பித்தார்.



பயமில்லாம கண்ணமூடிட்டு உருண்டு நடிச்சிரு தங்கச்சி என்றார்.

வஞ்சிக்கோட்டை வாலிபன் ஷூட்டிங்கின் போது சாப்பிடுவதற்கு எனது அப்பா நான்வெஜ் வாங்கி வந்து காரில் வைத்திருப்பார். இவர் சத்தமில்லாமல் போய் சாப்பிட்டு விட்டு வந்துவிடுவார். ஹாய்...! தங்கச்சி சாப்பாடு நல்லாயிருந்தது. அப்பா வாங்கி வந்ததெல்லாம் நான் சாப்பிட்டு விட்டேன் என்பார்.

### “லேடீஸ்” மாதிரி நடிக்கிறீங்க...

நாங்கள் அழுகிற சீன்களுக்காக கிளிசரின் போட்டுக்கொள்வோம். அவர் கிளிசரின் இல்லாமலேயே அழுது விடுவார்.

என்ன அண்ணா நீங்க பாடல்களில் லேடீஸ் மாதிரி நடிக்கிறீங்க என்று கேட்பேன். ஏய் ...சும்மா இரு... என்று சொல்லி சிரித்து விட்டு போய்விடுவார்.

திருமண நிகழ்ச்சி ஒன்றில் நாகேஷை அழைத்து, “டேய் நாகேஷ்... இங்க வாடா... உலகத்தில தங்கச்சியே இல்லன்னு சொல்லுவியே; ஏன் தங்கச்சிய பாருடா என்று சொல்லி...” என் ஜடையை பிடித்து இழுத்து காண்பித்து சந்தோசப்பட்டார்.

"கல்யாண பரிசு" ஷூட்டிங்கின் போது சாவித்திரி அண்ணி மாலை நேரத்தில் எல்லோருக்கும் பலகாரம் கொண்டு வருவார். தலைநிறைய ஜாதிப்பூ வச்சுக்கிட்டு வைர நெக்லஸ் டாலடிக்க காரில் வந்திறங்குவார். படப்பிடிப்பு தளமே மணக்கும்.

“கற்பகம்” படத்தில் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் முதலில் என்னைத்தான் நடிக்க அழைத்தார். என் கணவர் அதற்கு அனுமதிக்கவில்லை.

அதனால் நீங்கள் விஜயாவை அனுப்பவில்லை என்றால்... நான் இன்னொரு விஜயாவை கொண்டு வருகிறேன் என்று சொல்லி கே.ஆர். விஜயாவை அந்த படத்தில் நடிக்க வைத்தார்.

தங்கச்சி உன்ன மத்தவங்க ஏமாத்திட்டாங்கம்மா. சாவித்திரி தன்னை தானே ஏமாத்திகிட்டா என்று சொல்லுவார்.

பேர்சொல்ல ஒரு பிள்ளை வேண்டும் என்பார்கள். அது போலத்தான் ஜெமினிக்கு கமலா செல்வராஜ். அப்பாவின் பெயரையும் புகழையும் நிலைநாட்டி வருகிறார் என்றார் விஜயகுமாரி.





"இயற்கை எனும் இளைய கன்னி...": காஞ்சனா

ஜெமினி உடனான திரைப்பயணம் குறித்து நடிகை காஞ்சனா கூறுகையில், எனது பள்ளிக்காலம் முதலே ஜெமினியை தெரியும். “பாமாவிஜயம்” ஷூட்டிங்கின் போது தான் சாந்திநிலையத்தில் நடிக்கும் வாய்ப்பு வந்தது. "சவுண்ட் ஆப் மியூசிக்" என்ற படத்தின் தழுவல் தான் சாந்திநிலையம். ஊட்டி தமிழகம் ஹவுசில் தான் ஷூட்டிங். எங்களுக்கு முதல் ஷாட்டே நானும் அவரும் சண்டை போடும் சீன் தான். அவருடன் நடிக்கும் போது பயப்பட தேவையில்லை. ஜெமினியுடன் நடிக்கும் போது நடிகைகளுக்கு கம்பர்டபிளாக இருக்கும். எம்ஜிஆர் சிவாஜி என இரு பெரும் துருவங்கள் மத்தியில் தானும் இருக்கிறேன் என்று சாதித்து காட்டி "அவ்வை சண்முகி" வரை நிலைத்து நின்று உள்ளார் ஜெமினி.



“அத்தைமடி மெத்தையடி ...” : கே.ஆர்.விஜயா

நான் “கற்பகம்” படத்தில் நடிப்பதற்கு முன்பே ஜெமினியை சந்தித்து இருக்கிறேன். எனது நிகழ்ச்சி ஒன்றுக்கு அவர் தலைமை தாங்கினார். அப்போது அவர் என்னைப் பார்த்து... இந்த பொண்ணு ரொம்ப அழகா இருக்கிறா...! பெரிய ஹீரோயினா வருவார் என்று வாழ்த்தினார். அது முடிந்து ஒன்றரை வருடத்தில் எதிர்பார்க்காமல் எனக்கு சினிமா வாய்ப்பு கிடைத்தது . நான் சினிமாவுக்கு வரும் போது ஜெமினியும் சாவித்திரியும் பெரிய நடிகர்கள். “கற்பகம்” படத்தில் நான் புதிய நடிகர் என்றாலும் அவர்கள் சாதாரணமாகத்தான் நடந்து கொண்டார்கள்.

ஒரு தடவை அவரை வைத்து படம் எடுக்கும் தயாரிப்பாளர்கள் தொடர்ந்து அவரை புக் செய்வார்கள். தயாரிப்பாளர்கள் கஷ்டநஷ்டத்தை அறிந்து நடந்து கொள்வார். அவர் உதவி செய்வது வெளியில் யாருக்கும் தெரியாது. நான் வரும்போதே காதல் மன்னன் பட்டத்துடன் பெரிய நடிகராக இருந்தார். நிறைய படங்கள் அவருடன் நடித்து இருக்கிறேன். அவருடன் இணைந்து நடிக்க எந்த கஷ்டமும் படவில்லை. எனது கணவரை பார்க்க வீட்டுக்கு வந்திருந்தார். சாவித்ரி உடம்பு சரியில்லாத நேரம் அது. சாவித்ரியம்மா எப்படி இருக்காங்க... ஹாஸ்பிடல் வந்து பார்க்கட்டுமா என்று கேட்டதற்கு .. வேண்டாமா அவ ரொம்ப முடியாம இருக்கிறா என்றார். தங்கையிடம் பேசுவதுபோல் என்னிடம் சகஜமாக பேசிவிட்டு சென்றார். “சரஸ்வதிசபதம்” படத்தில் சிவாஜி, ஜெமினி, நான் என மூன்று பேரும் மாற்றி மாற்றி டயலாக் சொல்லி பார்த்துக்கொள்வோம். இப்போது நினைத்து பார்த்தால் “ட்ரீம்” போல இருக்கிறது.



“கார் ஓட்டுவதில் மன்னன்...”: சச்சு

ஸ்டேஜ் டிராமா செய்யாமல் நேரடியாக நடிக்க வந்தவர் நடிகர் ஜெமினி. “ஐந்து லட்சம்” என்ற படத்தில் அவருக்கு தங்கையாக நடித்து இருக்கிறேன். ஜெமினி நிறுவனம் தயாரித்த, “அவ்வையார்” படத்தில் நான் சிறுவயதில் நடித்து இருக்கிறேன். முதலில் நான் பார்த்தது ஜெமினியைதான். அவர் அறைக்கு தான் முதலில் எங்களை அழைத்து போனார்கள். என்னை பார்த்து சுட்டிகையா இருக்கா என்று சொல்லி என்னை செலக்ட் செய்தார். “ஜெமினி மாமா” என்று தான் அழைப்பேன். மயிலாப்பூர் வரும்போது எங்கள் வீட்டுக்கு வருவார். அப்போது போர்டு காரில் வருவார். சாக்லேட், ஐஸ்க்ரீம் வாங்கி கொடுங்க என்று அவரை தொந்தரவு செய்வேன். என் தொந்தரவு தாங்கமுடியாமல் நான் கேட்டதெல்லாம் வாங்கி கொடுத்து விடுவார். சினிமா துறையில் சிவாஜி, எம்ஜிஆர், ஜெமினி மூவேந்தர்கள். அதில் ஜெமினி தனி “ட்ராக்”. திரைத்துறையில் “காதல் மன்னன்” என்ற டைட்டில் வேறு யாருக்கும் பொருந்தாது. எத்தனை பெரிய அழகான மனிதர் என்றாலும் கூட....

ஒரு சில படங்களில் சாவித்ரி கேரக்டருக்கு முக்கியத்துவம் அதிகம் இருந்தாலும், ஜெமினி ஈகோ இல்லாமல் நடித்தார். கதாநாயகிகளுக்கு படத்தில் முக்கியத்துவம் இருந்தாலும் ஜெமினி அதில் நடிப்பார். இரண்டு ஹீரோ சப்ஜெக்டை கூட அவர் தனி டைப்பாக மாற்றிக்கொண்டார்.

சிவாஜி, எம்ஜிஆர் இருவரும் ஜெமினியை “மாப்ளே” என்று தான் கூப்பிடுவார்கள். செட்டுக்குள் வந்த உடன் எல்லோருக்கும் “ஹாய்” சொல்லுவார். அதற்கு பிறகு ஜெய்சங்கர் அதனை பாளோப் செய்தார்.

மைசூர் பிரிமியர் ஸ்டுடியோவில் “நான் அவன் இல்லை” படம் ஷூட்டிங். அதில் ஜெமினி நடிக்கிறார். எனக்கும் அதே ஸ்டுடியோவில் ஷூட்டிங். நாங்கள் தங்கியிருந்த ஓட்டலுக்கு கம்பெனியில் இருந்து கார் வந்தது. அவருக்கு வந்த காரில் டிரைவரை வேண்டாம் என்று கூறிவிட்டு, அவரே காரை ஓட்டினார்.

அப்போது, ஏய் ச்சசு இங்க வாடி... என்றார். என்ன என்றேன்.

என்னோட காரில் வாடி.... என்றார்.

மாமி நீங்களும் வாங்கோ... என்று என் அம்மாவையும் ஏற்றிக்கொண்டார்.

முன்னாடி சீட்டில் அவருடன் உட்கார்ந்து கொண்டேன். குதிரை கால்களை தூக்குவது போல் கார் முன்னாடி சக்கரங்கள் எல்லாம் மேலே தூக்கிவிட்டது. அந்த அளவுக்கு காரை வேகமாக ஓட்டினார். என் அம்மா இப்படியெல்லாம் வண்டி ஓட்டக்கூடாது உனக்கு குடும்பம் இருக்கிறதப்பா என்று அறிவுரை கூறினார்.

மாமி பயப்படாதீங்கோ... “என் ட்ரைவிங் ரொம்ப ஸ்டராங்” என்று சொல்லி சிரிப்பார்.

அவர் உடல்நிலை சரியில்லாத நேரத்தில் அவரை போய் பார்த்தேன். காதல் மன்னன்னா... உங்கள அடிச்சுக்க ஆளே இல்லே என்றேன். கண்களில் ஓரமாக கண்ணீர் கசிந்தது. காதல் ஆவது... மன்னனாவது உடம்பு சரியில்லடி என்றார். அவரை போல் நல்ல மனிதரை காண்பது அரிது.

– ஷீலா பாலசந்திரன்




Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, 1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai 600024 on behalf of M/s. Newsmen Associates Limited.
நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733900, 24733910, E–mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு: 24734700, பேக்ஸ்: 24732700, 24735700 இமெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல்